# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 32

சுடர் 33 கதிர் 262 ஆடி 30ஆம் நாள் புதன்கிழமை 15 ஒகஸ்ட் 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## நல்லூர் கந்தனுக்கு நாளை கொடி

யாழ்ப்பாணம், ஓக.15
வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லைக் கந்தன் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை கொடி >> 29

## வாடிகளை எரித்த சந்தேகத்தில் தெற்கைச் சேர்ந்த மூவர் கைது

முல்லைத்தீவு, ஓக. 15
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றில் தமிழ் மீனவர்களின் வாடிகளை எரித்தனர் என்ற சந்தேகத்தில், தென்னிலங்கையைச் சேர்ந்த 3பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயற்றுக் கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள், இயந்திரங்கள், வலைகள், மீனவர்களின் வாடிகள் என்பன நேற்றுமுன்தினம் இரவு எரித்துச் சாம்பராக்கப்பட்டன.
இந்தச் சம்பவத்தால் தமிழ், சிங்கள இன ரீதியான முறுகல் தோன்றும் சூழல் ஏற்பட்டிருந்தது. பொலிஸார், இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் அங்கு சென்று நிலமைகளை ஆராய்ந்திருந்தனர்.
பாதிக்கப்பட்ட மீனவர்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். நாயாற்றுப் பகுதிக் >> 28



ரவிராஜ் கொலை, 11 மாணவர்கள் கடத்தல் வழக்குகளின் முதன்மைச் சந்தேகநபர்

# நேவி சம்பத் கைது!

## மாறுவேடத்திலிருந்தபோது மடக்கிப் பிடித்தனர் பொலிஸார்

கொழும்பு, ஓகஸ்ட் 15
கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 2008ஆம் ஆண்டு 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை மூடுந்தில் (வானில்) கடத்திச் சென்று, சட்ட விரோதமாகத் தடுத்து வைத்து, கப்பம் பெற்றமை மற்றும் காணாமல் ஆக்கியமை தொடர்பில் தேடப்பட்டு வந்த முதன்மைச் சந்தேகநபரான நேவி சம்பத் எனப்படும் கடற்படைப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் லெப்டினன் கொமாண்டர் ஹெட்டி ஆராய்ச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டி ஆராய்ச்சி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். >> 29

## நாயாற்றில் வாடிகள் எரிப்பு: கவனமெடுக்கிறார் மைத்திரி

கொழும்பு, ஓக. 15
முல்லைத்தீவில் தென்பகுதி மீனவர்களுக்கும் உள்ளூர் மீனவர்களுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு நிலமை தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார். எதிர்வரும் 22ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குப் பய >> 29

## மடுத் தலத்தின் திருவிழா இன்று

### 6 லட்சம் பேர் திரண்டுள்ளனர்

மன்னார், ஓக. 15
மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆவணி மாதத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 6.30 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்படும் என்று திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியான்ஸ் >> 29

## குடாநாட்டில் திடீரென கொட்டித் தீர்த்த மழை

### பொன்னாலையில் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்ப்பாணக் குடாநாட்டில் நேற்று மாலை திடீரெனக் கடுங்காற்றுடன் மழை பெய்தது. கடும் வெப்பமான காலநிலை இதுவரை நிலவிவந்த >> 29

## திலீபனின் நினைவுத் தூபிக்கு வேலியமைத்தோருக்கு மிரட்டல்

யாழ்ப்பாணம், ஓக. 15
நல்லூர் ஆலயப் பின்வீதியில் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத் தூபியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் பணியாளர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர் என்று >> 28

## அரச பணியாளர்களின் சம்பள மாற்றம் ஆராய்வதற்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஓக. 15
அரச பணியாளர்களின் சம்பளம் மற்றும் படிகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான ஆணைக்குழுவை நியமிக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
இது தொடர்பில் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.
அரச பணியாளர்களின் அடிப்படைச் சம்பளம் மற்றும் மேலதிகப் படிகளை சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார்.
அதனை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க சிறப்பு சம்பள ஆணைக்குழுவை நியமிக்க நிதி அமைச்சர் அமைச்சரவை >> 28



## கிளிநொச்சிக்கு ரணில் நேற்றுத் திடீர் வருகை

கிளிநொச்சி, ஓக. 15
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கிளிநொச்சிக்கு நேற்று மாலை 7 மணியளவில் திடீர் பயணம் மேற்கொண்டார். >> 29

## தடயங்கள் சிக்கவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 15
500 ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கியது என்று கூறப்படும் சீனக் கப்பலைத் தேடி அல்லைப்பிட்டியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளில் முக்கிய தடயங்கள் எவையும் கண்டு பிடிக்கப்படவில்லை >> 29



## பருத்தித்துறைத் துறைமுகத்தில் கோட்டையைத் தேடி ஆராய்ச்சி!

### தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்தது

யாழ்ப்பாணம், ஓக. 15
யாழ்ப்பாணம் - பருத்தித்துறைத் துறைமுகத்தில் காணப்படும் ஒல்லாந்தர் காலத்துக் கோட்டையை அடையாளப்படுத்தி புராதன தொல்லியல் ஆதாரங்களை மீட்கும் அகழ்வராச்சிகளைத் தொல்லியல் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.
பருத்தித்துறைத் துறைமுகமானது ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மீன்பிடி அமைச்சால் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.
போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்திலும் இந்தத் துறைமுகம் பயன்பாட்டிலிருந்தது. அவர்களின் ஆட்சிக்கு முற்பட்ட மன்னர் ஆட்சிக் காலத்திலும் அந்தத் துறைமுகம் பயன்படுத்தப்பட்டதாக வரலாற்று >> 28

## கீத் நொயார் விவகாரத்தில் மகிந்தவிடம் வாக்குமூலம்!

கொழும்பு, ஓக. 15
த நேசன் பத்திரிகையின் இணை ஆசிரியர் கீத் நொயார் கடத்தப்பட்டு சட்ட விரோதமாகத் தடுத்து வைக்கப்பட்டமை, சித்திரவதை செய்யப்பட்டமை, ஆயுதத்தால் தாக்கப்பட்டமை, கொலை செய்யப்பட முயற்சிக்கப்பட்டமை மற்றும் நொயார் குடும்பத்தினருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை என்பவை தொடர்பில் தகவல்களை >> 29

## உந்துருளி மோதியதில் பெண் பரிதாபச் சாவு

### வவுனியாவில் சோகம்

வவுனியா, ஓக. 15
வவுனியா சிதம்பரபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆசிகுளத்தில் நேற்று மாலை 3 மணிக்கு இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.
ஆசிகுளத்தைச் சேர்ந்த கற்பகம் (வயது-78) என்பவரே உயிரிழந்துள்ளார். >> 29




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுமாப்பும், அகந்தையுமே அரசியல் பின்னடைவுக்கு காரணம்

## தமிழ்த் தலைமைகளைச் சாடுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஓக.15

இலங்கைசுதந்திரம்பெற்றதினத்தில்இருந்து இன்றுவரைஎமதுதமிழ்த்தலைவர்களின்தூரநோக்கற்ற சிந்தனைகளும், இறுமாப்புத்தன்மையும், அகந்தையும், சமூகவேறுபாட்டுக்கொள்கைகளும்மற்றும் இன்னோரன்னகாரணிகளாளேயே நாம் தொடர்ச்சியாக அரசியல் பின்னடைவுகளைச் சந்திப்பதற்கான ஏதுக்களாக இருந்துவந்துள்ளன. இந்தநிலையில்நாம்எமது இருப்புக்களை உறுதிசெய்துஎம்மீதுதிணிக்கப்படுகின்ற அரசியல் அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து எமது மக்களைப் பாதுகாக்கவேண்டுமாயின் அதற்குரிய கல்வி நிலையை நாம் பெற்றுக் கொள்ள முனைப்புடன் செயலாற்றவேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் நேற்று இடம்பெற்றநிகழ்வொன்றில்கலந்துகொண்டு உரையாற்றும்போதேஅவர்இதனைத் தெரிவித்தார் என்று முதலமைசசரின் ஊடகப்பிரிவு அனுப்பிய செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:

30ஆண்டுகளுக்குமேலாகநடைபெற்ற போரின் காரணமாக எமது பிரதேசத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கல்விநிலையில்பின்தள்ளப்பட்டனர், அவர்களின் குடும்பங்களும் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகினர். வீடு, வாசல் சொத்துக்களை இழந்துதொழில் முயற்சிகளின்றிஅல்லற்பட்டுக்கொண்டிருந்த சூழ்நிலையில் அவர்களுக்கான விரைந்த உதவிகள் நேரடியானஉறவுகளின்மூலமாகவும்புலம்பெயர்அமைப்புக்களின் ஊடாகவும் வழங்கப்பட்டன. அந்த உதவிகள் அவர்களின் அன்றாட வாழ்க்கைச்செலவுகளைஈடுகொடுக்கக் கூடிய அளவில்தான் அமைந்துள்ளன. அத்துடன் இவ்வாறானஉதவிகள் நீண்டகாலத்திற்குத்தொடர்ந்துவழங்கப்படமுடியாதவை. அத்துடன்இவ்வாறானஉதவிகளைவெளிநாடுகளில் இருந்துஎமதுபுலம்பெயர் உறவுகள் தொடர்ந்து வழங்கிவருகின்றபோதும் இங்கிருக்கும் அதன் பயனாளிகள் சுயமாகபொருள் தேடும் தொழில் முயற்சியை முழுமையாகக் கைவிட்டு எந்த நேரமும்மற்றையவர்களின்கைகளை எதிர்பார்க்கின்றஒருசூழ்நிலைக்குத்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இதுவருந்தத்தக்கசெயல்.

இவ்வாறானஒருசமூகஅமைப்பைஉருவாக்குவதுபொருத்தமற்றது. எனவே தான் எமது மக்களுக்கு வழங்குகின்ற உதவிகள் அவர்களின் முயற்சியுடன் ஏதாவதொருவகையில் அவர்கள் பொருள்தேட்டங்களைமேற்கொள்ளக் கூடிய ஒருமூலதனமாகஅல்லதுநிரந்தரதொழில்வாய்ப்பைப்பெறக்கூடியதாக அமைவதற்கு மக்களிற்கு ஏற்றவகையில் அவைவழங்கப்படல் வேண்டும்.

அன்றைய மாணவர்கள் குருகுலக் கல்விமுறையின் கீழ் தமதுகல்விஅறிவுகளை கல்வியில் மேம்பட்ட ஆசிரியர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்கள். அன்றைய ஆசிரியர்களும் கற்பித்தல் சேவையை கடவுளுக்கு ஒப்பான சேவையாகவே கருதிச் செயற்பட்டுவந்தார்கள்.

இன்று மாணவர்களிடம் கீழ்ப்படியுந்தன்மை அருகிவருகின்றது. அத்துடன் ஆசிரியர்களுந்தமதுகற்பித்தல்கடமைகளை ஒருபொழுது போக்குக் கடமையாகமேற்கொண்டிருப்பதுவேதனைஅளிக்கின்றது. இந்த நிலைமைகள் விரைந்து சீர்செய்ய ப்படவேண்டியுள்ளன. ஆசிரியர்களின் கைகளில் பணப்புழக்க நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டபின்னர் பெரும்பாலானஆசிரியர்கள் ஆசிரியர்களாக இல்லாமல் கொந்தராத்து முகவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். எந்தநேரமும் கட்டட வேலை, விழாக்கொண்டாட்டமுன்னெடுப்புக்கள் எனஅவர்களின் நேரங்கள் கற்பித்தல் தவிர்ந்த ஏனைய கடமைகளில் வீணடிக்கப்படுகின்றன. பிரத்தியேகக் கல்வி நிலையங்களில் சிறப்பாகச்செயற்படுகின்றஆசிரியர்கள் அதேமுனைப்புடன் பாடசாலைகளில் செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பொதுமக்களிடமிருந்துஎழுவதைநாம் பலதடவைகளில் அவதானித்திருக்கின்றோம். அதேபோன்று மருத்துவ நிபுணர்களும்அரசமருத்துவநிலையங்களில் மருத்துவக் கடமைகளில் ஈடுபடுவதற்குப்பதிலாகபிரத்தியேகநிலையங்களை நோக்கியே ஓடுகின்றார்கள்.

தினம் தினம் பத்திரிகைகள் தாங்கி வருகின்றசெய்திகள் எம்மைத் திகைக்க வைக்கின்றன. ஒருகாலத்தில் முழு இலங்கைக்கும் முன்மாதிரியாக, எடுத்துக்காட்டாகவிளங்கியவடபகுதிஇன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது வேதனைக்குரியது. இவற்றையெல்லாம்சீர்செய்யல்திரமானஒருஅரசியல் அமைப்பும் அதைத் தயாரிக்க மக்கள் பங்களிப்பும் அவசியமானவை. அதற்கான வழிமுறைகளை நாம் அனைவரும் இணைந்துகொண்டு முன்னெடுக்கவேண்டும் என்றார் என்றுள்ளது. (21)

முதல்வர் விக்கி கோரினால்

## பதவியைத் துறக்க அனந்தி தயாராம்

யாழ்ப்பாணம், ஓக. 15

முதலமைச்சர் பதவி விலகுமாறு கோரினால் நான் பதவி விலகுவதற்குத் தயாராகவே உள்ளேன் என்று வடக்கு மாகாண மகளிர் விவகாரஅமைச்சர்அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் அனந்தி இவ்வாறு கூறினார்

சந்திப்பின்போது, வடக்கு மாகாண அமைச்சரவையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையைப்போக்கமாகாணசபையின் அனைத்து அமைச்சர்களும ஏன் பதவி விலகுவதற்கு முயற்சிக்கவில்லை என்று ஊடகவியலாளர்கள் அனந்தியிடம்கேள்வியெழுப்பினர்.

பதிலளித்த அவர் வடக்கு மாகாண ஆளுநர் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது வடக்கு மாகாண அமைச்சரவையின் குழப்ப நிலையைப் போக்க மாகாண அமைச்சர்கள் பதவிவிலக வேண்டும் என்று தெரிவித்திருந்தார். ஊடகங்கள்வாயிலாக இதை நாள் அறிந்தேன். ஆனால் இது தொடர்பில் எமக்கு எழுத்து மூலமாகக் கோரப்படவில்லை. அவ்வாறு ஆளுநர் எழுத்து மூலமாகக் கோரிக்கை விடுத்தால் நான் அதனைப் பரிசீலிக்கத் தயாராக உள்ளேன். நான் விரும்பி மாகாணசபையில்அமைச்சராகவரவில்லை. எனவே வடக்கு மாகாண முதல்வர் என்னைப் பதவி விலகக் கோரினாலும்நான்விலகத் தயாராகவே உள்ளேன். என்றார். (21,8)



## முல்லை.நாயாற்று மீனவருக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

முல்லைத்தீவு, ஓக 15

முல்லைத்தீவு, நாயாற்றில் தீயில் எரிந்த வாடிகளின் உரிமையாளர்களான தமிழ் மீனவர்களுக்கு செஞ்சிலுவைச்சங்கம்அவசர உதவிகளை நேற்று வழங்கியது.

முல்லைத்தீவு நாயாற்றுக் கடற்கரையில்நேற்றுமுன் தினம் இரவு தமிழ்மீனவர்களின் எட்டு வாடிகள் எரிக்கப்பட்டன. வாடிகளில் இருந்த வலைகள், இயந்திரங்கள் மற்றும் அங்கு [illegible] களும்அந்தத்தீயில்எரிந்து நாசமாகின. இதனால் 50 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டஇழப்புமீனவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது.

சம்பவத்தைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்களுக்கு அவசர உதவிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்ட கிளையினர், இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (21,222,ரி3)

## வாடிகளுக்குத் தீ: பின்னணியில் அரசு

வடக்கு அமைச்சர் அனந்தி சந்தேகம்



யாழ்ப்பாணம், ஓக.15

முல்லைத்தீவு, நாயாற்றுக் கடற்கரையோரத்தில் உள்ள வாடிகள், படகுகள் தீ வைக்கப்பட்டமைக்கு பின்னணியில் கூட்டரசு இருக்கலாம்என்றுவடக்குமாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் சந்தேகம்வெளியிட்டுள்ளார்.

வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாயாற்றுக் கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள், அவற்றின் இயந்திரங்கள், அங்குள்ள வாடிகளுக்கு நேற்றுமுன்தினம் இரவு இனம் தெரியாத நபர்களால் தீ வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கண்டிக்கத்தக்க விடயம். முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடியைத் தடுத்து நிறுத்தக் கோரி அங்குள்ள மீனவர்கள் அண்மையில் தொடர்போராட்டத்தை நடத்தியிருந்தனர். இந்தப் போராட்டத்தின் விளைவாக கொழும்பு மீன்பிடி அமைச்சர் கடந்த சில தினத்துக்கு முன்னர் முல்லைத்தீவுக்கு நேரடியாக வந்தார். அவர் வந்து ஓரிரு நாள்களிலேயே உள்ளூர் மீனவர்களின் படகுகள் தீயிட்டுளிக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஒரு அமைச்சர் வந்து ஒரு சில நாள்களிலேயே இடம் பெற்றுள்ளதால் இதற்கும் கூட்டுஅரசுக்கும்இடையில் தொடர்புள்ளது என எண்ணத்தோன்றுகிறது. அரசு தான் இதன் பின்னனியில் உள்ளது எனச் சந்தேகம் உருவாகியுள்ளது. யாழ்ப்பாணம் வடமராட்சியில் அண்மையில்சட்டவிரோத மீன்பிடிக்கு எதிராக முன்னின்றுபோராடிய இரண்டு மீனவர்களின் படகுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. அந்தச் சம்பவத்துக்கு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால் முல்லைத்தீவில் இந்த விளைவு ஏற்பட்டிருக்காது என்றார். (21,8)

வாடி எரிப்பு விவகாரத்தில்

## பொலிஸின் நடவடிக்கை சந்தேகத்தை எழுப்புகின்து

முல்லைத்தீவு, ஓக. 15

முல்லைத்தீவு, நாயாற்று மீனவர்களுடைய வாடிகள் எரிக்கப்பட்டு அவர்களுடைய வாழ்வாதாரமே அழிக்கப்பட்டது தொடர்பில் பொலிஸார் ஆரம்பகட்ட விசாரணைகளையே முன்னெடுக்காதது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றுநாடாளுமன்றஉறுப்பினர்சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில்நேற்றுமுன்தினம் இரவு தீயிட்டு எரித்து நாசம் செய்யப்பட்ட தமிழ் மீனவர்களின் வடிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்றுக் காலை நேரடியாகச் சென்று பார்வையிட்டார். சேதவிவரங்களைக் கேட்டறிந்தார். பொலிஸாருடன் தொடர்பு கொணடார்சந்தேகநபர்கள் கைது செய்யப்படாமைக்காக தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார். 'இதே போன்று சிங்கள மீனவர்களின் வாடிகளை எரிந்திருந்தால் எத்தனை தமிழர்கள் இந்த நேர இடைவெளியில் சிறையில் தள்ளப்பட்டிருப்பார்கள். ஆனால் சம்பவம் இடம்பெற்று 14 மணி நேரம் கழித்தும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை. இதே நேரம் குறித்த பகுதியில் ஓர் பாரிய இடர் இடம்பெற்று மக்கள் கொதி நிலையிலும் ஏக்கத்திலும்உள்ளனர். ஆரம்ப விசாரணைகளையேஆரம்பிக்காத நிலையில் இந்தப் பகுதியில்வெறுமனேஇரண்டு பொலிஸார்மட்டும்கடமைக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் நிறுத்தப்பட்ட இடமும் மேலும் சந்தேகத்தை எழுப்புகின்றது' என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வாடிகளுக்குத் தீ வைத்தமையால் 35 லட்சம் ரூபா பெறுமியான இழப்பு ஏற்பட்டுள்ளது என்று பிரதேசசெயலகத்தால் மாவட்டச் செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிக்கையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. அசம்பாவிதம்தொடர்பில்விவரங்கள்திரட்டப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலும் தொடர்புடைய அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தப் பகுதியில் இடம்பெறும் தொடர் அசாதாரணநிலைமைதொடர்பில் இறுதித் தீர்வு எட்டப்படவில்லை. அதனைத் தொடர்பு பட்ட அமைச்சுக்களே மேற்கொள்ள வேண்டும் என்று முலலைத்தீவு, மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (21,105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## செஞ்சோலை படுகொலை நினைவேந்தல் நிகழ்வு வள்ளிபுனத்தில் உணர்வு பூர்வமாகக் கடைப்பிடிப்பு

முல்லைத்தீவு,ஓக15
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம்14 ஆம் திகதி வான்படையின் கிபிர்விமானங்கள்நடத்திய மிலேச்சதனமான தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் 54 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் பன்னிரெண்டாவது ஆண்டு நினைவுநாள் இன்று உணர்வுபூர்வமாக நடைபெற்றது
படுகொலை இடம்பெற்ற வள்ளிபுனம் பகுதியில். படுகொலை செய்யப்பட்டவர்களது திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட நினைவிடத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.
வள்ளிபுனம் பிரதேசத்தில் செஞ்சோலை சிறுவர் இல்லம் இயங்கிய இடத்தில் மாணவிகளுக்கான தலைமைத்துவபயிற்சிவழங்கப் பட்டுக்கொண்டிருந்தநேரத்தில் காலைப் பொழுதில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.
இந்தநிகழ்வில்உயிரிழந்தவர்களின் உறவுகள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறுதரப்பினரும்கலந்துகொண்டுள்ளனர். (214)



## யாழ்ப்பாணம் பல்கலைகழகத்தில் செஞ்சோலை படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஓக.15
செஞ்சோலைபடுகொலையின்12ஆவது ஆண்டுநினைவு தினம் நேற் தினம் யாழ்.பல்கலைகழகத்தில் நினைவு கூறப்பட்டது.
யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் குறித்த நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.
இந்தநிகழ்வில்பல்கலைகழககல்விசார், சாராஊழியர்கள் மற்றும் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (37)

## பருத்தித்துறை பிரதேச சபையில் செஞ்சோலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம்,ஓக15
முல்லைத்தீவுசெஞ்சோலைசிறுவர்இல்லபடுகொலையின் 12ஆவது ஆண்டு தினத்தையொட்டி பருத்தித்துறைபிரதேசசபையில்நேற்றுஉறுப்பினர்கள்அனைவரும் எழுந்து நின்று 2 நிமிட அஞ்சலி செலுத்தியுள்ளார்கள்.
பருத்தித்துறை பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் சபைத் தலைவர் அ.சா.அரியகுமார் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்த போது, தமிழ் தேசிய மக்கள் முன்னணி நியமன உறுப்பினரான கவிதா சிவகுமார்எழுந்துமுல்லைத்தீவுசெஞ்சோலைசிறுவர்இல்ல படுகொலை தினம் இன்றாகும்.
12ஆவது ஆண்டுநினைவுதினத்தையொட்டிநாங்கள் அனைவரும் 2 நிமிடம் அஞ்சலி செலுத்துவோம் என அழைப்புவிடுத்தார்.
இதனையடுத்துஉறுப்பினர்கள்அனைவரும்எழுந்து நின்று 2 நிமிடங்கள் அக்கா வணக்கம் செலுத்தினார்கள். கடந்த 2006 ஆம் ஆண்டு செஞ்சோலை சிறுவர் இல்லத்தின்மீதுநடத்தப்பட்டவிமானத்தாக்குதலில்54 சிறார்கள் கொல்லப்பட்டிருந்தனர். (173)

# சுயாட்சிக்காக போராடுகிறோம் எமக்கு இடையூறு செய்யாதீர்கள்

## சி.சிவமோகன் எம்.பி தெரிவிப்பு



புதுக்குடியிருப்பு,ஓக15
எமக்கான உரித்தினை பெற்றுக்கொள்வதில் இன்றும் சிங்களதேசம் பின்னிக்கின்றது இதற்கானபதிலினைசிங்களதேசம்எதிர்காலத்தில் அறிந்து கொள்வார்கள். ஜனநாயகரீதியில்எமது சுயாட்சியினை வென்றெடுக்க போராடிக்கொண்டிருக்கின்றோம் அதில் அவர்கள் இடையூறுகளை போடுவார்களேயானால்அந்த இடையூறு அவர்களின்வாழ்விற்கும்அழிவாகத்தான் போய் முடியும் என்றும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

எமது மாணவர்கள் மீது குண்டுவீசி கொலைசெய்து ராஜபக்ச அராஜகர்களின் ,அராஜகம் நிறைவேறிய நாள் ராஜபக்சர்கள்தங்கள்கோரமுகங்களை காட்டிய கொடூர நாள் தான் 2006ஆம் ஆண்டு ஒகஸ்ட் 14ஆம் நாள் என்று வன்னிமாவட்ட நாடாளமன்ற உறுப்பினர் சி.சிவமோன் தெரிவித்துள்ளார்.
முல்லைத்தீவுசெஞ்சோலையில்உயிர்நீர்த்த மாணவர்களின்12ஆம்ஆண்டு நினைவு நிகழ்வு வள்ளிபுனம் இடைக்கட்டுசந்திப்பகுதியில்,வன்னிக்குறோஸ் நினைவேந்தல் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.
இந்தநிகழ்வில்கலந்துகொண்டுநினைவுரை ஆற்றும் போது வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் இதனை தெரிவித்துள்ளார்.
அங்குஅவர்மேலும்தெரிவிக்கையில்: 50 இற்கு மேற்பட்ட மாணவர்களும் ஒரு தொகுதி பணியாளர்களும் மாணவர்களுக்கான தலைமைத்துவ முதலுதவி பயிற்சியின்போது படுகொலை செய்யப்பட்டநாள். 2006ஆம்ஆண்டு இதே நாள் அராஜக இலங்கை அரசு அந்த நிகழ்வினை நிகழ்த்தியது.
எமது மாணவர்களுக்கு அன்றைய காலத்தில் கல்வித்திணைக்கழத்தால் அங்கிகரிக்கப்பட்ட பயிற்சி நெறியாக காணப்பட்டது ,அதன் உண்மைத்தன்மையினைகூடபாராதுஎமதுமாணவர்கள்மீதுகுண்டுவீசிகொலைசெய்தநாள் ராஜபக்ச அராஜகர்களின் அராஜகம் நிறைவேறிய நாள். பாடசாலை மாணவர்கள் தானே எம்மீது எந்த பிரச்சனையும் வராது எமக்கு பாதுகாப்பு உண்டு என்று நம்பிய அந்த மாணவர்களையும் இந்த மக்களையும் கண்ணீரில் தள்ளிவிட்டநாள் ராஜபக்சர்கள் தங்கள் கோரமுகங்களைகாட்டியகொடூரநாள்.
பத்துஆண்டுகள்கழித்துதான்நினைவு கொள்கின்றோம் எங்கள் உறவுகளை கூட நினைவிற்கொள்ள முடியாமல் நாங்கள் தவித்துக்கொண்டிருந்தோம், அதன்பின்னர்தான்நாங்கள்வன்னிக்குறோஸ் தாயக நினைவேந்தல் அமைப்பு என்று ஒன்றை உருவாக்கினோம். இதில்கூட இளைஞர்கள்செயற்பட தயங்கி நின்றார்கள். தாமும் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்தில் ஆனால் இது எமது வரலாற்று கடமை இதனை மறந்துவிட முடியாது. ஒரு இனப்படுகொலை அப்பட்டமாக நிறைவேறியநாளினைமறந்துவிடமுடியாது. இதனை உலகுக்கு ஆண்டு தோறும் சுட்டிக்காட்டுகின்றோம். அதனால்த்தான் இந்த நிகழ்வுகளை நினைவிற்கொள்கின்றோம்.
எம்முடன் இருந்த உறவுகளை நினைத்து நினைவேந்தல் செய்ய அருகதைஇல்லைஎன்றுசொன்னால்இந்த மண்ணில் நாங்கள் வாழ்வதற்கு அருகதையற்றவர்களாகபோய்விடுவோம். இதற்காக எந்தப்பெரிய ஒரு சவாலையும்எதிர்கொள்ளநினைத்துதான்இந்த நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.
இந்த இனப்படுகொலை செய்யப்பட்ட இந்த நாளினை உலகிற்கு வெளிக்கொணர்ந்துஎமதுஇனம்விடுதலைநோக்கி பயணிக்கும் பயணத்தில் நாம் கைகோர்க்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.
இன்றுராஜபக்சக்கள்மீண்டும்ஒருஅரசாட்சியை பிடிக்கும் நோக்கில் தவித்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் செய்த அராயகங்கள்மறந்துபோய்விடவில்லைநினைவேந்தல்நிகழ்வுகளை மகிந்த ஆட்சியில் செய்திருந்தால் இன்றும்வெள்ளைவான்களில்கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருப்பார்கள்.
தற்போதுஉள்ளஆட்சிநல்லாட்சிஎன்று நாங்கள் சொல்லிவிடவில்லை. நல்லாட்சிஎன்றுசொல்லுபவர்கள்எல்லாம் ஏதோ ஒருபுதிய மாற்றத்தை கொண்டு வர விரும்புபவர்கள்தான் அதனை சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள்.
நாங்கள் நம்பவில்லை தமிழ்தேசியக் கூட்டமைப்பாக எமது மக்களுக்கான உரிமைகள் சிலவற்றை மீட்டெடுத்திருக்கின்றோம். காணிகளை விடுவிக்கபலமுயற்சிகளைஎடுத்துள்ளோம் எடுத்துக்கொண்டிருக்கின்றோம்.
எமதுமக்களின்உணர்வுகளைவெளிப்படுத்துவதற்கானஉரிமைகளைநிலைநாட்டி இருக்கின்றோம் .எமது மக்கள் யாரும் கைதுசெய்து காணாமல் போகும் சந்தர்பத்தினை இல்லாமல் செய்துள்ளோம்என்றார். (ரி3)

# தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரால் செஞ்சோலைபடுகொலைநினைவேந்தல்

முல்லைத்தீவு,ஓக15
2006 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 14ஆம்திகதிவள்ளிபுனம்செஞ்சோலை வளாகத்தில் தலைமைத்துவ பயிற்சியில் ஈடுபட்ட பாடசாலை மாணவிகள் மீது இலங்கை விமானப்படை குண்டு வீசி தாக்குதல் நடத்தியதில் சம்பவ இடத்தில் உயிரிழந்த மாணவர்களின் 12ஆம்ஆண்டுநினைவுநிகழ்வுதமிழ்தேசியமக்கள்முன்னணியின்ஏற்பாட்டில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.
தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர்அணிதலைவர்எஸ்.தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை செஞ்சோலையில் உயிரிழந்த மாணவி ஒருவரின் உறவினரும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினருமான சிவராணி இராசையா ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செயலர் செ.கஜேந்திரன் சுடர் ஏற்றி மலர்வணக்கத்தினை செலுத்தினர்.
தொடர்ந்து நினைவுரைகளை தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முல்லைமாவட்ட இணைப்பாளர் த.விஜயகுமார், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ஏ.இரத்தினவடிவேல், நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் சு.வாசுகி, தமிழ்தேசிய மக்கள் முன்னணியின்செயலர்செ.கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்த சிறப்பு நினைவுரையினை தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நிகழ்தினார்.
தொடர்ந்து தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் படுகொலை செய்யப்பட்ட வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்திற்கு சென்று சுடர் ஏற்றி மலர்வணக்கம் செலுத்தியுள்ளனர்.



(ரி3)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 205 வெற்றிடங்கள் உள்ளன! நிரப்ப நடவடிக்கை இல்லை

### யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த நிலை

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் தற்போது 205 சிற்றூழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றபோதும் அவற்றை நிரப்புவதற்கு எந்த நடவடிக்கைகளும் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. தென்பகுதியினரை நியமிப்பதைக் கூட்டமைப்பு தடுத்து நிறுத்தியபோதும் இங்குள்ளவர்களை நியமிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் அரசநிர்வாகங்களில் அதிக வெற்றிடம் காணப்படுகின்ற போதும் அவற்றை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

வடக்கின் 5 மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் கொழும்பு அரசின் நிர்வாகங்களுக்கு உட்பட்ட அரச திணைக்களங்களில் ஆயிரக்கணக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இருப்பினும் அரசு அவற்றை நிரப்புவதில் தாமதம் ஏற்படுகின்றது.

இதேநேரம் இவ்வாறு காணப்படும் பதவிகளுக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு நீண்ட நடைமுறை காணப்பட்டாலும் சாதாரண ஊழியர்களை நியமனம் செய்வதிலும் அசமந்தம் காட்டப்படுவதாகவே சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொழும்பு அரசின் ஆளுகைக்கு உட்பட்ட பல திணைக்களங்கள் உள்ளபோதிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயலகங்களில் மட்டும் தற்போது 205 சிற்றூழியர் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இதேபோன்று 8 சாரதிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு காணப்படும் வெற்றிடங்களுக்கு தென்பதியில் இருந்து இரகசியமாகப் பணியாளர் நியமிக்கப்படுவதனை சுட்டிக்காட்டியதனையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முயற்சியால் அவை தடுக்கப்பட்டன. ஆனாலும் அந்த வெற்றிடங்களை நிரப்ப யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (4,105)

## வீட்டுக்கழிவுகள் வீதியில் பயணிகள் திண்டாட்டம்

தென்மராட்சி, ஓக.15

குடியிருப்புகளில் சேரும் கழிவுகளை வாகனத்தில் ஏற்றிச்சென்று தென்மராட்சிப் பகுதியில் உள்ள குடியிருப்புகள் அற்ற வயல்கள் மற்றும் பற்றைப் பகுதிகளில் வீசப்படுகிறன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பகுதிகளில் கழிவுப் பொருள்களை வீதியோரங்கல் வீசுவது தடைசெய்யப் பட்டுள்ளது. அங்குள்ளவர்கள் கழிவுப் பொருள்களை வாகனங்களில் ஏற்றிச் சென்று தென்மராட்சிப் பகுதியில் வேம்பிராய் வரணி சாலையில் குடியிருப்புகள் அற்ற பகுதிகளில் கொட்டி விட்டுச் சென்றுவிடுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இவ்வாறு வாகனங்களில் கொண்டுவரப்பட்டுக் கொட்டப்படும் கழிவுகளை கால்நடைகள் மற்றும் பறவைகள் எடுத்துச் செல்கின்றன. அது மட்டுமன்றி அவற்றை நாய்கள் கிளறுவதால் கழிவுகளிலிருந்து வீசும் துர்நாற்றம் சாலையில் செல்லமுடியாத அளவுக்கு உள்ளன எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கழிவுகளை வீசுவோர் இனிமேல் அவ்வாறு வீசாது உரிய முறையில் அகற்ற வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர். (4,9)

சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள்

## விளம்பர அறிவித்தல் ஒட்டுவதற்கு இனிமேல் அனுமதி பெறவேண்டும்

சாவகச்சேரி, ஓக.15

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உற்பத்தி நிறுவனங்கள் உட்பட விளம்பர அறிவித்தல்கள் சபையின் அனுமதியின்றி ஒட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது. இதை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் அறிவித்துள்ளார்.

சபையின் எல்லைக்குட்பட்ட பகதிகளில் விளம்பர அறிவுறுத்தல்களை ஒட்டுவதற்கான இடங்கள் ஏற்கனவே சபையால் தெரிவு செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

தென்பகுதி யாழ்ப்பாண மாவட்டம் போன்ற இடங்களில் உள்ள உற்பத்தி நிறுவனங்கள் தமது உற்பத்திப் பொருள்கள் தொடர்பான அறிவித்தல்களைக் கண்ட இடங்களில் ஒட்டுகின்றனர். அதனால் நகரப் பகுதி அசிங்கப்படுத்தப்படுகிறது. கல்வி நிறுவனங்கள், தொழில்சார் நிறுவனங்கள், கண்ணீர் அஞ்சலிகள், திரைப்படங்கள் போன்ற துண்டுப் பிரசுரங்களை நகரப் பகுதிகளில் உள்ள சுவர்களில் ஒட்டிவிட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறான செயல் நகரின் அழகைக் கெடுக்கும் வகையில் காணப்படுகிறது.

விளம்பர அறிவித்தல்களை ஒட்டுவதற்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. சபையிடம் அனுமதிக்கு விண்ணப்பித்தால் அந்த இடங்களில் துண்டுப் பிரசுரங்களை ஒட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும்.

அனுமதியின்றி விளம்பர அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருந்தால் நிறுவனத்தின் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (4,9)

## செய்தி சேகரிக்க சந்திரிக்கா தடை

அத்தனகல பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இணைத்தலைவரான முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்தநிலையில், அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை அங்கிருந்து வெளியேறுமாறு முன்னாள் அரசதலைவர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க கேட்டுக்கொண்டிருந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் ஆரம்பிக்கப் பட்டிருந்ததன் பின்னர், அங்கு செய்தி சேகரிக்க ஏன் ஊடகவியலாளர்கள் வந்திருக்கிறார்கள் என்று முன்னாள் அரசதலைவர் சந்திரிக்காபண்டாரநாயக்க குமாரதுங்க கேள்வி எழுப்பினார்.

செய்தி சேகரிக்க பிரதேச செயலாளரிடமிருந்து கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப் பட்டிருந்தாக இதன்போது ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

எனினும் ஊடகவியலாளர்கள் வெளியேறாவிட்டால் தான் இந்த கூட்டத்திலிருந்து வெளியேறப்போவதாகவும், ஊடகவியலாளர்கள் இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்வது என்றால், முறையே ஊடக அமைச்சினூடாக அழைப்பு விடுக்கப் பட்டிருக்க வேண்டுமெனவும், சந்திரிக்கா கூறினார்.

இதனை தொடர்ந்து, ஊடகவியலாளர்களுக்கும் அவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பான காணொளி சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. குறித்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (4)

## வறட்சி பாதித்த இடங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 15

தென்மராட்சியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

சாவகச்சேரி பிரதேச சபைக்கு இடர் முகாமைத்துவ அமைச்சு வழங்கிய தண்ணீர் தாங்கி ஊடாக இந்த விநியோகம் இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் சாவகச்சேரி நகரசபையால் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம், கைதடி நுணாவில் அ.த.க. வித்தியாலயம், ஆகியவற்றுக்கும் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது எனவும் தெரிவித்தார். பிரதேசத்தில் வறட்சி காரணமாகக் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு காணப்படும் கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப் பட்டு வருகிறது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4,9)

## பருத்தித்துறையில் 74 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர எல்லைக்குள் இதுவரை 74 வீதிமின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. சபை உறுப்பினர்களின் சிபார்சுக்கமைய தெரிவு செய்யப்பட்ட வீதிகளில் வீதிமின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று சபைத் தலைவர் யோ. இருதயராஜா தெரிவித்தார். (4,173)

## நாவற்குழியிலுள்ள சித்தி விநாயகருக்கு நாளை கொடியேற்றம்

நாவற்குழி சித்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை வியாழக்கிழமை மு.ப. 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளன.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 21ஆம் திகதி முத்துமஞ்சமும், 22ஆம் திகதி மாம்பழத் திருவிழாவும், 23ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 24ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 25ஆம் திகதி தேர்த் திருவிழா வும், 26ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (4)

## துன்னாலையில் மாடுகள் கடத்தப்படுகின்றன

துன்னாலை வடக்குப் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்படும் மாடுகள் கடத்தப்படுகின்றன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளுக்காகவும், பால் கறப்பதற்காகவும் வளர்க்கப்படும் மாடுகளை மேய்ச்சல் நிலங்களில் மேயவிடும்போது மாடுகள் அடிக்கடி கடத்தப்படுகின்றன. இந்தச் சம்பவம் தொடர்பாக உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோருகின்றனர். (4,173)

## ஆடி அமாவாசை விரதம் முதியோர் இல்லத்தில் சிறப்பாக இடம்பெற்றது

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் கடந்த ஆடி அமாவாசை விரதத்தை சமய முறைப்படி அனுஷ்டிப்பதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன. முதியோர் இல்லத்தின் வளாகத்தில் உள்ள வைரவர் ஆலயத்தில் காலையில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. விரதம் அனுஷ்டித்த சகல முதியோர்களுக்கும் பிதிர் சங்கற்பம் செய்து வைக்கப்பட்டன.

நண்பகலில் முதியவர்களுக்கு என்ற சிறப்பாகத் தயாரிக்கப்பட்ட மதிய உணவு வழங்கப்பட்டது. முன்னரைவிட இந்த முறை அதிகமான வயோதிபர்கள் தமது தந்தையர்களை நினைவுகூர்ந்து விரதம் அனுஷ்டித்தனர் என்று இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார். (4,17)





ஜி.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. சட்டத்தரணி வி.தேவசேனாதிபதியின் ஏற்பாட்டில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது. இவர் பல இடங்களிலும் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச கருத்தரங்குகளை நடத்தி வருகிறார். இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா, வடக்கு அபிவிருத்திக்கான அரசதலைவர் செயலணியின் சிறப்புச் செயலாளர் வே.சிவஞானசோதி மற்றும் பலர் கலந்துகொண்டனர். (4)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்வாளர்களின் நிதிகளைப் பெறுவோர் சபைக்கு அறிவிக்கவும்

## சாவகச்சேரி நகர சபை தீர்மானம் நிறைவேற்றம்

சாவகச்சேரி, ஓக.13

**புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திக்கென வழங்கப்படும் நிதி பற்றிய விவரங்கள் சபைக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என்று சாவகச்சேரி நகரசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

குறித்த நிதியைப் பெறும் இங்குள்ள அமைப்புக்கள் அல்லது தனிநபர்களே அதுபற்றிச் சபைக்குத் தெரியப்படுத்துவதுடன் மேற்கொள்ளப்படும் வேலைகள் தொடர்பான விவரங்கள் அதற்கான செலவுகள் போன்றவற்றையும் நகரசபைக்கும் பொதுமக்களுக்கும் தெரியப்படுத்தவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபையின் அமர்வு கடந்தவாரம் இடம்பெற்றபோது இந்த விடயத்தைச் சபை உறுப்பினர் ந.திருக்குமரன் தனிநபர் தீர்மானமாகச் சமர்ப்பித்து உரை யாற்றினார்.

புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்புகள் மற்றும் தனிநபர்களுடன் நாம் தொடர்புகொண்டு நகரசபையால் செய்யப்படும் அபிவிருத்திக்கு நிதி வழங்குமாறுகோரும் வேளைகளிலும் அந்த அமைப்பினர் மற்றும் தனிநபர்கள் இங்கு வரும்போது நேரில் சென்று கேட்கும் வேளைகளில் நகரசபையின் அபிவிருத்தி நிதிக்கு தாம் மனமுவந்து நிதி வழங்கியுள்ளோம் என்றும் அந்த நிதி சபைக்குக் கிடைக்கவில்லையா என்றும் எம்மிடம் கேட்கின்றனர்.

இவ்வாறான செயல் இங்குள்ளவர்கள் சபை அபிவிருத்திகளைக் காட்டி வரும் நிதியை பயன்படுத்தாமல் விடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் தொடராமல் இருப்பதற்கு புலம்பெயர் நாடுகளில் உள்ள அமைப்பினர் மற்றும் தனிநபர்கள் நகர அபிவிருத்திக்கென அனுப்பப்படும் நிதி பற்றிய விவரங்கள் அதனைப் பெறும் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் சபைக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

அந்த நிதியில் மேற்கொள்ளப்படும் வேலை விவரத்தையும் தெரியப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யப்படும் செலவு விவரங்களை நகரசபையில் காட்சிப்படுத்த வேண்டும்.

சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்கள் அனுப்பும் நிதியில் இடம்பெறும் வேலைகளுக்குச் சபையின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

புலம்பெயர் நாடுகளிலிருந்து பெறப்படும் நிதிய உள்ளூர் வங்கியில் வைப்பிலிட்டு ஏற்படும் செலவு தொடர்பான விவரங்களும் சபைக்குத் தெரியப்படுத்தல் வேண்டும் என்று அவர் சபையில் வலியுறுத்தினார்.

அதனைச் சபை உறுப்பினர்கள் ஆதரித்து உரையாற்றினர். இறுதியில் அது தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது. (4.9)



யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை ஆதவன் முன்பள்ளி மாணவர்களின் செயற்பட்டு மகிழ் வோம் விளையாட்டு நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ.பிரதீபன் தலைமை யில் நடை பெற்றது. (63)

## சைவ பரிபாலன சபைக்கென புதிய அங்கத்தவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 100ஆவது ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய அங்கத்தவர்களின் தெரிவும் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

அதன்படி சபைக்கு,

தலைவராக இ.வசந்தசேனன், செயலாளராக நா.வன்னிய சிங்கம், பொருளாளராக வி.தயாபரன், உப தலைவர்களாக இரா. செல்வவடிவேல், என்.சுதர்சன், உப செயலராக செல்வி ச.வினோதினி, மேலதிக செயலாளர் செ. செல்வராஜன், பரீட்சைச் செயலாளராக பொ.கமலநாதன், பரீட்சை உப செயலாளராக த.பாலகிருஷ்ணன், சமய பரப்பரை அமைச்சராக திருஞான சம்பந்தப்பிள்ளை, இந்து சாதன பத்திரிகை ஆசிரியர் த.மயூரகிரி, உள்ளக்கணக்காய்வாளராக நா.இராச நாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர் என்று செயலாளர் தெரிவித்துள்ளார். (4)

## உசன் கிராமத்துக்கு 40 மின்விளக்குகள்

### உறுப்பினர் ஜெயசேகரம் வழங்கினார்



கொடிகாமம், ஓக. 15

உசன் கிராமத்துக்கு ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 40 மின் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் இ.ஜெயசேக ரம் இவற்றை உசன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக அண்மையில் வழங்கியுள்ளார். 40 மின் விளக்குகளும் கடந்த வியாழக்கிழமை உசன் கிராமத்துக்குப் பொருத்தப்பட்டுள்ளன என உசன் வட்டார சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர் சி.செல்வரூபன் தெரிவித்துள்ளார். (4.159)

## தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் நாகநாதனின் நினைவுதினம்

யாழ்ப்பாணம், ஓக. 15

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் அமரர் இ.மு.வி.நாகநாதனின் நினைவுதினம் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளது. இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் உள்ள தலைமையகத்தில் மாவட்டக் கிளைத் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் பிற்பகல் 4மணிக்கு இது இடம் பெறும்.

கட்சியின் நாடாளுமன்ற, மாகாணசபை உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் ஆகியோருக்கு அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (4.50)

## ஒலிபெருக்கி உபகரணங்கள் நுளம்பு வலைகள் அன்பளிப்பு

### உறுப்பினர் கஜதீபனின் நிதிஒதுக்கீட்டில்

யாழ்ப்பாணம், ஓக. 15

அளவெட்டி, கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூக நிலையத்துக்கு ஒலிபெருக்கிக் கருவிகளும் சண்டிலிப்பாய் முதியோர் சங்கத்துக்கு நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் இவற்றை வழங்கினார்.

மாகாணசபையின் இந்த வருட குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் அவர் இவற்றை வழங்கினார். 70 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிக்கருவிகள் அளவெட்டி, கருகம்பனை தமிழ்மன்றம் சனசமூக நிலையத்துக்குக் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கினார்.

இந்தநிகழ்வில்வலி.வடக்கு பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன், வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான ச.சஜீவன், பா.மரியதாஸ் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள், ஊரவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். சண்டிலிப்பாய் முதியோர் சங்கத்துக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நுளம்புவலைகளைநேற்று முன்தினம் வழங்கினார்.

இந்தநிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேசசெயலக சமூக சேவைகள் உத்தியோகத்தர்சிவராஜா, பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் முதியோர் சங்க நிர்வாகிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (4)

## நடமாடும் சேவைக்காக ஆவணங்கள் பரிசீலிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 15

'நிலமெஹவர' அரசதலைவர் மக்கள் சேவையின் பிரதேச மட்டத்தில் இடம்பெற இருக்கும் நடமாடும் சேவைக்கு முன்மாதிரியாக ஆரம்பக்கட்ட வேலைகளைக் கிராம அலுவலர் மட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் மேற் கொண்டுள்ளனர்.

கிராம மட்டத்தில் மக்களின் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு நடமாடும் சேவைக்கான இலக்கங்கள் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலகத்தில் உள்ள காணிப் பிரிவு பதிவாளர் பிரிவு, சமூக சேவைகள் பிரிவு, மோட்டார் வாகனப் பிரிவு, அடையாள அட்டைப் பிரிவு, சமுர்த்திப் பிரிவு, திட்டமிடல் பிரிவு, ஓய்வூதியப் பிரிவு, விவசாயப் பிரிவு. சுற்றாடல் பிரிவு என செயலகத்தில் இயங்கும் அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த அபிவிருத்தி அலுவலர்கள், செயலக அலுவலர்கள் ஆகியோர் கிராம மட்டத்தில் தமது பிரிவுகளுக்கான பிரச்சினைகளை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்குப் பிரதேச மட்டத்திலான நிகழ்வில் கலந்து கொள்வதற்கான இலக்கங்கள் வழங்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (4.147)

## கால்நடைச் சங்கத்துக்கு உறுப்பினர்கள் தெரிவு

வடமராட்சி, ஓக. 15

பருத்தித்துறை வடமராட்சி வடக்குக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கப் புதிய நெறியாளர் சபைக்கு உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

சங்கப் பணியகத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.சுவர்ணன் முன்னிலையில் இந்தத் தெரிவு இடம் பெற்றது.

சபையின் தலைவராக மு.ஜெகதேவன், உபதலைவராக த.செங்கபதி ஆகியோர் தெரிவாகினர். ஏனைய உறுப்பினர்களாக மு.திருராஜா, சி.பஞ்சாட்சரம் மற்றும் கால்நடை மருத்துவ அதிகாரி திருமதி சறோஜினிதேவி ஆகியோருமாக 5உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். 18வயதுக்கும் 35வயதுக்கும் இடைப்பட்ட இருவர் சபைக்கு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட வேண்டிய நிலையில் அதற்கான உறுப்பினர்கள் இன்மையால் இந்தத் தெரிவு நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (4.173)

# கலைஞர்களின் விவரங்கள் தென்மராட்சியில் சேகரிப்பு

தென்மராட்சிப் பிரதேச கலைஞர்களின் விவரங்கள் பிரதேச கலாசாரப் பிரிவினரால் திரட்டப்பட்டு வருகின்றன. மைய கலாசாரத் திணைக்களத்தினர் இவற்றைத் திரட்டி அனுப்புமாறு பணித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பல்துறைக் கலைஞர்களின் விவரங்களை ஆவணப்படுத்தும் நோக்கில் இணையத்தில் பதிவு செய்வதற்காகவும் கலைஞர்களுக்கு அடையாள அட்டைகள் பெற்றுக் கொடுப்பதற்காகவும் அவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்காகவும் விவரங்கள் திரட்டப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. பிரதேச செயலக கலாசாரப் பிரிவினர் பிரதேசத்தில் உள்ள கலைஞர்களுக்கு விண்ணப்படிவங்களைத் தபாலில் அனுப்பிவைத்துள்ளனர்.

விண்ணப்பப் படிவம் கிடைக்காத கலைஞர்கள் பிரதேச கலாசாரப் பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறும் படிவத்தைப் பூர்த்திசெய்து பாஸ்போட் அளவிலான புகைப்படத்துடன் ஆற்றும் கலைத்துறை தொடர்பான ஆவணங்களுடன் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறும் பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு அறிவித்துள்ளார். (4.9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜெயபுரம்

## புனித அந்தோனியார் ஆலய திறப்பு நிகழ்வு

கிளிநொச்சி ,ஓக 15

ஜெயபுரம் புனித அந்தோனியார் ஆலய திறப்பு விழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ் ஆயர் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை , தலைமையில் புதிய ஆலயம் ஆயரால் திறந்து வைக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்பட்டு, ஆலயத் திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது. எனவே இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அப்பங்குமக்கள் தெரிவித்தனர். (204)



## இலவச ஊக்குவிப்பு நிகழ்வு

அறிவிருட்ஷம் துரித கல்வி சமூக மேம்பாட்டின் அனுசரணையில் ஆசிரியை முல்லை றிஸானாவின் நெறியாள்கையில் புத்தளம்,ஸாஹிரா தேசிய கல்லூரி உத்தரவாதக் கல்வி மாணவர்களினால் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை அன்று ஒழுங்கு செய்யப்பட்ட" இலவச ஊக்குவிப்பு நிகழ்வு" தண்ணீருற்று முஸ்லீம் மகா வித்தியாலைய மண்டபத்தில் A.C றியாஸ் சின் தலைமையில், வளவாளர் A. M .M சுல்பிகானினால் நிகழ்த் தப்பட்டது.



## லங்கா சதொச நிறுவனத்தின் நானூறாவது கிளை திறப்பு

முல்லைத்தீவு ,ஓக.15

முல்லைத்தீவு, முள்ளியவளை,ஹிஜ்றாபுர மக்களின் நலன் கருதி அமைக்கப்பட்டுள்ள, கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கீழான லங்கா சதொச நிறுவனத்தின் 400ஆவது கிளையை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் கடந்த 12 ஆம் திகதி திறந்து வைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் பதில் அமைச்சர் அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூப், மாகாணசபை உறுப்பினர ஜனோபர் மற்றும் பிரதேச சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி 3)

# முச்சக்கரவண்டிகளில் அதிக மாணவர்கள் விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதுவும் காரணம்

வவுனியா ,ஓக 15

**வவுனியாவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் முச்சக்கரவண்டிகள் அளவுக்கதிகமான மாணவர்களை ஏற்றிச்சென்று, பாதுகாப்பற்ற முறையில் சேவையில் ஈடுபடுவதாகச் சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பாக அவர்கள் தெரிவுக்கும் போது, பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் முச்சக்கர வண்டிகள் அளவுக்திகமான மாணவர்களை ஏற்றிச் செல்வதாகவும், குறிப்பாக நகரப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மாணவர்களை ஏற்றிச்செல்லும் சில முச்சக்கரவண்டிகள், 7 தொடக்கம் 10 பேரை ஏற்றிச்செல்வதாகவும், இதனால் மாணவர்கள் பாதுகாப்பான முறையில் பயணஞ்செய்ய முடியாத நெருக்கடி நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கிராமப்புற பாடசாலைகளின் நிலமையும் அதுவே. இதனால் ஏற்படும் விபத்துக்களால் பல இழப்புக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதனால், மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு அளவுக்கதிகமாக மாணவர்களை ஏற்றி செல்வதை முச்சக்கரவண்டி சாரதிகள் நிறுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இது தொடர்பாகப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் முச்சக்கரவண்டிச் சாரதிகள், கூறுகையில் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, எரிபொருள்களின் விலை அதிகரிப்புக்களால் எமக்குக் கட்டுபடியாகுவதற்காகவே அதிக மாணவர்களை ஏற்றவேண்டியுள்ளது.

கட்டணங்களை அதிகரித்தால் பெற்றோர்கள் பிள்ளைகளை அனுப்பமாட்டார்கள். இதனால் எமது வாழ்க்கைப் பொருளாதாரம் பாதிக்கபடும் நிலை உள்ளது.

எனினும் தாம் பாதுகாப்பான முறையிலேயே மாணவர்களை ஏற்றிச் செல்வதாகவும் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாகப் பெற்றோர்கள் கூறும் போது, அநேகமான பகுதிகளுக்குப் பேருந்துச் சேவைகள் இல்லாத காரணத்தால் முச்சக்கரவண்டியிலேயே பிள்ளைகளை அனுப்பவேண்டியுள்ளது.

தனியாக எமது பிள்ளைகளை அனுப்பினால் கட்டணம் அதிகரிக்கும் நிலை உள்ளது. இதனால் பல பிள்ளைகளுடன் இணைத்தே அனுப்பவேண்டியுள்ளது என்று கூறுகின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் அளவுக்கதிகமான மாணவர்களை ஏற்றிசெல்வது ஏற்றுக்கொள்ள முடியாதவிடயமாகவுள்ளதுடன், பல இழப்புகளுக்கும் வித்திடும்.

எனவே வவுனியாவில் பாடசாலை மாணவர்களுக்கான பேருந்துசேவைகளை ஏற்படுத்துவதுடன், சாரதிகள், பெற்றோர்கள் குறித்த விடயத்தில் கரிசனையுடன் செயற்படுவதோடு ,போக்குவரத்து விதிமீறல்களைப் பொலிஸாரும் மிகுந்த கவனத்தில் எடுக்கவேண்டும் என்பது நலன்விரும்பிகளின் எதிர்பார்பாகவுள்ளது. (110)





## தற்காலிக வீடு எரிந்த குடும்பத்துக்கு உதவி

புதுக்குடியிருப்பு,ஓக 15

புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் வசிக்கும் அருள் சங்கர் என்ற குடும்பத் தலைவரின் தற்காலிக வீட்டின் ஒரு பகுதி கடந்த 12 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தில் எரிந்து அழிவடைந்துள்ளது. இரண்டு பிள்ளைகளைக் கொண்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வந்த குடும்பத்தின் அழிவு தொடர்பில் கிராம அலுவலர் ஊடாகப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த குடும்பத்துக்கு 13ஆம் திகதி இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினரால் உடனடி உதவிப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ரி3)

## ஞாயிற்றுகிழமைகளில் வர்த்தக நிலையங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குவதாக முடிவு

*வவுனியா மாவட்டப் பதிப்பாளர் கூட்டுறவுசங்கம் அறிவிப்பு*

வவுனியா ,ஓக 15

வவுனியா மாவட்ட பதிப்பாளர் கூட்டுறவுச்சங்கத்தின் சிறப்பு கலந்துரையாடல் கடந்த 11 ஆம் திகதி இரவு 7 மணியளவில் சங்கத்தின் தலைவர் நா.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் பல விடயங்கள் ஆராயப்பட்டதுடன் குறிப்பாக வவுனியா வர்த்தகர் சங்கத்தால் ஞாயிற்றுக்கிழமைகளில் தொழில் நிலையங்களைப் பூட்டி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளை வவுனியாமாவட்டப் பதிப்பாளர் கூட்டுறவுசங்கத்தினரும் ஏற்றுக்கொள்வதாக முடிவுகாணப்பட்டதுடன் ,சிறப்பு தேவைகளின் பொருட்டு திறக்கவேண்டியேற்படின் வவுனியா வர்த்தக சங்கத்திற்கு தெரியப்படுத்துவதெனவும் முடிவெடுக்கப்பட்டது.

வவுனியா வர்த்தகசங்கத்தினரால் ஞாயிற்றுக்கிழமைகளில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு வேண்டுகோள்விடுத்தமைக்கு அமைவாக, பதிப்பாளர் கூட்டுறவு சங்கத்தால் எந்தமுடிவும் எடுக்கப்படாத நிலையில் கடந்த சனிக்கிழமை அனைத்து உறுப்பினர்களின் கருத்துக்களையும் கேட்ட பின்னர் குறித்த முடிவு அறிவிக்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ந.கிருஸாந்தன் நினைவுக்கிண்ண கிரிக்கெட் போட்டி செப்ரெம்பர் மாதம் 16 ஆம் திகதி நடத்துவதோடு ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் இரவு 7 மணிக்கு சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் நடத்தபடவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (110)

# கிளிநொச்சியில் இரண்டாம் மொழிக் கற்கையை 60 அரச உத்தியோத்தர்கள் முழுமை செய்தனர்

கிளிநொச்சி ,ஓக .15

இரண்டாம் மொழிக் கற்கையை முழுமை செய்த 60 உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சினால் ,அமைச்சின் வடமாகாண நிலையத்தில் இரண்டாம் மொழிக் கற்கையை பூர்த்தி செய்த 60 உத்தியோகத்தர்களுக்குச் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும், பிரதேச மாவட்டச் செயலகங்களைச் சேர்ந்த 30 உத்தியோகத்தர்களுக்குமாக 60 பேர் தொடர்ச்சியாக 12 நாள்கள் இந்தக் கற்கை நெறியைப் பயின்றுள்ளனர். தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியையும் சிங்கள உத்தியோகத்தர்கள் தமிழ் மொழியையும் பயின்றுள்ளனர். இரண்டாம் மொழியில் தொடர்பாடலை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட பாடநெறிக்கு அமைவாகத் தொடர்ச்சியாக 12 நாள்கள் இரண்டாம் மொழிக் கற்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தொடர்ச்சியாக இந்தக் கற்கைநெறி கிளிநொச்சியில் அமைந்துள்ள தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தில் இடம்பெறும் என்றும் அரச உத்தியோகத்தர்கள் தங்களது திணைக்களங்கள் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இந்தச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ், மாவட்டச் சமுர்த்தி உதவிப் பணிப்பாளர் ஆரணி, தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கம் மற்றும் அரசகருமமொழிகள் அமைச்சின் வடக்கு மாகாண நிலையத்தின் பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாள்குளம் பகுதியில் 15 வீடுகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.15
கிளிநொச்சி மாவட்டத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் அம்பாள்குளம் பகுதியில் 15 வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அம்பாள்குளம் பகுதியில் ,தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் அமைச்சர் சஜித் பிரமேதாசாவின் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 15 புதிய வீடுகளை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த வீட்டுத்திட்டத்தின் பல்வேறு வீடுகள்கிளிநொச்சிமாவட்டத்தின்ஏனைய பிரதேசங்களிலும் முன்னெடுக்கப்பட உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட முகாமையாளர் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில்தேசியவீடமைப்பு அதிகாரசபையின்மாவட்டமுகாமையாளர் ,கணக்காளர்,கிராமஅலுவலர், ஐக்கிய தேசியகட்சியின்மாவட்ட இணைப்பாளரின்பிரதிநிதிஎனபலர்கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (6)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கைது

கிளிநொச்சி, ஓக.15
திறந்தபிடியாணை பிறப்பிக்கப்பட்ட, பல்வேறுகுற்ற செயல்களுடன்தொடர்புபட்ட ஒருவர்கைதுசெய்யப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சிமாவட்டத்தின்பளைபொலிஸ்பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நபர் ஒருவருக்கு எதிராக, கிளிநொச்சிநீதிவான்நீதிமன்றுதிறந்தபிடியாணை பிறப்பித்திருந்த நிலையில், குறித்த நபரை நேற்று முன்தினம்கைதுசெய்துள்ளதாகவும்,கைதுசெய்யப்பட்டவரைநீதிமன்றில்முற்படுத்துவதற்கானநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (6)



வவுனியா மாவட்ட செயலகத்தின் நலன்புரிச்சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுலாவுக்கு மாவட்ட செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துகொண்டனர்.

# பெண்களின் பிரச்சினைகளில் விசேடமான கவனம் வேண்டும்

*கிளிநொச்சி பிரதேச சபை உறுப்பினர் த. செல்வராணி*

*கிளிநொச்சி, ஓக 15*
*கிளிநொச்சி மாவட்டத்தில் பெண்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும் என, கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர் தர்மலிங்கம் செல்வராணி தீர்மான வரைவு ஒன்றை கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.*



நேற்று கரைச்சி பிரதேச சபையின் ஆறாவது அமர்வின் போதே அவர் இந்தப் பிரேரணையை முன்வைத்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தின் பெண்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். சட்டவிரோத மதுபான உற்பத்தி, தொழில் வாய்ப்பின்மை, போன்றவற்றாலும், ஏனைய காரணிகளாலும், அவர்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளைக்கையாள்வதற்கு சிறப்பு அலகொன்றை உருவாக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். கிளிநொச்சியில் பெண்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற , உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்கு ,பொதுச் சந்தையில் இடம் ஒன்றினையும் ஒதுக்கீடு செய்து தருவதோடு, புதிதாக அமைக்கப் பட்டு வருகின்ற, கிளிநொச்சி மத்தியபேரூந்துநிலையத்தில், பாலூட்டும் தாய்மார்களுக்கு சிறப்பாக அறை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் கோரினார்.இதனை கரைச்சி பிரதேச சபை ஏற்றுக்கொண்டதோடு, ஏற்கனவே காணப்படுகின்ற நான்கு குழுக்களுக்கு மேலதிகமாக ஐந்தாவது குழு ஒன்றையும் உருவாக்கி, பெண்களின் பிரச்சினைகளில் கவனம்செலுத்தப்படும்என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (214)

## வள்ளப் பதிவினை மேற்கொள்ள வேண்டுகோள்

கடற்றொழிலாளர்கள் தமது கடற்றொழில். வள்ளங்களை இன்று 15ஆம்திகதிபுதன்கிழமைகாலை9 மணிமுதல் தமது சங்கத்தில் பதிவு செய்துகொள்ளமுடியும்எனசாவல் கட்டுகிராமியகடற்றொழில்அமைப்பினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமதுசங்கஅங்கத்தவர்கள் அனைவரும் இந்த வள்ளப் பதிவினை கட்டாயம் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் காக்கைதீவு, மண்டைதீவு, கல்லுண்டாய் ஆகிய துறைமுகங்களினூடாக கடற்றொழிலில் ஈடுபடும் மீனவர்கள் உட்பட தமது சங்கத்தினர்கள் அனைவரையும் குறித்த பதிவினை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(147)





## கவிதை, பாடல் போட்டி

சாவகச்சேரி ஓக.15
கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் இந்த வருடத்துக்கான தேசிய கலை இலக்கிய போட்டிகளில் மாவட்ட நிலையிலானகவிதை, பாடல், போட்டிகள் நேற்று நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றன.

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களால் பிரதேச செயலக பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட கவிதை, பாடல் போட்டியில்முன்னிலை இடங்களைப் பெற்றவர்கள் மாவட்ட நிலைப் போட்டிக்கு அழைக்கப்பட்டு நேற்று நடுவர்கள் முன்னிலையில் போட்டிகள் இடம்பெற்றன.

போட்டியில் முன்னிலை பெறுவோர் மாகாண நிலைப் போட்டியில் கலந்து கொள்வர்எனத்தெரிவிக்கப்பட்டது(9)

# தையிட்டி பகுதி மக்களுக்கு தண்ணீர் விநியோக திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக 15
வலிகாமம் வடக்கில் தையிட்டி பகுதி மக்களுக்கு தண்ணீர்விநியோகிப்பதற்கு 65மில்லியன்ரூபா நிதி ஏற்பாடுகள் கிடைத்துள்ளதாக , நீர் வழங்கல் சபையின் முகாமையாளர் ஏ.ஜெகதீசன் தெரிவித்தார்

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

வலி. வடக்கில் படிப்படியாக மக்கள் குடியேறி வருகின்றனர். இராணுவத்தால் காணிகள் பகுதி அளவில் விடுவிக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே மக்களின் குடிதண்ணீர் பிரச்சினை மிகவும்முக்கியமானது. தற்போதுமீள்குடியேறியுள்ள தையிட்டிபிரதேசமக்களுக்கானதண்ணீருக்கான தனிப்பட்ட இணைப்புகள் வழங்கப்படவுள்ளது.

மாவட்டச் செயலர் இதற்கான நிதியை ஒதுக்கி தந்துள்ளார். மயிலிட்டிபிரதேசத்தில்ஆரம்பகாலத்தில் அமைக்கப்பட்ட நீர்த் தாங்கி தொகுதி கிணறு காணப்படுகின்றது. அதனை சீரமைப்பு செய்வதன்மூலம்குழாய்இணைப்புகளைமேற்கொள்ள முடியும். 65 மில்லியன் செலவில் தையிட்டி பிரதேச மக்களுக்கான தனிப்பட்ட தண்ணீர் இணைப்பு வழங்கப்படவுள்ளது என்றார். (7)

## வரி செலுத்துவதில் ஆர்வத்துடன் செயல்படும் ஆதனதாரர்களும், வாடகையாளர்களும்

சாவகச்சேரி ஓக. 15
சாவகச்சேரி நகரசபையின் அதிரடி நடவடிக்கைகளின்பயனாகஆதன வரி மற்றும் வாடகை நிலுவைகள் செலுத்துவதில் வரியிறுப்பாளர்களும்வாடகையாளர்களும்ஆர்வத்துடன் காணப்படுகின்றனர் என அறியப்படுகிறது.

சாவகச்சேரி நகரசபையின் கன்னி அமர்வில் சபைக்கு ஆதனங்கள் மற்றும் சபையின் கடைகளின் வாடகை போன்றவற்றினால்பெருமளவு நிதி நிலுவையாக உள்ளதெனவும் ,அவற்றினை அறவிட்டால் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள முடியுமென சபையின் கணக்காளர் தெரிவித்ததையடுத்து.

இதன் பயனாக மூன்று மாதங்களுக்கு மேலாக வாடகைப் பணம் செலுத்தாத சபையின் வர்த்தக நிலையங்களுக்கு,நிலுவையினை செலுத்தக்கோரிநேற்றுமுன்தினம் வரை கால அவகாசம் வழங்கி அறிவித்தல்களைஅனுப்பியிருந்தனர்.

இறுதித் தினமான நேற்றுமுன்தினம் சபைக்கு கிடைக்க வேண்டிய வாடகை நிலுவைத் தொகையின் 75 வீதமான நிலுவை வாடகையாளர்களால் செலுத்தப்பட்டுள்ளன எனவும் ,ஏனையோர் அரைவாசி நிலுவையைச்செலுத்திகாலஅவகாசம் கோரி அனுமதி பெற்றுச் சென்றுள்ளனர்எனத்தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆதனவரிசெலுத்தாதோரின் ஆதனங்களிலிருந்து பொருள்கள்கையகப்படுத்தும்நடுக்கட்டல் நடவடிக்கையை மீண்டும் செயல்படுத்தி நடவடிக்கைகளை செயற்படுத்தவேண்டுமென சபையினால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (9)

# மாந்தை கிழக்கில் நீர் வறண்டுபோன கிணறுகளை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,ஓக15
முல்லைத்தீவு மாந்தை கிழக்கில் வாழ்கின்ற மக்களின்கிணறுகள் அனைத்திலும்தண்ணீர் இல்லாத நிலை காணப்படுவதாகவும் இந்த கிணறுகளை ஆழதோண்ட நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று பிரதேச அமைப்புக்களின் தலைவர்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில்இந்தகோரிக்கைமுன்வைக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக மாந்தை கிழக்கின் உள்ள ஐந்தாயிரம் வரையான கிணறுகள் வற்றி காணப்படுகின்றன, இதனால்குடிதண்ணீரைபெற்றுக்கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள் அத்துடன் விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் மாந்தை கிழக்கின் பிரதேசசபை தவிசாளர் கூறுகையில்

முதற்கட்டமாக 40 குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்துக்கு எமது தொழில் நுட்ப உத்தியோகத்தர் மூலம் தரவுகளை திரட்ட [illegible] துள்ளேன் இந்த , கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு உரிய தரவுகளை திரட்டுமாறு பணிக்க உள்ளதாக தெரிவித்தார்

இவற்றை ஆழப்படுத்த வேண்டும் என்ற மக்களின் கோரிக்கைக்கு அபிவிருத்திக்குழுவின் இணைத்தலைவர் அமைச்சர்றிசாட்பதியூதின் முதற்கட்டமாக 250 கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு பிரதேசத்தில் உள்ள அமைப்புக்களுடன் பேசி கிணறுகளை இனம்கண்டு அதற்கான செலவுவிபரத்தினை அனுப்பிவைத்தால் உடனடியாக பணம் அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். (ரி3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### வடக்கில் பெரும்பாலான உணவகங்களில்

# உணவு தயாரிப்பில் சீர்கேடுகள் தாராளம்! அதனால் பலரும் நோயாளராகியுள்ளனர்

### நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர் எச்சரித்துக் கடிதம்

**யாழ்ப்பாணம், ஒக.15**

**வடக்குமாகாணத்தில்பெரும்பாலானஉணவகங்களில்உணவுதயாரிப்பில்கையாளப்படும் நடைமுறைகள் உரியமுறையில் அமையவில்லை. அதனால் ஏற்படும் தாக்கங்கள்இன்றுபெரும்பாலானமக்களைப்பல்வேறுகொடியநோய்களுக்குஉள்ளாக்கி வருகின்றன. இது தொடர்பாகச் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்புடன் இறுக்கமான பரிசோதனை நடைமுறைகளைக் கடைப்பிடியுங்கள்.**

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்துள்ளார். இந்த அறிவிப்பை மாகாணத்தில்உள்ளஉள்ளூராட்சிமன்றங்களுக்கு அறிவிக்குமாறும் முதலமைச்சர் பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

உணவுதயாரிப்பின்போது, சுவையூட்டுவதற்கு இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்தல், பாவித்த எண்ணெய் வகைகளை மீளப்பயன்படுத்தல், சில உணவுப் பொருள்கள் இழகாது இருப்பதற்கு எண்ணெய்க்குள் பிளாஸ்ரிக் வகைகளைப் பயன்படுத்தல், குளிர்சாதனப்பெட்டியில்நீண்டநாள்களாக வைக்கப்பட்ட மாமிச வகைகள் உரிய காப்பீடு இன்றி உணவாகத் தயாரிக்கப்படுதல், சமைத்த கறிவகைகளில் பார்க்கும் போது எண்ணெய்ப்படலங்கள் மிதத்தல், கொத்து ரொட்டி தயாரிக்கும்போது வரையறையின்றிப்பலவிதஇரசாயனப் பொருள்கள் மற்றும் அதிகமான எண்ணெய் பாவிக்கப்படுதல், பழவகைகள் இயற்கைமுறையில்பதனீடுசெய்யாமல் இரசாயனப் பொருள்களைக் கொண்டு பழுக்க வைத்தல் போன்றவை காணப்படுகின்றன. வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சிமன்றஎல்லைக்குள்இயங்கும்சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள், தேநீர்க்கடைகள், கோப்பிக் கடைகள், தங்குமிடவிடுதிகள், பழக்கடைகள், குளிர்ப்பான விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் செயற்பாடுகளில்மேற்குறித்த தீர்மானத்தில் குறிப்பிட்ட விளைவுகள் தொடர்பாகச் சட்டங்கள், நியதிச் சட்டங்கள், துணைவிதிகள்என்பவற்றுக்கு ஏற்ப இறுக்கமான பரிசோதனை நடைமுறைகளைக்கடைப்பிடிக்குமாறுமுதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சகலஉள்ளூராட்சிமன்றங்களின்முதல்வர், தலைவர்களுக்கும்மாநகரஆணையாளர் அல்லது செயலாளர்களுக்கும் இவற்றைத் தெரிவிக்குமாறும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தவிடயத்தில்சுகாதாரமருத்துவஅதிகாரிகளின் முழுமையான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளுமாறும் பணித்துள்ளார். வடக்கு மாகாண சபையின் கடந்த மாதம் 10ஆம் திகதிய 126 ஆவது அமர்வின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேற்கண்ட விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும்தெரிவிக்கப்பட்டது. (4,9)



## இயற்கை முறையில் நெல் உற்பத்தி

### யாழ்ப்பாணத்தில் பரீட்சார்த்தம்

யாழ்ப்பாணம், ஒக. 15

வடக்கு மாகாணத்தில் பரந்தனில் இயற்கை முறை விவசாயத்திலான நெல் உற்பத்தி இந்த முறை வெற்றியளித்துள்ளது. ஆகவே யாழ்ப்பாண மாவட்டத்திலும் இயற்கை முறையில் நெல் உற்பத்தி செய்வதற்கான பரீட்சார்த்தம் நடைபெறவுள்ளது என்று மாவட்டச் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டச்செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டதில் அரச தலைவர் செயலகத்தின் விவசாய ஆராய்ச்சி மற்றும் தொழில் முயற்சிபணியகத்தின்தலைவர்அசோகாஅபயகுணவர்தனமற்றும்அதிகாரிகள்பலர்பங்குபற்றியிருந்தனர்.

அங்கு மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்குத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் இயற்கை முறை விவசாயத்தில் நெல் உற்பத்தி வெற்றி பெற்றுள்ளது. இதன்மூலமாக கிருமி நாசினியற்ற, நஞ்சற்றஉணவைஉற்பத்திசெய்வதே நோக்கம்.

யாழ்ப்பாணத்தில் முதற்கட்டமாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்மற்றும் விவசாயம்சார்ந்த போதனா அதிகாரிகளுக்கு இவை தொடர்பில் இரண்டுநாள்பயிற்சிகள்வழங்கப்படவுள்ளன. அவர்கள் அதனைக் கற்று விவசாயிகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். அதன்பின்னர் இயற்கை முறையில் நெல் உற்பத்தி செய்யத் தயாராக உள்ள விவசாயிகளுக்கும் ஆலோசனைகள், மானியங்கள், உதவிகள் வழங்கப்படும். ஆரம்பத்தில் இந்த மண்ணுக்கு இந்த முறைகடினமாகஇருந்தாலும்இரண்டுவருடங்களில் நஞ்சற்ற நெல்லை, உணவை உற்பத்தி செய்ய முடியும்என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இயற்கை முறை விவசாயத்தில் நெல் பயிரிடுவதற்கு ஆர்வம் உள்ளவர்கள் அரச தலைவர் செயலகத்தின் வழிகாட்டலின் கீழ் ஊக்குவிக்கப்படவுள்ளனர் என்றும் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**புகையிலைக்கு மாற்றுப்பயிர்**

2020ஆண்டுபோதையேற்றநாட்டைஉருவாகும்நோக்கில் புகையிலை உற்பத்தியைப் படிப்படியாகநிறுத்துமாறுஅரசதலைவர்திட்டங்களை தயாரித்து வருகின்றார். புகையிலை மக்களின் வாழ்வாதாரப் பயிராகக் காணப்படுகின்றது. ஆகவே புகையிலைச் செய்கையைக் கைவிடுவதற்கு மாற்றுப்பயிர் வேண்டும் என்று விவசாயிகள் கோரிவருகின்றனர். புகையிலைக்கு மாற்றுப்பயிராக உருளைக்கிழங்கு சிறந்தது என்று விவசாயம் சார்ந்த சங்கங்கள் தெரிவித்தன.

ஒரு ஏக்கருக்கு ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா என்றவகையில்புகையிலையில்இலாபம்ஈட்ட முடியும். அதேயளவானவருமானம்உருளைக் கிழங்குச் செய்கையிலும் கிடைக்கும். ஆகவே மானிய விலையில் விதை உருளைக் கிழங்கு கிடைத்தால் அதிக நன்மை கிடைக்கும். அதே போன்று உருளைக் கிழங்குக்கான நிரந்தர விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும். அப்படிச் செய்தால் புகையிலைக்கு மாற்றுப்பயிராக உருளைக்கிழங்கைப் பயிரிடலாம் என்று தெரிவித்தனர்.

இந்தச் செய்கையில் ஈடுபட கோப்பாய் மற்றும் உடுவில் பிரதேச விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர் என்று விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்தில் மாவட்ட விவசாயம் சார்ந்த அதிகாரிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், பிரதேச செயலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (4,7)

## சிறப்பு அங்காடிகளாக தரமுயர்கின்றன கற்பகங்கள்

யாழ்ப்பாணம், ஒக. 15

பனை அபிவிருத்திச் சபையின் கற்பகம் விற்பனை நிலையங்களை சிறப்பு அங்காடிகளாக மாற்றியமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதுமுதற்கட்டமாகநல்லூரில்உள்ளகற்பகம்சிறப்பு அங்காடி விற்பனைக்கூடமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அடுத்தகட்டமாகக்கொழும்பு வெள்ளவத்தையில் உள்ள கற்பகம் சிறப்பு அங்காடி விற்பனைக் கூடமாக மாற்றியமைக்கப்படவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையின்கே.கோபாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

மக்களைக் கவரும் வகையில் கற்பகம் விற்பனை நிலையங்கள் யாவற்றையும் சிறப்பு அங்காடி விற்பனைக் கூடங்களாக மாற்றவும் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த வருடத்துக்குள் பல கற்பகங்கள் சிறப்பு அங்காடிகளாக மாற்றப்படும் என்று சபையினர்மேலும்தெரிவித்தனர்.

பனம்பொருளிலான உற்பத்திகளை அதிகரிக்கவும் மக்களுக்கான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கிலும் பனம் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யும் கற்பகங்கள் சிறப்பான கவர்ச்சியான கண்காட்சி மற்றும்விற்பனைக்கூடங்களாக அமையவேண்டும் என்றுமுன்னர்வலியுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4,17)

## அரசமைப்புப் பற்றிய சுமந்திரனின் கருத்து தமிழ் மக்களை நட்டாற்றில் தள்ளியுள்ளது

### சுரேஸ் பிரேமச்சந்திரன் கூறுகிறார்

வவுனியா, ஒக. 15

புதிய அரசமைப்புதமிழரின் அபிலாசைகளை முழுமையாகத் தீர்காதுஎன்றுசுமந்திரன் கூறியிருப்பது, தமிழ் மக்களை நட்டாற்றில் தள்ளிவிட்டுள்ளதற்கு ஒப்பானது என்று முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சுரேஸ்பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின்மையக்குழுக்கூட்டம் வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. கூட்டம்நிறைவடைந்து மண்டபத்துக்கு வெளியே வந்த அவரிடம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்புக்கான வரைவை உருவாக்கும்பணிகளைச்சகலகட்சிகளும்இணைந்து உருவாக்கி வருவதால் இது முழுமையாகத் தமிழ்மக்களின் அபிலாசைகளைப் பூர்திசெய்யாது என்று சுமந்திரன் ஊடகங்களுக்குச் செய்தி வெளியிட்டிருக்கின்றார். புதிய அரசமைப்பு கூட்டாட்சிக்குச் சமமானது என்றும் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்திசெய்யும் என்றும் அந்த அடிப்படையில் தான் தாங்கள் தொடர்ந்து பேச்சு நடத்திவருவதாகவும்நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரன் முன்னர் கூறியிருந்தார்.

தமிழ்மக்களின்தேசியப்பிரச்சினைக்குதமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிரந்தரமான ஒருதீர்வைஉருவாக்கவேண்டும்என்றஅடிப்படையிலேயேதான் இந்த வரைவுக்கான தேவை உணரப்பட்டது. இந்த வரைவு வெறுமனே தேர்தல் மாற்றங்களை உண்டாக்குவதற்கும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை மாற்றுவதற்கு மட்டுமானதல்ல.

சம்பந்தனும் தொடர்சியாக தமிழ்மக்களுக்கு இருக்கக்கூடியஅத்தனைபிரச்சினைகளையும் மறந்துஅரசமைப்பைநிறைவேற்றவேண்டும் என்றும்தேசியக்கட்சிகள் ஒன்றிணைந்திருக்கிறன. இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அதனைச் செய்யவேண்டும் என்றும் கூறியிருந்தார். ஆனால் இன்று அந்த அபிலாசைகள் தீர்க்கப்படாது என்று சொன்னால் அந்தப்புதிய அரசமைப்புக்கான தேவை இல்லை என்றே கருதவேண்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கான தேசியப் பிரச்சினைக்



கானதீர்வுஅங்குஇல்லைஎன்றால்அதுதமிழ் மக்களை முற்றுமுழுதாக ஏமாற்றுகின்ற செயற்பாடு. அரசுக்கு என்ன தேவையோ அரசின் நிகழ்ச்சிநிரலை எவ்வாறு நடத்த விரும்புகிறார்களோ அந்நதவகையில் தான் சுமந்திரன், சம்பந்தன் போன்றோரது செயற்றிட்டங்களும் இருக்கின்றன.

முன்னர் நாடாளுமன்றில் பிணைமுறி விவகாரத்தில்விவாதங்களைநடத்துமாறுஎதிர்த்தரப்புகள் கூறியபோது ஆங்கில, தமிழ் மொழிபெயர்ப்புஇல்லாததால்மொழிபெயர்க்கப்பட்ட பிறகேவிவாதங்களைநடத்துமாறுஐக்கியதேசியகட்சி அரசைக் காப்பாற்றியிருந்தார். இப்பொழுது அரசமைப்பு தமிழரின் உரிமைகளைத் தீர்காது என்றுகூறி நட்டாற்றில் விட்டு இலங்கை அரசுக்குத் தேவை எதுவோ அதனைநிறைவேற்றும்வேலையையேசெய்துகொண்டுவருகின்றார்.

இவ்வாறு தமிழ் மக்களைத் தொடர்சியாக ஏமாற்றிவருவது மாத்திரம் அல்லாமல் இவர்கள் என்ன காரணத்துக்காக அரசுடன் இணக்கப்பாட்டுடன் செயற்பட்டார்கள் என்பதையும் மறந்து செயற்படுவதுடன் இந்த ஏமாற்றுத்தனங்களுக்கு முடிவுகட்டவேண்டிய காலம் வந்திருப்பதாகவும்நாம்கருதுகிறோம். சுமந்திரனோ அல்லது தமிழ்தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இவர்கள் செய்யக்கூடிய இவ்வாறான நடவடிக்கைகளை அதில் அங்கம் வகிக்கின்ற ரெலோ, புளொட் போன்ற அமைப்புகள் எவ்வாறு நோக்குகின்றன என்பதையும் தமிழ்மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டிய காலம்வந்துவிட்டதாகவும்நான்கருதுகிறேன் என்று தெரிவித்தார். எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் புதிய கூட்டணி அமைப்பீர்களா என்று கேட்டதற்கு அதெல்லாம்நடக்கும் என்று தெரிவித்தார். (4,110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கல்வி நிர்வாக சேவையில்*

## தரம் 1க்குத் தெரிவானோரின் பெயர்விவரங்கள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஒக. 15

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1க்குத் தேர்வான 79 பேரின்பெயர்ப்பட்டியல்நேற்றுவெளியாகியது. அதில்வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு உட்பட்ட அதிகாரிகள் 14பேரின் விவரங்கள் உள்ளடங்கி உள்ளன.

வடக்கு மாகாண கல்வி நிர்வாகத்தில் பணியிலிருந்த அதிகாரிகளில் கல்வி நிர்வாக சேவை தரம் 1க்காகக் கடந்த மே மாதம் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. இதில் 274 அதிகாரிகள்தோற்றியிருந்தனர். அவர்களில்கல்விநிர்வாக சேவைதரம்1க்கானநியமனஅனுமதிநேற்றுவெளியாகியது. இவ்வாறுவெளியிடப்பட்டபட்டியலில்நாடுபூராகவும்79பேர் தகுதி பெற்றுள்ளனர்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 14 அதிகாரிகள் தரம் 1க்குத் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் 7 பேர் மட்டுமே தற்போதும் பணியில் உள்ளனர்.

ஏனைய 7 பேரும் ஓய்வுபெற்றுச் சென்றுவிட்டனர். இதேநேரம் தற்போதும் பணியில் உள்ள 7 பேரில் 3 பேர் இந்த வருடம் ஓய்வு பெற்றுச் செல்லவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,105)

---

*வடக்கு மாகாண சபையின்*

# அமைச்சரவைக்கூட்டம்நடைபெறாததால் 270பேருக்கான நியமனங்கள் இழுபறி

**யாழ்ப்பாணம், ஒக. 15**

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காவலாளி மற்றும் பாடசாலை உதவியாளர்களாக 270 பேரை நியமிப்பதற்கான சந்தர்ப்பம் உள்ளபோதும் அது இழுபறியில் உள்ளது. வடக்கு மாகாண அமைச்சரவை கூடாததாலேயே இந்த இழுபறி நிலை நீடிப்பதுடன் காலந் தாழ்த்தப்படுகிறது என்று உயர் அதிகாரிகள் கூறுகின்றனர்.**

வடக்குமாகாணக்கல்விஅமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் காவலாளி மற்றும் பாடசாலை உதவியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

அவற்றை நிரப்பும் நோக்கில் திரட்டப்பட்டதகவலின்அடிப்படையில் ஆளணி அங்கீகாரம் உள்ள வெற்றிடங்களை நிரப்பக் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளது. தற்போது இரு பணிகளுக்கும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில்மொத்தம்270வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த 270வெற்றிடங்களையும்நிரப்புவதற்காகப் பத்திரிகை விளம்பரம் கோரல் மூலமாக விண்ணப்பங்களைப் பெற்று அடுத்த கட்டத்துக்குக் கொண்டுசென்று நியமனங்களை வழங்க ஏற்பாடுகளைச் செய்யமுடியும்.

இருப்பினும் தற்போது இதற்கான அனுமதியைப்பெறுவதற்காகவடக்கு மாகாணஅமைச்சரவைஅங்கீகாரத்தைப் பெறமுடியாது. ஏனெனில் வடக்குமாகாணஅமைச்சர்வாரியம் தொடர்பில் சட்டப் பிரச்சினை நீடிக்கிறது. அமைச்சரவையைக்கூட்டுவதற்கான அனுமதியை வடக்கு மாகாண ஆளுநர்மறுஅறிவித்தல்வரைநிறுத்தியுள்ளார். அதனால் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெறவில்லை. அதனால்இந்தநியமனம்மட்டுமன்றி பல விடயங்களும் இழுபறியில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் அடிப்படையில் குறித்த பணிகளுக்கானவிண்ணப்பம்கோரலுக்கான அனுமதியைப் பெறுவதில் உள்ளஇடையூறுகாரணமாகக்காலதாமதம்நிலவுகிறது. வடக்குமாகாண சபையின் ஆயுட்காலமான எதிர்வரும் ஒக்ரோபர் 25ஆம் திகதிவரை காத்திருக்கும் நிலமை ஏற்படுமோ என்ற அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் வடக்கு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான சந்தர்ப்பத்தைக் காலந்தாழ்த்தாது மாற்றுஏற்பாடுகளின்மூலமாகஉரிய நியமனத்தை விரைவாக வழ்ங்க நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்று கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

"குறித்த வெற்றிடத்தை நிரப்புவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் சி.சத்தியசீலன் தெரிவித்தார். (4,105)

---

## சபையின் தண்ணீர் விநியோகம் சீரின்றிப் பொதுமக்கள் பாதிப்பு

*நடவடிக்கை எடுப்பதாகத் தவிசாளர் தெரிவிப்பு*

கிளிநொச்சி, ஒக. 14

பளையின் இத்தாவில் கோவில்காடுகிராமத்திற்கு பிரதேசசபை வழங்கிவரும்குடிதண்ணீர்விநியோகம் விடுமுறை நாள்களில் வழங்கப்படுவதில்லை என்று பிரதேசத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட கிராமமேகோவில்காடு. அங்கு காடுகள் அழிக்கப்பட்டுத் தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டு மக்கள் வசித்து வருகின்றனர். இரண்டு மாதங்களுக்கு முன்னர் குறித்த பகுதியில் வீசிய கடும் காற்றுக்காரணமாக அங்குள்ள குடும்பங்கள் பாதிக்கப்பட்டு பொது மண்டபத்தில் சமார் 5 நாள்களாகத் தங்கியிருந்தனர்.

கிராமத்தில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகம் மற்றும்பிரதேசசபைதண்ணீர்த் தாங்கிகளை வைத்துத் தண்ணீர் விநியோகம்செய்தது. ஆனால் சனி, ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் பொது விடுமுறைநாள்களில்குடிதண்ணீர் வழங்கப்படுவதில்லை என்று பிரதேசத்தவர்கள்தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகஒன்றுவிட்டஒரு நாள் தண்ணீர் விநியோகம்இடம்பெறுகிறது. வியாழக்கிழமைகளில் தண்ணீர் வழங்கப்பட்டு வெள்ளிக்கிழமை விடுமுறை எனில்சனிமற்றும்ஞாயிறு உட்பட 3 நாள்களுக்குச் சபைதண்ணீர்வழங்குவதில்லை. அதனால் தாம் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு உடனடித் தீர்வு பெற்றுத் தருமாறு அவர்கள்கோருகின்றனர்.

"ஏற்கனவே இதுபற்றி முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாகத் தண்ணீரை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்று" பச்சிலைப் பள்ளி தவிசாளர் சு.சுரேன் தெரிவித்தார். (4,6)

---

## முன்பள்ளிகளின் 150 ஆசிரியர்களுக்கு விசுவமடு இராணுவ முகாமில் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக. 15

கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு விசுவமடு இராணுவ முகாமில் ஒரு மாதப் பயிற்சி வழங்கப்படுகின்றது.

கடந்த29ஆம்திகதிதொடக்கம்விசுவமடுசிவில்பாதுகாப்புத் திணைக்களத்தின் முகாமில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. குறித்த பயிற்சிக்காக இரண்டு மாவட்டங்களின் முன்பள்ளி ஆசிரியர்கள் 150 பேருக்கு ஒரே தடவையில் குறித்த பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

ஆசிரியர்கள் இரவு பகலாகக் குறித்த முகாமிலேயே தங்க வேண்டும். இந்தப்பயிற்சிஎதிர்வரும்23ஆம்திகதிநிறைவு பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் திருமணம் ஆனவர்கள் மற்றும் திருமணமாகாதவர்கள் என்பதற்கு அப்பால் சிறு பிள்ளைகளின் தாய்மாரும் அதிகளவில் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் இராணுவச் சீருடையைப் போன்ற உடை அணிதல் வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாவட்டங்களைச் சேர்ந்த குறித்த முன்பள்ளிகளில் பணிபுரியும்ஆசிரியர்களில்சுமார்200பேருக்குச்சிலமாதங்களுக்குமுன்னர்இந்தப்பயிற்சிகள்வழங்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (4,105)

---

*மறுவாழ்வு பெற்று வெளியேறியோரில்*

## முன்னாள் போராளிகள் 3,266 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கவில்லை

*மீள்குடியேற்ற அமைச்சின் தகவல்கள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக. 15

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில்இருந்துமறுவாழ்வுபெற்றுவெளியேறிய 12 ஆயிரத்து 186 போராளிகளில் 8 ஆயிரத்து 920 போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று மீள்குடியேற்ற அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009ஆம் ஆண்டு போர் ஓய்வின் போது படையினரிடம் சரணடைந்து மறுவாழ்வின் பின்னர் விடு விக்கப்பட்ட12ஆயிரத்து186போராளிகளில், சுமார் 2 ஆயிரம் வரையிலானோர் சிவில்பாதுகாப்புத்திணைக்களத்தின் கீழ்உள்ளபண்ணைகளில்பணியாற்றுகின்றனர்.

அவ்வாறு பணியாற்றும் மறுவாழ்வு அளிக்கப்பட்டவர்களுக்கும் அப்பால் அரசின் திணைக்களங்களில் இது வரை 928 பேருக்கு அரச வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த 928 போராளிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 372 போராளிகளுக்கும், கிளிநொச்சியில் 165 போராளிகளுக்கும், மன்னார் மாவட்டத்தில் 48 போராளிகளுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவுமாவட்டத்தில்133போராளிகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 39 போராளிகளுக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 77 போராளிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 70 போராளிகளுக்கும், அம்பாறையில் 18 போராளிகளுக்குமாக மொத்தம் 928 போராளிகளுக்கு அரச வேலைவாய்ப்புக்கள்வழங்கப்பட்டுள்ளன.

இதேநேரம்மறுவாழ்வின்பின்னர், 8 ஆயிரத்து 920 போராளிகளுக்கும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு உதவி பெற்ற திட்டங்களில் வீட்டுத்திட்ட உதவியாக மட்டும் ஆயிரத்து 578 முன்னாள் போராளிகளுக்கும், கடன்திட்ட உதவியாக 2 ஆயிரத்து 365 போராளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளனஎன்றுஅமைச்சு தெரிவிக்கின்றது. (4,105)

---

## சாவகச்சேரியில் வேகக் கட்டுப்பாடு கடுமையாக நடைமுறைப்படுத்தவும்

தவிசாளர் பொலிஸாருக்குக் கடிதம்

சாவகச்சேரி, ஒக.15

சாவகச்சேரி நகரப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

சாவகச்சேரிநகரசபைத்தவிசாளர்சாவகச்சேரிநகரப்பகுதியில்பேருந்துநிலையம், கல்லூரிகள், வங்கிகள், மருத்துவமனை, பிரதேச செயலகம், வர்த்தக நிலையங்கள் மற்றும் சந்தை போன்றவை முதன்மைச் சாலையுடன் அமைந்துள்ளன. பெரும் எண்ணிக்கையானமக்கள்தினமும்நடமாடுகின்றனர். இந்தநிலையில் முதன்மைச் சாலையூடாகவரும் வாகனங்கள் வேகக் கட்டுப்பாடின்றி வருகின்றன. அதனால் அடிக்கடி விபத்துகள் இடம் பெறுகின்றன.

இதனைத்தவிர்க்கும்முகமாகசாவகச்சேரிதொடருந்துநிலையச்சந்திதொடக்கம்சாவகச்சேரிமருத்துவமனைவரையான பகுதியில் வேகக்கட்டுப்பாட்டுக் குறியீடுகளை அமைக்கப் பொலிஸாரின் உதவியை நாடவேண்டும் என்று கடந்த வாரம் இடம்பெற்ற சபை அமர்வில் உறுப்பினர் நடனதேவன் தீர்மானம் சமர்ப்பித்திருந்தார். அது தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

அதையடுத்துப் பொலிஸாருக்குத் தவிசாளர் கடிதம் அனுப்பியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, முன்னையசபைஇயங்கிய காலத்தில் எடுக்கப்பட்ட தீர்மா னத்தின்படிசரக்குகள்ஏற்றிவரும்வாகனங்கள் ஒன்றுவிட்டு ஒருநாள் ஒரு பக்கம் என்ற ரீதியில் வீதியோரங்களில் அறிவித்தல் பலகைகள் போடப்பட்டிருந்தன. அவைதற்போதுஅந்தஇடங்களில் காணாமற்போயுள்ளன.

அந்தச் செயற்பாட்டை மேற்கொள்ளுமாறும் தீர்மானத்தில் கேட்டிருந்தார். அதற்கான அறிவித்தல் பலகைகளை நடநடவடிக்கைகள்எடுக்கப்படும்என்று மேலும்தெரிவிக்கப்பட்டது. (4,9)

---

*தென்மராட்சியில்*

## பாடசாலைக் கிணறுகளின் தண்ணீர் பரிசோதனையில்

சாவகச்சேரி, ஒக. 14

தென்மராட்சிக்கல்விவலயப்பாடசாலைகளில்மாணவர்கள்பாவிக்கும்குடிதண்ணீரைபரிசோதிக்கும்நடவடிக்கையில்சாவகச்சேரிசுகாதாரத்திணைக்களத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

பாடசாலைகள்பலவற்றில்காணப்படும்கிணறுகளில்உள்ளதண்ணீரால்மாணவர்களுக்கு நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காகக் கிணற்றுநீரை இரு போத்தல்களில் சேகரித்து உயிரியல் இரசாயனவியல் பரிசோதனைகளுக்காக நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஆய்வுகூடத்துக்கு அனுப்புகின்றனர்.

பாடசாலைக் கிணறுகள் சில காவித்தன்மை கொண்டவையாகவம் சில உவர்த் தன்மை கொண்டவையாகவும் காணப்படுகின்றன. இவற்றை மாணவர்கள் அருந்துவதாலும் மதிய உணவுச் சமையலுக்குப் பயன்படுத்துவதாலும் பாதிப்பு ஏற்படும்வாய்ப்புகள்உள்ளனவா என்று ஆய்வுசெய்வதற்காக ஆய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டது. (4,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவி துர்நடத்தை: மாமனார் கைதானார்

கொழும்பு, ஓக. 15
மாத்தளை - வில்கமுவ பிரதேசத்தில் 9 வயதான பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துர்நடத்தைக்கு உள்ளாகியுள்ளார். இந்தக் குற்றச்சாட்டில் மாணவியின் மாமா முறையான உறவினர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சந்தேக நபர் எப்பாவல பகுதியில் வீடுகளுக்குச் சென்று தேங்காய் வியாபாரம் செய்து வருபவர் என்று தெரிவிக்கப்பட்டது.
குறித்த நபர் மாணவியின் மாமியைத் திருமணம் முடித்து சிறுமியின் வீட்டில் தங்கியிருந்து தேங்காய் வியாபாரத்தில் ஈடுபடுபவர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். விசாரணை இடம்பெறுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (4)

# சீசா வில் கஞ்சாவுடன் 5 இளைஞர்கள் கைது

கொழும்பு. ஓக. 15
அரபு நாடுகளில் பயன்படுத்தப்படும் சீசா இயந்திரத்தினுள் கஞ்சா வைத்துப் பாவித்துக் கொண்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மட்டக்களப்பின் காத்தான்குடியில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர்களிடமிருந்து கேரளா கஞ்சா. கஞ்சா சீசா தூள் மற்றும் வெளிநாட்டு சிகரட் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.
நேற்று அதிகாலை ஒரு மணியளவில் காங்கேயனோடை பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
டுபாய் உட்பட அரபு நாடுகளில் குறித்த சீசா பாவனையில் உள்ளது. குறித்த இயந்திரத்தினுள் சீசா தூளுக்குப் பதிலாக கஞ்சாவை வைத்து குறித்த இளைஞர்கள் பாவித்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைதான நபர்களிடமிருந்து ஜோர்தானில் தயாரிக்கப்பட்ட ஒருதொகை சீசா தூளும் கைப்பற்றப்பட்டுள்ளது.
கைதானவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (4)



# இலங்கைத் துணைத்தூதர் முத்துமாரியிடம் வழிபாடு

கொழும்பு. ஓக. 15
பிரிட்டனில் உள்ள இலங்கை பதில்தூதர் சுஜீஸ்வரா குணரத்ன லண்டனில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுள்ளார்.
கடந்த 9ஆம் திகதி லண்டனில் உள்ள சிறிமுருகன் ஆலயத்தில் அவர் வழிபாடுகளில் ஈடுபட்டார். லண்டனில் உள்ள இலங்கைத் தூதரக டுவிட்டர் தளத்தில் இது குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கோவிலில் இடம்பெற்ற இரதோற்சவத்தில் அவர் கலந்துகொண்டு வழிபாடு செய்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பொலிஸ் அதிகாரங்கள் எவையும் ராணுவத்தினருக்கு வழங்கப்படா!

## பிரதியமைச்சர் நளின் பண்டார கூறுகிறார்



கொழும்பு, ஓக. 15
பொலிஸ் அதிகாரங்கள் ஒருபோதும் இராணுவத்தினருக்கு வழங்கப்படாது என்று பிரதியமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார். இராணுவ அதிகாரங்களை மகிந்த போன்று கூட்டரசு தவறான வழியில் பயன்படுத்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் அதிகாரங்களை இராணுவத்தினருக்கு வழங்கி, நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் அரசு செயற்பட்டு வருகிறது என்று முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி தொடர்சசியாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றது.
இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போதே பிரதியமைச்சர் நளின் பண்டார மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அரசதலைவருமான மகிந்த ராஜபக்ச பொலிஸ் அதிகாரங்கள் முப்படையினருக்கு வழங்கப்படவுள்ளன என்று கூறுகிறார். இந்தக் கருத்தில் எதுவித உண்மையும் கிடையாது. ராஜபக்ச குடும்பத்தவர்கள் தமது ஆட்சிக்காலத்தில் பொலிஸ் அதிகாரங்களை மாத்திரமன்றி இராணுவ அதிகாரங்களையும் முறைகேடாகப் பயன்படுத்தினர். எனினும் தற்போதைய கூட்டரசு பொலிஸாருக்கு உரிய அதிகாரங்களை வழங்கியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## ஆபிரிக்காவின்

# கிளிமஞ்சரோ மலை உச்சியில் நாமல், ரோகிதவுடன் காதலியும்



கொழும்பு. ஓக. 15
ஆபிரிக்காவின் மிக உயரமான மலைச்சிகரமான தான்சானியாவில் உள்ள கிளிமாஞ்சாரோ மலை உச்சிக்கு இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஸ, ரோஹித்த ராஜபக்ஸ மற்றும் அவரது காதலி டட்யனா லீ ஆகியோர் சென்றுள்ளனர்.
இதன்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை நாமல் ராஜபக்ஸ தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டு தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளார். அதில் இந்த வருடத்தின் இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம் என்று தமது மகிழ்ச்சியை பதிவிட்டுள்ளார். மேலும். "ஒன்பது வருட தொடர் முயற்சியின் பின்னர் தங்காலையில் இருந்து கிளிமாஞ்சாரோவுக்கு வந்துள்ளதால் ரோஹித்த ராஜபக்ஸவுக்கும், டட்யனா லீக்கும் எனது நன்றிகள். நீங்கள் எனக்கு மிகவும் விருப்பமான ஜோடிகள். உங்கள் இருவரின் வெற்றிக்கு அன்பும், ஆசீர்வாதமும் என்றும் இருக்கும். நிச்சயமாக இந்த தருணமே இந்த வருடத்தில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியான தருணம்" எனவும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், ரோஹித்த மற்றும் அவரது காதலியுடன் நாமல் எடுத்த ஒளிப்படத்தையும், ரோஹித்தவின் காதலியுடன் ரோஹித்த இருக்கும் புகைப்படத்தை யும் நாமல் பதிவிட்டுள்ளார். (4)




# தபால்மா அதிபராக ரஞ்சித் ஆரியரத்ன நேற்று நியமனம்

கொழும்பு, ஓக. 15
புதிய தபால் மா அதிபராக பொலன்னறுவை மாவட்டச் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமானமானது நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# சவப்பெட்டியை வீதியில் வைத்து தொழிலாளர்கள் போராட்டம்

கொழும்பு, ஓக. 15
அக்கரப்பத்தனை, வெவர்லி தோட்டத் தொழிலாளர்கள் சவப்பெட்டியை முதன்மைப் பாதையில் வைத்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
வெவர்லி தோட்டத்தில் கடந்த சனிக்கிழமை இருவர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். நேற்று வேவர்லி தோட்ட பொது மைதானத்தில் இருந்து முற்பகல் 9 மணிக்கு உணவு தவிர்ப்பில் ஈடுபட்டவர்களில் ஒருவர் சவப்பெட்டியில் வைக்கப்பட்டு டயகம. தலவாக்கலை முதன்மைப் பாதைக்குக் கொண்டு செல்லபபட்டு அங்கு வைத்துப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.
இந்த போராட்டத்தால் டயகம, தலவாக்கலை பாதையூடான போக்குவரத்துக்கு சில மணித்தியாலங்கள் தடைப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த அக்கரப்பத்தனை பொலிஸார் போக்குவரத்துக்கு இடைஞ்சலை ஏற்படுத்தாதவாறு போராட்டத்தை நடத்துமாறு கோரிய நிலையில் போராட்டக்காரர்கள் சவப்பெட்டியை பாதை ஓரத்தில் வைத்து போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். மேலும். கிளாஸ்க்கோ தோட்டத்தின் மூன்று பிரிவுகளை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் வேவர்லி தோட்டத்தின் ஐந்து பிரிவுகளை சேர்ந்த தொழிலாளர்கள் தொழில் பகிஸ்கரிப்பில் ஈடுபட்டு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கி வருகின்றனர். (4)

# அலைபேசி வைத்துக்கொண்டு பரீட்சை எழுதியவர் சிக்கினார்

கொழும்பு, ஓக. 15
கம்பஹாவிலுள்ள பரீட்சை நிலையமொன்றில் உயர்தரப் பரீட்சைகது தோற்றிய மாணவரொருவர் வசமாக சிக்கிக் கொண்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.
குறித்த மாணவன் நேற்று முன்தினம் அலைபேசியை உபயோகித்து பரீட்சை எழுதியபோதே மேற்பார்வையாளரிடம் சிக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இதனையடுத்து பரீட்சை மேற்பார்வையாளரால் மாணவனிடமிருந்து அலைபேசி பறிக்கப்பட்ட போதும், அன்றைய தினத்துக்கான பரீட்சையை மாணவன் நிறைவு செய்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# பாடசாலைச் சீருடை பெறுவதற்கான வவுச்சர் நேரகாலத்துடன் வழங்கப்பட்டுவிடும்

## கல்வி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு. ஓக. 15
பாடசாலைச் சீருடைத் துணிக்கான வவுச்சர் இந்த ஆண்டில் நேர காலத்துடன் வழங்கப்படும் என்று கல்வி இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதாரண தெரிவித்தார்.
அடுத்த மாதம தொடக்கம் வவுச்சர்களை மாணவர்களுக்கு வழங்குவது கல்வி அமைச்சின் இலக்கு. அரச பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கும், பிரிவெனாக்களில் கற்கும் பிக்குகளுக்கும் இந்த வவுச்சர் வழங்கப்படவிருக்கிறன. இதற்கென அரசு இந்த ஆண்டில் 250 கோடி ரூபாவை செலவிடுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனாவால் அச்சிடப்படும் இலங்கை நாணயத்தாள்கள்



கொழும்பு,ஒக15
இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் நாணயத்தாள்களைசீனாவேஅச்சிடுவதாக,சவுத்சைனாமோர்னிங் போஸ்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏனைய நாடுகளின் பொருளாதாரங்களில் செல்வாக்கைக் கட்டியெழுப்பும் வகையில், பெரியளவில் வெளிநாட்டு நாணயத்தாள்களைச் சீனா அச்சிடுகிறது.

சீனாவில் உள்ள நாணயத்தாள் அச்சிடும் தொழிற்சாலைகள்முழுஅளவில்இயங்கிக்கொண்டிருக்கின்றன. அண்மைக்காலம் வரை சீனா வெளிநாட்டு நாணயத்தாள்களை அச்சிடவில்லை என்று சீனாவின் வங்கி நாணயத்தாள்கள் அச்சிடும் நிறுவனத்தின் தலைவரான லியூ கியூஷேங், தெரிவித்துள்ளார்.

அணை மற்றும் பாதை திட்டம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டுஆண்டுகளுக்குப்பின்னர், நேபாளநாணயத்தாள்களை அச்சிட ஆரம்பித்தது என்று சைனா பினான்ஸ் இதழில் லியூ எழுதியுள்ள கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதற்குப் பின்னர், தாய்லாந்து, பங்களாதேஷ், இலங்கை, மலேசியா, இந்தியா, பிரேசில், போலந்து உள்ளிட்ட நர்டுகளின் நாணயத்தாள்களை அச்சிடுவதற்கானவாய்ப்புக்கள்கிடைத்தனஎன்றும்அவர்தெரிவித்துள்ளார்.

2016ஆம் ஆண்டு நேபாளம், 1000 ரூபா மதிப்புள்ள 200 மில்லியன் நாணயத் தாள்களை அச்சிடும் பணியைச் சீன நிறுவனத்திடம் வழங்கியது. கடந்த ஆண்டு முதல் தொகுதி நாணயத் தாள்கள் நேபாளத்துக்கு வழங்கப்பட்டன.

சீனாவில்நாணயத்தாள்களை அச்சிடும்செலவுகுறைவானது என்று நேபாள ராஷ்ட்ரா வங்கியின் பணிப்பாளர் புகுபன் கடெல் தெரிவித்தார்.

இன்னொரு நாட்டில் முன்னர் அச்சிடப்பட்டதை விடத் தரம்நன்றாகஇருக்கிறது. இதற்காகமுன்னர்கொடுத்த தொகையைவிடப்பாதியேசெலவாகியுள்ளதுஎன்றும் அவர் தெரிவித்தார். அதேவேளை, இந்தியாவின் நாணயத்தாள்கள்சீனாவில்அச்சிடப்படுவதாகவெளியாகியுள்ளதகவல்கள் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், இந்திய மத்திய நிதி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்இந்தியநாணயத்தாள்கள் சீனாவிடம் அச்சிடப்படவில்லை என்று தெரிவித்துள்ளது.

இந்திய நாணயத் தாள்களை அச்சிடும் வேலை சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றது என்று இந்திய நிதியமைச்சின்பொருளாதாரவிவகாரத்திணைக்களத்தின் செயலர் சுபாஸ் சந்திர கார்க் தெரிவித்துள்ளார்.

இந்தியநாணயத்தாள்கள்இந்தியஅரசாங்கத்தினால், றிசேவ் வங்கியின் அச்சகங்களிலேயே அச்சிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் ஊழியர்களின் ஊதியத்தை முற்கூட்டியே வழங்குங்கள்


### பதில் அமைச்சர் பைசல் காசீம் அரசிடம் வேண்டுகோள்

கொழும்பு,ஒக15
புனித ஹஜ் பெருநாள் இந்த மாதம் 22 ஆம் திகதி கொண்டாடப்படவிருப்பதால், முஸ்லிம் அரச ஊழியர்களின் சம்பளத்தை முற்கூட்டியே வழங்குமாறு சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச பதில் அமைச்சர் பைசல் காசீம் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இது தொடர்பில் பதில் அமைச்சர் தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கவுக்கும், நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். இந்த மாதம் 22ஆம் திகதி புனித ஹஜ் பெருநாள் தினமாக இருப்பதால் ,முஸ்லிம்கள்பெருநாளைக்கொண்டாடுவதற்கு தேவையானவற்றை இப்போதே செய்ய வேண்டியுள்ளது. முஸ்லிம் அரசஊழியர்களின் சம்பளத்தை முற்கூட்டி வழங்கினால் அவர்களின் தேவையைஇலகுவாகநிறைவேற்றக் கூடியதாக இருக்கும்.

ஆகவே, அவர்களின் நன்மை கருதி இன்னும்ஓரிருநாட்களுக்குள் அவர்களது சம்பளத்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யுமாறு பதில் அமைச்சர் பைசல் காசீம் அந்தக் கடிதத்தில் கேட்டுள்ளார்.



## மத்திய மலைநாட்டில் பெய்யும் கடும் மழையால் 3 நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

கண்டி,ஒக15
மத்திய மலைநாட்டில் ஒரு சில பிரதேசங்களில் கடந்த சில தினங்களாக பெய்த கடுமையான மழை காரணமாக,மலையகத்தில்இருக்கும்நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்து காணப்படுகின்றது.

கடந்தஇருதினங்களாகப்பெய்துவந்த மழையினால்நீரோடைகள், ஆறுகள் பெருக்கம் எடுத்து நீரேந்தும் பகுதிகளில் நீர் மட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

மேல் கொத்மலை, விமலசுரேந்திர, காசல்ரீ ஆகிய நீரேந்தும் பகுதிகளில் அதிகமான நீர்மட்டம் காணப்படுகிறது. இந்தநீரினைவெளியேற்றுவதற்காக நேற்று நீரேந்தும் பகுதிகளின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் விமலசுரேந்திர நீர்தேக்கத்தின் அணைக்கட்டுக்கு மேலாகநீர்வெளியேறுவதோடு,மேல் கொத்மலைநீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளது.

அத்தோடுகாசல்ரீநீர்தேகத்தின்நீர்மட்டமும் அதிகரித்துள்ளது. இதனால் நீர்தேக்கப் பகுதிகளில் தாழ்வான பிரதேசத்தில்வாழ்கின்றகுடியிருப்பாளர்கள் அவதானத்துடன்இருக்கும்படிஅதிகாரிகளினால் பணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நான்ஒருபோதும் அரசியலுக்கு வரமாட்டேன்

### துடுப்பாட்ட வீரர் குமார் சங்ககாரா தெரிவிப்பு

கொழும்பு,ஒக15
அரசியலில் ஈடுபடும் எண்ணம் ஏதும் தமக்கு இல்லை என்றும், தாம் ஒருபோதும் அரசியலுக்கு வரப் போவதில்லை என்றும், சிறிலங்காதுடுப்பாட்டஅணியின்முன்னாள் தலைவரான குமார் சங்க்கார தெரிவித்துள்ளார்.

அடுத்த அதிபர் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் குமார் சங்கக்கார வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகி வந்த நிலையிலேயே, அவர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். தான் ஓய்வாக இருக்கவே விரும்பு வதாகவும், அரசியலில் ஈடுபடும் எண்ணம் தமக்கு ஒருபோதும் இருக்கவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் அரசியலுக்கு தாம் வரப்போவதில்லைஎன்றும்குமார் சங்கக்கார வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# தொழில்நுட்பமுகாமைத்துவத்திட்டம் – மக்களிடம்ஆலோசனை கேட்கும்கூட்டம்

கொழும்பு,ஒக15
வீதி விளக்கு முகாமைத்துவம் தொடர்பான தேசிய திட்டமிடல், மின்சாரம், குடிதண்ணீர் ,பெற்றோலியம் ஆகிய துறைகளில் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும்,பிரச்சினைகள்,உரிமதாரர்களுக்கான பாதுகாப்பு , தொழிநுட்ப முகாமைத்துவத்திட்டம்தொடர்பில் மாகாணப் பொதுமக்களிடம் ஆலோசனைகளை கேட்கும் கூட்டம், 2018 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மதியம் 2 மணிவரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் லோட்டஸ் கூடத்தில் நடத்தப்பட்டது.

இந்த பொதுமக்களிடம் ஆலோசனை கேட்கும் நிகழ்வில் மத்திய மாகாணத்தின் பாவனையாளர்கள், உற்பத்தியாளர்கள், துறைசார்ந்தவர்கள்,அதிகாரிகள்,குறித்த துறையில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் பொதுமக்கள் எனச் சுமார் 400க்கும்மேற்பட்டபங்காளர்கள் கலந்துகொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவானது,அனைத்து மாகாணங்களையும் ஒன்றிணைத்து பொதுமக்கள் ஆலோசனைநிகழ்வுகளைமுன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், வீதிவிளக்குமுகாமைத்துவம் தொடர்பான தேசிய திட்டமிடல், மின்சாரம், குடிநீர் மற்றும்பெற்றோலியம்ஆகியதுறைகளில், பாவனையாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் மாகாணப் பொதுமக்களிடம் ஆலோசனை கோரும் வகையில் முதலாவதுஆலோசனைக்கூட்டம் கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி காலி மாவட்டச் செயலர் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையின் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவானது, நிலையான எரிசக்தி ஆணையத்தின் உதவியுடன் ஏற்கனவே நாட்டில் வீதி விளக்குகளை நிர்வகிப்பதற்கு ஒரு தேசியத் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

முன்மொழியப்பட்டஇந்ததேசியத் திட்டத்துக்கமைய, இது குறித்து பொதுமக்களுக்கு தங்களது கருத்துகளையும் ஆலோசனைகளையும் முன்வைக்க வாய்ப்பளிக்கப் பட்டுள்ளது.

அனைத்து மாகாண சபைகள், உள்ளூராட்சிமன்றங்கள்மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்கள், பரிந்துரைக்கமைய இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்த இலங்கைப் பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழுஎதிர்பார்த்துள்ளது.

இதேவேளை,மின்சாரம்,குடிதண்ணீர்மற்றும்பெற்றோலியம்ஆகிய துறைகளில் பாவனையாளர்கள் எதிர்கொள்ளும்பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது, இந்தபொதுமக்களிடம் ஆலோசனைகளைக் கேட்கும் கூட்டத்தின்மற்றுமொருநோக்கமாகும். இந்நடைமுறை உரிமதாரர்களுக்கான பாதுகாப்பு மற்றும் தொழிநுட்ப முகாமைத்துவத் திட்டம் பற்றிய வாய்மொழி மற்றும் எழுத்துமூல ஆலோசனைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மின்சாரப் பாவனையாளர்களின் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஏற்கனவே வழிகாட்டல்கள் தயாரித்துள்ளது. இது தொடர்பிலும் மக்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளை மேற்கொள்ள முடியும். பொதுமக்களின் கருத்துக்கள், பரிந்துரைகளுக்குஅமையஎமதுவழிகாட்டல்கள்புதுப்பிக்கப்பட்டுமேலும்திறன் மிக்கதாக்கப்படும்.

இதற்குமேலதிகமாககுடிதண்ணீர் மற்றும் பெற்றோலியப் பாவனையாளர்களின் பிரச்சினைகளும் கருத்திற்கொள்ளப்படவுள்ளது. அதற்கமைய குடிதண்ணீர் மற்றும் பெற்றோலியப் பாவனையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கும்இலங்கைப்பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

முதற்கட்டமாக 24ஆலோசனைக் கூட்டங்களைநடத்துவதற்குநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதற்கட்ட ஆலோசனை கூட்டங்களை நிறைவுசெய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், பிரச்சினைக்கானதீர்வுகுறித்தமுன்மொழிவுகளை இவ்வாண்டு இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தென் மாகாணம், மத்திய மாகாணம்,சப்ரகமுவமாகாணம்,மேல் மாகாணத்தில் முதற்கட்ட ஆலோசனை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளதைத் தொடர்ந்து அடுத்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆலோசனைக் கூட்டம்நடைபெறவுள்ளது.


இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் நிறுவனத் தகவல்தொடர்பு பிரிவு பணிப்பாளர் ஜயநாத் ஹேரத்தின் 0772943193 என்ற தொலைபேசிஇலக்கத்துக்குதொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்குள் ஊடுருவியதா சீனா?

இந்திய எல்லைக்குள் சீன இராணுவம் ஊடுருவியது என்று இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.
இந்தியா, பூட்டான், சீனா ஆகிய 3 நாடுகள் சந்திக்கும் இடத்தில் டோக்லாம் பகுதி அமைந்துள்ளது. இதற்கு 3 நாடுகளும் உரிமை கோரி வருவதால் பிரச்சினைக்குரிய பகுதியாக இருந்து வருகிறது. சீனா கடந்த ஆண்டு இந்தப் பகுதியை நோக்கி சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டது. அப்போது இந்திய ராணுவம் அதைத் தடுத்து நிறுத்தியது. இதனால் இரு நாடுகளுக்கும் இடையே 2 மாதமாக பதட்டம் நீடித்தது. இந்தியா-சீன தலைவர்கள் சந்தித்து பேசியபின்பு பதற்றம் முடிவுக்கு வந்தது.
இந்த நிலையில் சீனா மீண்டும் இந்திய எல்லைப் பகுதிக்குள் ஊடுருவியிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. கிழக்கு லடாக்கில் உள்ள டெம்சாக் செக்டாரில் சுமார் 300-400 மீற்றர் தொலைவுக்கு ஊடுருவிய சீன ராணுவம், 5 கொட்டகைகளை அமைத்துள்ளது. அதன்பின்னர் பிரிகேடியர் அளவிலான அதிகாரிகள் பேச்சு நடத்தியதையடுத்து 3 கொட்டகைகளை சீன ராணுவத்தினர் அகற்றி உள்ளனர் என்றும் மீதமுள்ள இரண்டு கொட்டகைகளில் சீனச் சிப்பாய்கள் தங்கியுள்ளனர் என்றும் பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக இராணுவத்தின் தரப்பில் உறுதியான தகவல் எதுவும் வெளியிடப்படவில்லை. (ம)



### ஆப்கானின் கஜினி நகரில்

# தலிபான் அமைப்பால் 120 பேர் படுகொலை


காபூல், ஒக. 15
ஆப்கானிஸ்தானில் கஜினி மாகாணத்தில் தலிபான்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் 120 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இதையடுத்து நிலமையின் தீவிரத்தை பரிசீலிப்பதற்காக அமெரிக்க நிபுணர்கள் ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ளனர்.
ஆப்கானிஸ்தானின் கஜினி மாகாணத்தில் தலிபான் அமைப்புக்கும் ஆப்கானிஸ்தான் அரசுக்கும் இடையில் அண்மைக்காலமாக போர் இடம்பெற்று வருகிறது. இந்த நகரம் தமது கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்று இரண்டு தரப்பினரும் மாறிமாறி உரிமை கோரியுள்ள போதிலும் அங்கு போர் தொடர்ந்து வருகிறது. தனது பின்னடைவைச் சமாளிப்பதற்காக தலிபான் அமைப்பு கண்மூடித்தனமான தாக்குதல்களை அண்மைக் காலமாக நடத்தி வருகிறது. இவ்வாறாக அந்த அமைப்பால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் 120 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர். இதையடுத்து இந்த உள்நாட்டுப் போரில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு உதவி செய்துவரும் அமெரிக்கா தனது நிபுணர்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியுள்ளது. (ம)



ஏமனின் கஜினி நகரில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்வதற்காக தோண்டப்பட்டுள்ள சவக் கிடங்குகளின் ஒளிப்படமே இது. பன்னாட்டு ஊடகமான றொயிட்டர்ஸ் இந்தப் படத்தை வெளியிட்டது. (ம)

## அமெரிக்காவில் போராட்டங்கள்

வொஷிங்டன், ஒக். 15
அமெரிக்காவில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களைக் கண்டித்து அங்கு தற்போது தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.
அமெரிக்காவில் பொதுமக்கள் துப்பாக்கிகளை வைத்துக்கொள்ள அனுமதி உள்ளது. அது அவர்களின் தனி உரிமயாகவும் பார்க்கப்படுகிறது. இதனால் அங்கு அண்மைக்காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. அமெரிக்காவில் இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டுக்களில் பாதியளவானவை கறுப்பினத்தவர்களுக்கு எதிரானவை என்கின்றன பதிவுகள். இதையடுத்து பல்லாயிரக் கணக்கான கறுப்பினத்தவர்கள் இணைந்து தலைநகர் வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் மிகப்பெரும் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். (ம)




## 2050ஆம் ஆண்டுக்குள் நீரில் மூழ்கும் யகார்தா

"இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரம் 2050ஆம் ஆண்டுக்குள் கடலில் முழுவதுமாக மூழ்கும் அபாயம் உள்ளது என நிபுணர் ஹென்றி தனது ஆய்வில் தெரிவித்தார்.
பருவ நிலை மாற்றம் காரணமாக வட துருவத்தில் உள்ள அந்தாட்டிக்காவில் பனிக்கட்டிகள் உருகுகின்றன. கடல் நீரின் வெப்பம் அதிகரிக்கிறது. இத்தகைய காரணங்களால் கடலோரத்தில் உள்ள நகரங்கள் கடலில் மெல்ல மெல்ல மூழ்கி வருகின்றன.
அவற்றில் அதிவிரைவாக மூழ்கி வரும் நகரமாக இந்தோனேசியாவின் ஜகார்த்தா திகழ்கிறது. இங்கு சுமார் ஒரு கோடி மக்கள் வசிக்கின்றனர். ஜாவா தீவில் இது அமைந்துள்ளது. இதன் மீது 13 ஆறுகள் ஓடுகின்றன. கடல் நீரின் மட்டமும் அதிகரித்த படி உள்ளது. இதன் காரணமாக இங்கு அடிக்கடி வெள்ளப்பெருக்கு அபாயம் உள்ளது. தற்போதைய சூழ்நிலையில் ஜகார்த்தா நகரம் ஆண்டுக்கு 1.5 சென்ரி மீற்றர் வரை கடலில் மூழ்கி வருகிறது. தற்போது ஜகார்த்தாவின் பாதி அளவு கடல் மட்டத்துக்கு கீழே சென்று விட்டது.
கடல் நீர் மட்டம் தொடர்ந்து உயர்வதால் வடக்கு ஜகார்த்தா அதிகம் பாதிக்கப்படுகிறது. இதன் சில பகுதிகள் ஆண்டுக்கு 25 செ.மீ. உயர்ந்து வருகின்றன. இதே நிலை நீடித்தால் இன்னும் 10 ஆண்டுகளில் 2.5 மீற்றருக்கு கடல் நீர் உயர வாய்ப்பு உள்ளது. இதேநிலை நீடித்தால் 2050ஆம் ஆண்டில் ஜகார்த்தா நகரம் முழுவதும் கடலில் மூழ்கும் அபாயம் உள்ளது என நிபுணர் ஹென்றி ஆண்ட்ரியாஸ் தனது ஆய்வில் தெரிவித்துள்ளார். (ம)



# இறந்த குட்டியைச் சுமந்துகொண்டு இரு வாரங்கள் திரிந்த திமிங்கிலம்

இறந்த தன் குட்டித் திமிங்கலத்தின் உடலைச் சுமந்துகொண்டு, இரண்டு வாரங்களாக கடலில் சுற்றிய தாய் திமிங்கலத்தின் செயல் அனைவரையும் நெகிழச் செய்துள்ளது.
பசிபிக் கடலில் உள்ள திமிங்கலங்களின் எண்ணிக்கையை விஞ்ஞானிகள் கண்காணித்து வருகின்றனர். அந்த வகையில் 'ஜெ 35' என்று பெயரிடப்பட்ட திமிங்கலத்தை விஞ்ஞானிகள் கண்காணித்து வந்தபோது மனதை நெகிழும் சம்பவம் ஒன்று நடந்துள்ளது. இது குறித்து ஆராய்ச்சியாளர்கள் தரப்பில், 'ஜெ 35' திமிங்கலம் ஒன்று பிரசவத்தின்போது இறந்த குட்டி பெண் திமிங்கலத்தைக் கடந்த இரண்டு வாரங்களாக பசிபிக் கடல் மற்றும் கனடா, அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளில் சுமந்துகொண்டு சுற்றி இருக்கிறது. இதனைக் கடந்த வெள்ளிக் கிழமை நாங்கள் கண்டறிந்தோம்' என்றனர்.



17 நாள்கள் முடிவில் ஜெ 35 தனது குட்டியைக் கடலில் போட்டு அங்கிருந்து நகர்ந்தது மிகுந்த உணர்வுப்பூர்வத் தருணமாக இருந்ததாகவும், பசிபிக் கடலில் கடந்த 20 வருடங்களாக பிரசவத்தின் போது வெறும் 25 வீதமான திமிங்கலங்கள் மட்டுமே உயிர்பிழைப்பதாகவும் விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞரின் உண்மை விசுவாசிகள் தனது பக்கம் என்கிறார் மு.அழகிரி



சென்னை, ஓக. 15

கலைஞரின் உண்மையான விசுவாசிகள் தன்பக்கம்தான் உள்ளனர் என்று தி.மு. கழகத்தின் முன்னாள் தலைவர் கருணாநிதியின் மகனும் முன்னாள் மத்திய அமைச்சருமான மு.க.அழகிரி தெரிவித்தார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலையில் வருகைதந்த மு.க.அழகிரி, தன் குடும்பத்தினருடன் அங்கே அஞ்சலி செலுத்தினார். அதற்குப் பிறகு செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

"எனது தந்தையிடம் என்னுடைய ஆதங்கத்தை வேண்டிக்கொண்டிருக்கிறேன். அது என்ன ஆதங்கம் என்பது [illegible]போது தெரியாது. என் தலைவர் கலைஞரின் விசுவாசமுள்ள உடன்பிறப்புகள் அனைவரும், என் பக்கம் தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அத்தனை விசுவாசிகளும் என்னுடைய பக்கம் இருக்கிறார்கள். காலம் இதற்குப் பதில் சொல்லும் என்பதோடு முடித்துக்கொள்கிறேன்" என்றார்.

அழகிரி தனிக் கட்சி ஆரம்பிக்கவுள்ளார் என்று அண்மைக்காலமாக செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இதன் படி அவர் தனது கட்சிக்கு க.தி.மு.க. (கலைஞர் திராவிட முன்னேற்றக் கழகம்) என்று பெயரிடத் திட்டமிட்டுள்ளார் என்று குறிப்பிடுகின்றன இந்திய ஊடகங்கள். (ம)



# போரும் இல்லை பேச்சும் இல்லை

## இது ரவுகானி தெரிவிக்கின்ற ஈரான் - அமெரிக்க உறவு

தெக்ரோன், ஓக. 15

"அமெரிக்காவுடன் ஈரான் போரில் ஈடுபடாது அதேநேரம் பேச்சு நடத்தவும் முன்வராது" என்று தெரிவித்தார் ஈரானின் அதிபர் ரவுகானி.

ஈரானுடன் கொண்டிருந்த அணுவாயுதப் பரவல்த் தடை ஒப்பந்தத்தில் இருந்து அண்மையில் விலகியது அமெரிக்கா. அமெரிக்க அதிபர் சுமார் 14 மாதங்களாக வெளிப்படுத்தி வந்த நகர்வுகளின் உச்சக்கட்டமாக இந்த ஒப்பந்த முடிப்பு அமைந்தது. தற்போது ஈரானின் மீது பல்வேறுபட்ட பொருளாதாரத் தடைகளையும் விதித்துள்ளது அமெரிக்கா. அதேநேரம் பேச்சு நடத்தவும் அது ஈரானை அழைத்திருந்தது. இந்த நிலையில் அமெரிக்காவுடன் எவ்விதத் தொடர்பும் இனிப் பேணப்போவதில்லை என்று ஏலவே வெளிப்படுத்தியிருந்த ரவுகானி, நேற்று முன்தினம் மீண்டும் அவ்வாறான கருத்தைப் பகிர்ந்தார்.


"பொருளாதாரத் தடைகளைவிட போரைப் பற்றியும், நிபந்தனைகளைப் பற்றியும் நிறைய பேசப்படுகிறது. அவர்களுக்கு ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். அமெரிக்காவுடன் போரும் இல்லை, பேச்சும் இல்லை. ஈரானில் நாள்தோறும் நடைபெறும் வாழ்வாதாரப் பிரச்சனைகள் வெளியிலிருந்து வரவில்லை. அவை உள்நாட்டினரால் உண்டாகின்றன. பொருளாதாரத் தடைகளினால் எந்தப் பாதிப்பும் இதுவரை இல்லை. ஆனால் அதை நாம் எப்படி கையாளப்போகிறோம் என்பது மிகீ முக்கியம்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)

# ஹவுத்தி ஆயுததாரிகள் 46 பேர் படுகொலை

சனா, ஓக 15

ஏமனில் சவூதி தலைமையி[illegible]ான கூட்டுப்படை நடத்திய வான் தாக்குதலில் ஹவுத்தி அமைப்பைச் சேர்ந்த 46 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஏமன் அரசுக்கு எதிராக ஹவுத்தி ஆயுதக் குழு போரிட்டு வருகிறது. ஏமன் அரசுக்கு ஆதரவாகவும் ஹவுத்திக்கு எதிராகவும் சவூதி தலைமையிலான கூட்டுப் படைகள் அவ்வப்போது வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றன. அவ்வாறாக நேற்றுமுன்தினம் மட்டும் நடத்தப்பட்ட தாக்குதலில் ஹவுத்தி ஆயுததாரிகள் 46 பேர் உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)





அமெரிக்க அதிபர் ட்ரம்ப்-அமெரிக்க இராணுவ அதிகாரிகள் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டது. (ம)

# கருணாநிதியின் இதயம் நின்று துடிக்கவில்லை!

## மருத்துவர் எழிலன் தெரிவிப்பு

சென்னை, ஓக. 15

"கருணாநிதியின் இதயம் சில செய்தி நிறுவனங்கள் குறிப்பிட்டதைப் போன்று நின்று பின்னர் துடிக்கவில்லை அது ஒரு வதந்தி" என்று தெரிவித்தார் அவரின் தனிப்பட்ட மருத்துவராகப் பணிபுரிந்த மருத்துவர் எழிலன்.

"ஜூலை 30ஆம் திகதி கருணாநிதி இறந்துவிட்டார் என்று வதந்தி பரவியது. ஆம்... எனக்கே அன்றிரவு அவர் இறந்துவிட்டார் என்று குறுஞ்செய்தி வந்தது. அன்றிரவு அவர் உடல் சற்று மோசமடைந்தது உண்மைதான். ஆனால், இவர்கள்சொல்வது போல அவர் இதயம் நின்றெல்லாம் துடிக்கவில்லை. என்னதான் அவர் கட்டுகோப்பாக இருந்தாலும், வயது மூப்பின் காரணமாக அவரது உறுப்புகள் ஒவ்வொன்றாக செயல் இழக்க தொடங்கின.

எல்லோரும் நாம் பிடித்து வைத்திருந்த கலைஞர் இறந்தது குறித்துதான் பேசுகிறீர்கள். உண்மையில் கலைஞர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். ஆம், மேடையில் கரகரப்பான குரலில் பேசுபவர்தானே நாம் அறிந்த கலைஞர், கவியரங்கத்திற்கு தலைமை வகிப்பவர்தானே நாம் விரும்பிய கலைஞர், உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதியவர்தானே தொண்டர்களின் கலைஞர்.

இதனையெல்லாம் அவர் நிறுத்தி இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன.

பின், இந்த இரண்டு ஆண்டுகள் எமது தேவைக்காக அவரை இழுத்துப் பிடித்து வைத்திருந்தோம்" என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தமிழர்களது கடல் வளங்கள் பாதுகாக்கப்படல் அவசியம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளது நாயாறு கிராமம். வடக்கு மாகாணத்தின் எல்லையையொட்டிய கரையோரக்கிராமம். பருவகாலமீன்பிடிக்குப்பெயர்போனஇடம் அது. பருவ காலங்களில் தெற்கில் இருந்து வரும் சிங்கள மீனவர்கள் இங்கு தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடுவது வழமை. போர்க்காலத்தில்நின்றுபோயிருந்த இந்த வழக்கம் போர் முடிந்ததன் பின்னர் மீண்டும் தொடங்கியது. ஆனால், இந்தத் தடவை சிங்கள மீனவர்கள் அந்தப் பகுதியில் நிரந்தரமாகத் தங்கியிருந்து தொழிலில் ஈடுபடுவதில் முனைப்புக்காட்டிவருகின்றனர்என்பதுஉள்ளூர்மீனவர்களுடனான முரண்பாட்டுக்கு வித்திடுகின்றது.

போரால் நலிந்துபோன தமிழ் மீனவர்களிடம் நிதியும் வசதியும் இல்லாத காரணத்தால் அவர்கள் இன்னும் பாரம்பரியமான முறையிலேயே மீன்பிடித்து வருகின்றனர். ஆனால், கடந்த 30 வருடங்களில் தொழில்நுட்ப வளங்களிலும் நிதி வளங்களிலும் பெருத்துப்போயிருக்கின்றனர் சிங்கள மீனவர்கள். அவர்களுக்கு இந்தப் பகுதிகள் பணம் கொழிக்கும் பூமியாகத் தெரிகின்றன.

இங்கே நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பெரும்பாலும் சிங்களவர்கள் என்பதால் தென்பகுதிச் சிங்கள மீனவர்கள் துணிந்து அத்துமீறல்களிலும் சட்டமீறல்களிலும் ஈடுபடுகிறார்கள் என்கிற குற்றச்சாட்டு தமிழ் மீனவர்கள் தரப்பில் இருந்து எழுகின்றது. இதில் நியாயமும் இருப்பதாகவே தெரிகின்றது. ஏனெனில் சிங்கள மீனவர்களுக்கு எதிரான முறைப்பாடுகள் மீது இன உறவுகள் சிதைந்துவிடும் என்று காரணம் காட்டி நடவடிக்கை எடுக்கத் தயக்கம் காட்டும் பொலிஸார், தமிழ் மீனவர்கள் மீதான சிங்கள மீனவர்களின் முறைப்பாடுகள் மீது உடனடியாகவே நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்தப் பாரபட்சமும், இன அதிகாரமும் தரும் துணிவில்தான் தமிழ் மீனவர்களின் சொத்துக்களையும் படகுகளையும் சிங்கள மீனவர்கள் எரிப்பது தொடர்கின்றது.

நாயாற்றில் நேற்றுமுன்தினம் இரவும் இதுதான் நடந்தது. சிங்கள மீனவர்கள் செய்துவரும் சட்டமீறலான மீன்பிடித் தொழிலைத் தடைசெய்யுமாறு வலியுறுத்தித் தமிழ் மீனவர்கள் போராட்டம் நடத்திய நிலையிலும், அது தொடர்பில் கொழும்பில் இருந்து அமைச்சர் ஒருவர் முல்லைத்தீவுக்கு வந்து பேச்சு நடத்தி சில தீர்வுகளை முன்வைத்துச் சென்ற நிலையிலும் தமிழ் மீனவர்களின் வாடிகள், படகுகள், படகுஇயந்திரங்கள், வலைகள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. இதனைச் சிங்கள மீனவர்களே செய்தார்கள் என்று தமிழ் மீனவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். இது உண்மை என்று சொல்லத்தக்கவிதத்தில் இந்தச் சம்பவங்களோடு தொடர்புடையவர்கள் என்கிற குற்றச்சாட்டில் 3 சிங்கள மீனவர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுமிருக்கிறார்கள்.

1980களில் எல்லைக் கிராமங்களில் இருந்த நிலையை இந்தச் சம்பவம் ஞாபகப்படுத்துவதாக இருக்கின்றது. இது மட்டுமல்ல வவுனியாவில் தமிழர்களின் பசுமாடுகள் நான்கு விசம் வைத்துக்கொல்லப்பட்டதற்கு அருகேயுள்ள கிராமத்தைச் சேர்ந்த சிங்களப் பெண் மீது குற்றஞ்சாட்டப்பட்டமை, வடமராட்சி கிழக்கில் கடலட்டை பிடிப்பதற்கு வந்தவர்களின் சட்டமீறல்களை எதிர்த்த தமிழ் மீனவர்களின் படகுகள் இரண்டு எரியூட்டப்பட்டமை என்று மேலும் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.


இதுபோன்ற சம்பவங்களில் பொலிஸார் இனரீதியான பாகுபாடு காட்டிச் சிங்களவர்களுக்கு ஆதரவாக இருந்தமை இன முரண்பாடுகள் தீவிரமாவதற்கு வழிகோலியதை மறந்துவிட முடியாது. பின்னர் அது தீவிர ஆயுதப் போராட்டமாகப் பரிணமித்ததையும் ஞாபகப்படுத்தாமல் இருக்கமுடியாது. மீண்டும் அதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்கக்கூடாது. பாகுபாடற்ற சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதில், சட்டம் ஒழுங்குக் காவலர்கள் முழுமூச்சாக இருப்பதன் மூலமே மீண்டும் ஒரு மோதல் வெடிப்பதைத் தடுக்கமுடியும். நாயாற்றுச் சம்பவத்திலும், தொடக்கத்தில் பொலிஸார் நடந்துகொண்ட விதம் பாதிக்கப்பட்ட மக்களைச் சீற்றத்தில் தள்ளியுள்ளதை அவர்களது கருத்துக்களில் இருந்து அறியமுடிகின்றது. எனவே சட்டத்தின் ஆட்சி உறுதியாக நிலைநிறுத்தப்படுவதன் மூலமே முரண்பாடுகளை இங்கு தவிர்க்க முடியும்.

அதேநேரம், ஒரு தீர்வு வரும் வரைக்கும் இதுபோன்ற பதற்றம்மிகு இடங்களில் சிங்கள மீனவர்கள் தொழிலில் ஈடுபட அனுமதிப்பதைக் கொழும்பு அரசு மீள்பரிசீலனை செய்யவும்வேண்டும்.

# வடக்கு முதலமைச்சர் ஓய்வை அறிவிப்பாரா?

இந்துமதி

வடக்கு மாகாண முதலமைச்சரான சி.வி.விக்னேஸ்வரனைத் தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு பதவி விலகிவிடுமாறு அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து அழுத்தம் வழங்கப்படுவதாகத் தெரியவந்துள்ளது. அவ்வாறு அவர் பதவி விலகினால் மக்களின் அனுதாபத்தை அவரால் சம்பாதிக்க முடியுமெனவும் அவருக்கு ஆலோசனை வழங்கப்பட்டதாகவும் என்றும் சொல்லப்படுகிறது.



### நீதிமன்றை அவமதித்த ஓய்வுநிலை நீதியரசர்

முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக்கட்சி உறுப்பினர்களால் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் சிலர் அவருக்குச் சார்பாக கருத்துக்கள் வெளியிட்டு வந்தனர். இதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்த முதலமைச்சர் வடக்கு மக்கள் தம்முடனேயே இருப்பதாகத் தெரிவித்தார். மக்களின் ஆதரவு தமக்கு இருக்கும் வரையில் தம்மை எவராலும் ஒன்றும் செய்ய இயலாது எனவும் அவர் முழக்கமிட்டார். ஆனால் அவரது செயற்பாடுகள் காரணமாக மக்கள் அவர் வெறுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார் என்பதை ஏனோ அவர் புரிந்துகொள்ளவில்லை. பா.டெனீஸ்வரனின் விவகாரத்தை முதலமைச்சர் கையாண்ட விதம் பெரும் நெருக்கடிக்குள் அவரைக் கொண்டு சென்றுள்ளது. நீதிமன்ற அவமதிப்பு வழக்கை எதிர்கொள்கின்ற அளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டிவிட்டது. நீதிமன்றத்தின் உத்தரவை முதலமைச்சர் அலட்சியம் செய்தமை மிகப்பெரிய தவறாகும். ஒரு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்துகொண்டு, அவர் இவ்வாறு நடந்து கொண்டதை ஏற்க முடியவில்லை. அவர் பதவி விலகி விடுவதால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கிலிருந்து அவரால் தப்பித்துக்கொள்ள முடியாது. பதவியில் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன நீதிமன்றத்தின் ஆணையை மதித்துத்தான் ஆக வேண்டும். ஆகவே நீதிமன்றத்தின் தீர்வைப் பொறுத்தே முதலமைச்சரின் எதிர்காலம் அமையப் போகின்றது.

> முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், பா.டெனீஸ்வரனின் விவகாரம் ஆகியவை வடக்கு மாகாணசபையில் பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்திவிட்டன. இந்தக் குழப்பநிலை முதலமைச்சரை மையமாகக் கொண்டே எழுந்தது. அவரது தவறான முடிவுகள் மாகாணசபையின் சுமுகமான செயற்பாடுகளைச் சீர்குலைத்துவிட்டதை ஒப்புக் கொண்டேயாக வேண்டும். அவருக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் அவர் விடுகின்ற தவறுகளை மூடிமறைத்து வருகின்றனர்.

### மக்களிடம் இருந்து வெகுதூரம் செல்வார் வடக்கு முதல்வர்

இதேவேளை, மாகாணசபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு இன்னமும் சில நாள்களே உள்ளன என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். அதேவேளை, அடுத்த மாகாணசபைத் தேர்தல் உரிய காலத்தில் நடக்குமா என்பதும் சந்தேகத்துக்கிடமான நிலையில் காணப்படுகின்றது. இந்த இடைவெளியில் விக்னேஸ்வரன் மக்களைவிட்டு விலகிச் செல்வதற்கான வாய்ப்புக்களும் நிறையவே உள்ளன. பொதுவாகவே வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகளில் மக்கள் கடுமையான அதிருப்தியில் உள்ளமை தெளிவாகத் தெரிகின்றது. மாகாண சபையின் ஆட்சிக்காலம் வீணாகக் கழிந்ததாகவே அவர்கள் உணர்கின்றனர். மக்கள் நலத்திட்டங்கள் மாகாணசபையால் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பது பொதுவாகவே மக்களின் குற்றச்சாட்டாகவுள்ளது. முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், பா.டெனீஸ்வரனின் விவகாரம் ஆகியவை மாகாணசபையில் பெரும் குழப்ப நிலையை ஏற்படுத்திவிட்டன. இந்தக் குழப்பநிலை முதலமைச்சரை மையமாகக் கொண்டே எழுந்தது. அவரது தவறான முடிவுகள் மாகாணசபையின் சுமுகமான செயற்பாடுகளைச் சீர்குலைத்துவிட்டதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். அவருக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள் அவர் விடுகின்ற தவறுகளை மூடிமறைத்து வருகின்றனர். சில ஊடகங்கள் கண்மூடித்தனமான வகையில் முதலமைச்சரை ஆதரித்து வருகின்றன. தமிழர்களின் எதிர்காலத் தலைவர் அவரேயெனவும் கருத்து வெளியிட்டு வருகின்றன. விக்னேஸ்வரனின் தவறான நடவடிக்கைகளுக்கு இந்த ஊடகங்களும் காரணமென்பதைக் கூறத் தேவையில்லை.

### அது அன்று இது இன்று

அனைத்துக் கட்சிகளும் ஆதரித்தால் மட்டுமே முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேன் என அன்று கூறிய விக்னேஸ்வரன், இன்று பலர் எதிர்த்த போதிலும் தமது பதவியை இறுகக் கட்டிப் பிடித்துக்கொண்டு இருக்கின்றார். பதவிச் சுகத்தை எளிதில் இழப்பதற்கு அவர் தயாராகவில்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. ஒரு உயர் நீதிமன்ற நீதியரசராக இருந்தவர் என்ற வகையில், ஆற அமர இருந்து தாம் கடந்துவந்த பாதையை நிதானத்துடன் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமது தலைமையில் மாகாணசபையின் செயற்பாடுகள் எவ்வாறு அமைந்திருந்தன என்பதையும் அவர் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். தாம் முதலமைச்சர் பதவியிலிருந்து விலகுவதால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். அப்போது சில உண்மைகள் அவருக்குத் தெரியவரும். தாம் விட்ட தவறுகளையும் அவரால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். வடக்கின் அரசியல் களம் ஏதோவொரு வகையில் பிளவுகளைச் சந்திக்காது ஐக்கியத்துடன் செயற்பட வேண்டுமானால், விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியிலிருந்து மட்டுமல்லாது, அரசியலில் இருந்தும் ஓய்வு பெறுவது நல்லது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர்கள்







## தமிழ்த் தலைவன் மு.கருணாநிதி - 07

தேவநாயகம் தேவானந்த்

நேருவின் இறப்பின் பின்னர் இந்தியத் தலைமை அமைச்சர் பதவி வகித்த லால்பகதூர் சாஸ்திரி மாநில மொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதிமொழியை வழங்கினார்.

ஒவ்வொரு மாநிலமும் தனது செயற்பாட்டிற்குத் தொடர்ந்து, தான் தேர்ந்தெடுத்தமொழியில்,வட்டாரமொழி அல்லது ஆங்கிலத்தில் தொடர்பாடலை மேற்கொள்ள முழுமையான, கட்டற்ற சுதந்திரம் கிடைத்தது. அதே வேளை மைய அரசின் அலுவல்கள் தொடர்பாக ஆங்கிலம் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்ற உறுதி மொழியும் கிடைத்தது. ஆனால் இதனை சட்டவரைவாகக் கொண்டு வர முடிய வில்லை. அவரது வாக்குறுதிகள், நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வர உதவின.

### மொழிச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தார் இந்திராகாந்தி

லால்பகதூர் சாஸ்திரி 1966ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரஷ்யாவில் நடந்தஅமைதிப் பேச்சுகளின் போது சாவடைந்தார். அவரை அடுத்து இந்திரா காந்தி தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். மொழிச்சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது.அனைத்து அலுவல் நடவடிக்கைகளிலும் காலவரையின்றி இருமொழிக் கொள்கையை அதாவது ஆங்கிலம் மற்றும் ஹிந்தியை கடைப்பிடிக்க உறுதிசெய்யப்பட்டது.

பின்னர் அண்ணாத்துரையின் ஆட்சியில், 1968 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப் பேரவையில் மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டு, ஹிந்தி முழுமையாக கல்வித் திட்டதிலிருந்து விலக்கப்பட்டது. தமிழும் ஆங்கிலமும் மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டன. மும்மொழிக் கொள்கை தமிழ் நாட்டில் கைவிடப்பட்டது. அதன் பின்னர் அனைத்துக்கல்லூரிகளிலும் தமிழ் வழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகளால் ஹிந்தி எதிர்ப்பாளர்கள் அமைதியடைந்து, மாநிலத்தில் இயல்பு நிலை திரும்பியது.

ஆனால் கருணாநிதி தலைமையிலான தி.மு.கவினர் தொடர்ந்து ஹிந்தி எதிர்ப்பை தமது கொள்கையாக, அரசியல் வெற்றிக்கான மூலோபாயமாக வைத்திருந்தார்கள்.



கருணாநிதி தன்னுடய பெயர் தமிழ்ப்பெயர் அல்ல. அது வடமொழிப் பெயர். அதனை மாற்ற நினைத்தேன். அண்ணா சொன்னதால் அப்படியே வைத்துள்ளேன். என்று அடிக்கடி குறிப்பிடுவார். தமிழன் தமிழில் பெயர்வைக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். பிறந்த குழந்தைகள் பலவற்றிற்கு கருணாநிதி தமிழ்ப் பெயர் சூட்டி மகிழ்ந்திருக்கிறார்.

தமிழ்நாட்டின் மொழிப் போராட்டத்தைப் பின்பற்றி தமிழீழவிடுதலைப்புலிகள் தமது தாயக மீட்புப் போராட்டத்தில் ஒரு பகுதியாகதமிழ்ப் பெயர்கள் வைக்க வேண்டும் என்று வேண்டினார்கள். தமிழ்பெயர்களை ஊக்கப்படுத்தினார்கள். பல புதிய தமிழ் சொற்கள் அறிமுகமாகின. வியாபார நிலையங்களில் அழகிய தமிழ்ப் பெயர்ப் பலகைகள் வைக்கப்பட்டன. விடுதலைப்புலிகளின் கல்விப்பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த பேபிசுப்பிரமணியம் இதற்காகப் பாடுபட்டார். தமிழ் மொழியைக் காக்கும் போராட்டம் இன்று வரை தொடர்கிறது.

### ஹிந்தியை முன்னிலைப்படுத்த தேசிய கல்விக் கொள்கையை அறிமுகப்படுத்திய ராஜீவ்காந்தி

1986ஆம் ஆண்டு இந்தியத் தலைமை அமைச்சராக இருந்த ராஜீவ்கரந்தி, தேசியகல்விக் கொள்கையை அறிமுகப்படுத்தினார்.அது ஹிந்தியை முன்னிலைப்படுத்திநவோதயா பள்ளிகள் நிறுவிட வழி செய்தது. திமுக இந்தப்பள்ளிகளில் ஹிந்தி கற்பது கட்டாயமாக்கப்படும் என்று கூறி எதிர்த்தது. அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தை உருவாக்கிய எம்.ஜி.ஆர் தமிழக முதல்வராக இருந்தார். தி.மு.க முதன்மை எதிர்க்கட்சியாக விளங்கியது. தமிழ்நாட்டில்நவோதயா பள்ளிகளைத் திறக்க எதிர்ப்புதெரிவித்து கருணாநிதி போராட்டம் தொடங்கினார். தி.மு.க உறுப்பினர்கள் கல்விக் கொள்கைக்கெதிராக அரசமைப்பின் பதினேழாவது பகுதிக்குத் தீயிட்டுக் கொழுத்தினர். கருணாநிதி உட்பட 20 ஆயிரம் திமுக தொண்டர்கள் கைதாகினர். கருணாநிதிக்குப் பத்துவாரங்கள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டது. க. அன்பழகன் உட்பட பத்து திமுக பேரவை உறுப்பினர்களை அவைத் தலைவர் பி. எச். பாண்டியன் அவையிலிருந்து வெளியேற்றினார்.தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ராஜீவ் காந்தி ஹிந்தி, கட்டாயமாக்கப்படமாட்டாது என்று வாக்குறுதி கொடுத்தார். இதன் பின்னணியில் தமிழ் நாட்டில் நவோதயாபள்ளிகள் திறக்கப்படவில்லை. தற்போது,நவோதயா பள்ளிகள் இல்லாத ஒரேமாநிலம் தமிழ் நாடு மட்டுமேயாகும்.

### பாரதீய ஜனதாக் கட்சியின் மோடி தலைமையிலான அரசு மீண்டும் ஹிந்தித் திணிப்புக்கு முயற்சித்தது

எப்போதுமே அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் மொழியை மற்றவர்கள் மீது திணிப்பதற்கு முயற்சித்திருக்கிறார்கள். மொழியால், மதத்தால் ஆக்கிரமிப்பது. ஒரு ஆட்சியை நிலையாக வைத்திருப்பதற்கான அடிப்படையாக வரலாறு கற்றுத் தந்திருக்கிறது. இந்திய நடுவண் அரசை பாரதிய ஜனதாக்கட்சி 2014 இல் கைப்பற்றி ஆட்சியமைத்தபோது நரேந்திரமோடியின் அரசால் மீண்டும் ஹிந்தித் திணிப்பிற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழத்திலிருந்து பிரிந்த மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக்கழத்தின் வை.கோ செயற்பட்டார்.

இதன் பின்னர் 2014ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் புதுடெல்லி அரசு, சமஸ்கிருதமொழி அனைத்து மொழிகளுக்கும் தாயாக விளங்குவதாகக் குறிப்பிடப்பட்டு, அந்த மொழியை கற்பிக்கவும்,கற்றுக் கொள்ளவும் ஊக்குவிக்கும் நோக்கில் நிகழ்ச்சிகளை அரங்கேற்றும்படி அறிவுறுத்தியது. இந்த அறிவுறுத்தலை தமிழ் மற்றும் திராவிட அமைப்புகள் எதிர்த்தன. இது குறித்து தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா தனது கண்டனத்தைப் பதிவு செய்தார்.

'தொன்மை வாய்ந்த தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு தமிழகத்தில் மிகவும் வளமான கலாசாரம் இருக்கிறது. தமிழ் மொழியைப் போற்றும் பல்வேறு பேரியக்கங்கள் தமிழகத்தில் இயங்கியிருக்கின்றன, இப்போதும் செயற் படுகின்றன. எனவே, இங்கு கடைப் பிடிப்பது பொருத்தமாக இருக்காது என்று தெரிவித்திருந்தார்.

*தொடரும்*

## ஆசிரியருக்கான கடிதம்

# பொது இடங்களில் மாணவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பார்களா?

மினி பஸ்களில் பயணம் செய்கின்ற மாணவர்கள் சிலரின் நடவடிக்கைகள் சக பயணிகளுக்கு எரிச்சலை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. பாடசாலைகள் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் செல்கின்ற இந்த மாணவர்கள் பொது இடங்களில் எவ்வாறு நடந்து கொள்வது என்பதைப் புரியாதவர்களாகவே நடந்துகொள்கின்றனர். இவர்கள் பலத்த சத்தத்துடன் பேசுவதால் ஏனைய பயணிகள் அவஸ்தைகளை எதிர்கொள்கின்றனர். இந்த மாணவர்கள் தமது சொந்த விடயங்களை எவ்வித கூச்சமுமின்றித் தமக்குள் பகிரங்கமாகப் பகிர்ந்து கொள்கின்றனர்.

அது மட்டுமல்லாது தமக்குக் கற்பிக்கின்ற ஆசிரியர்களையும் மோசமாக விமர்சிப்பதையும்காண முடிகிறது. இத்தகைய செயல்களில் மாணவிகளும் ஈடுபடுவதுதான் வேதனைக்[illegible]. மாணவர்கள் ஒழுக்க[illegible] விழுமியங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். பொது இடங்களில் மற்றவர்கள் அவர்களைப் பார்த்து முகம் சுளிக்காதவாறு நடந்துகொள்ள வேண்டும். மினி பஸ்களில் பல்வேறு தரப்பினரும் பயணத்தை மேற்கொள்வார்கள். இவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் இவர்கள் நடந்து கொள்ளக்கூடாது.

சில தினங்களுக்கு முன்னர் ஒருநாள் [illegible] யாழ்ப்பாணம் செல்கின்ற மினிபஸ்ஸில் பயணம் மேற்கொள்ள நேர்ந்தது. அதில் பாடசாலைச் சீருடையில் பயணம்செய்த மாணவிகள் சிலர் சகிக்க முடியாதவாறு உரத்த குரலில் சத்தமாகக் கதைத்துக்கொண்டிருந்தனர். இதனால் பயணிகள் தாம் இறங்கவேண்டி இடத்தைப் பலமுறை நடத்துநரிடம் கூறவேண்டியிருந்தது. இது தேவைதானா?மாணவர்களே பொது இடங்களில் நீங்கள் அமைதியையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடித்தால் என்ன?

*பா.தனலட்சுமி, மல்லாகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரைக் கவரும் படங்களில் நடிக்கிறார் ஆதி



'மிருகம்' படத்தின் மூலம் அறிமுகமாகி தொடர்ந்து 'ஈரம்', 'அரவான்', 'மரகத நாணயம்' என வெற்றிப் படங்களை வழங்கிய ஆதி, அண்மைக் காலமாகத் தெலுங்கு திரை உலகில் தொடர் வெற்றி மூலமாக ஒரு முக்கிய அந்தஸ்தை அடைந்து இருக்கிறார். தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளிலும் இவரின் படங்கள் வெற்றி பெறுவதால் இவரது தரம் உயர்ந்து கொண்டே போகிறது.

அண்மையில் தெலுங்கில் வெளி வந்து மாபெரும் வெற்றி பெற்ற "ஆர் எக்ஸ் 100" என்ற படத்தின் தமிழ் பதிப்பில்கதாநாயகனாகநடிக்கதற்போதுஆதிஒப்பந்தம்ஆகியுள்ளார். இளைஞர்களைபெருமளவில்கவர்ந்த இந்த படம் தெலுங்கு திரை உலகில் பல்வேறு சாதனைகளை முறியடித்து இருக்கிறது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | | | | | | | 2 | |
| | | 5 | 6 | 3 | | | 8 | 1 |
| | 6 | | 4 | | | | 5 | |
| | | | | 7 | | | | 3 |
| | 9 | 2 | 3 | | | 8 | 7 | |
| 5 | | | | 9 | 8 | | | |
| | 8 | | | | 3 | | 6 | |
| 3 | | 6 | 8 | 1 | 5 | | | |
| | 5 | | | | | | 3 | 8 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 6 | 1 | 3 | 9 | 5 | 8 | 2 | 4 |
| 4 | 9 | 8 | 2 | 1 | 7 | 6 | 5 | 3 |
| 3 | 5 | 2 | 4 | 8 | 6 | 7 | 9 | 1 |
| 5 | 7 | 4 | 9 | 6 | 2 | 3 | 1 | 8 |
| 9 | 1 | 6 | 8 | 3 | 4 | 2 | 7 | 5 |
| 2 | 8 | 3 | 5 | 7 | 1 | 4 | 6 | 9 |
| 1 | 4 | 9 | 7 | 2 | 8 | 5 | 3 | 6 |
| 6 | 2 | 5 | 1 | 4 | 3 | 9 | 8 | 7 |
| 8 | 3 | 7 | 6 | 5 | 9 | 1 | 4 | 2 |

நேற்றைய விடை

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான விஷயத்தில் சுமுகத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை உருவாகும். உபரி வருமானம் கிடைக்கும்.

**இடபம்:** சிரம சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேற கால அவகாசம் தேவைப்படும்.

**மிதுனம்:** திட்டமிட்ட பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். நண்பரின் உதவி ஊக்கம் அளிக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த சிரமம் குறையும்.

**கடகம்:** மனதில் உதித்த எண்ணம் செயல் வடிவம் பெறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** பேச்சை குறைத்து பணியில் ஆர்வம் கொள்வது நல்லது. தொழிலில், உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும்.

**கன்னி:** இஷ்ட தெய்வ அருள் பலத்தால் முக்கிய செயல் எளிதில் நிறைவேறும். தொழில் வியாபார தொடர்பு பலம் பெறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும்.

**துலாம்:** சிலர் மற்றவரை விமர்சிக்க ஒரு கருவியாக உங்களை பயன்படுத்துவர். தொழில், வியாபார வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும்.

**விருச்சிகம்:** மதிநுட்பத்துடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உபரி வருமானம் வரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** திட்டமிட்ட செயல் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். உற்பத்தி, விற்பனை திருப்திகரமாக இருக்கும்.

**மகரம்:** உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். இயன்ற அளவில் மற்றவருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து வளர நவீன மாற்றம் செய்வது அவசியம்.

**கும்பம்:** விழிப்புடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க கூடுதல் முயற்சி தேவைப்படும். கொஞ்சம் பணக்கடன் பெறுவீர்கள்.

**மீனம்:** எண்ணம் செயலில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில், வியாபார நடைமுறை கடின உழைப்பால் சீர் பெறும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.



முனிவரை அணுகிய ஒருவருக்கு முனிவர், "நான் உனக்கு அடிமையாய் ஒரு பூதம் தருகிறேன். ஆனால் அதற்கு நீ தொடர்ந்து வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லையெனில் அது உன்னையே கொன்று விடும்" என்று கூறி தன ஆற்றலால் ஒரு பூதத்தை வரவழைத்து அவனிடம் கொடுத்தார்.

அவன் கட்டளைகளைச் சொல்லச் சொல்ல பூதம் உடனுக்குடன் செய்தது. ஒரு நிலையில் என்ன வேலை கொடுப்பது என்று தெரியாமல் நிற்க பூதம்அவனைக் கொல்ல வந்தது. அவன் மீண்டும் முனிவரை தஞ்சம் அடைந்தான். முனிவர் சொன்னார், " உன் பூதத்திடம் ஒரு நாயின் வாலை நிமிர்த்த சொல்லு, " என்றார். அவனும் அவ்வாறே பூதத்திடம் உத்தரவிட, பூதம் முயற்சி செய்து முடியாமல் போகவே களைத்துப்போய், ஆளை விட்டால் போதும் என்று ஓடி விட்டது.

**எம்மாற்றமே இன்னொருவரின் மாற்றத்துக்கு அடிப்படையாக இருக்கும் என்பதே உலகியல் உண்மை.**

## சிந்தித்து உணர்வோம்

எல்லோரும் எல்லாவற்றிற்கும் எல்லோருடைய செயல்களுக்கும் பொறுப்பாளிகளே!

எல்லாவற்றிற்க்கும் மேலாக நீங்கள் யாருக்கும் நீதிபதி அல்ல என்பதை மறந்துவிடாதீர்கள். குற்றம் சுமத்தப்பட்டுத் தன் முன்னால் நிற்கின்ற மனிதனைப் போல தானும் ஒரு குற்றவாளி தான் என்றும், அந்தக் குற்றத் துக்கு யாரைவிடவும் தான்தான் அதிக பொறுப்பாளி என்றும் உணரும்வரை ஒருவன் நீதிபதியாக இருக்க முடியாது. அவ்வாறு உணர்கிறவனே தீர்ப்பு சொல்லத்தகுதிபடைத்தவன்.

**தஸ்தயேவ்ஸ்கி**

## தெரியுமா செய்தி..?



உண்மை உலகை ஒரு முறை சுற்றிவருவதற்குள் பொய் உலகை மூன்று முறை சுற்றிவந்துவிடும் என்றொரு பொன்மொழி உண்டு.

பிள்ளையார் பால் குடித்தார் என்றதும், நம்பி கையில் பாலோடு சென்றது ஒரு கூட்டம்.

அனுமார் சிலையில் தண்ணீரை ஊற்றினால் பால் வடிகிறது என்றதும் கையில் தண்ணீர் போத்தல்களைத் தூக்கிச் சென்றது ஒரு கூட்டம்.

ஒரு நாள் கடல்நீர் இனிக்கிறது என்று பெருங்கூட்டம் கூடியது. ஆளாளுக்கு தண்ணீரைப் பிடித்துக் குடித்தது போதாதென்று போத்தல்களில் நிரப்பிக்கொண்டுவேறு சென்றார்கள். ஆய்வாளர்கள் வந்து ஆராய்ச்சிசெய்துவிட்டுசொன்னார்கள். பிறகுதான் தெரிந்தது, கடலின் அருகே இருந்த தொழிற்சாலைக் கழிவுகள் கலந்ததால் அந்தப்பகுதி தண்ணீர் இனிக்க ஆரம்பித்தது என்று.

என்ன சொன்னாலும் நம்புறாங்கப்பா...

கேப்பையில நெய் வடியுதுன்னா
கேப்பாருக்கு புத்தி எங்கே போகுது...?

Maram R
12 hrs

கருணாநிதிக்கு மெரினாவில் இடம் கிடைத்திருக்காவிட்டால் நானே வீதியில் இறங்கிப் போராடியிருப்பேன் – **ரஜினி ஆவேசம்**
ஆமா இவரு போராடினா அந்த இடம் சுடுகாடு ஆகி இருக்கும் உடனே கொடுத்திருப்பாங்க.....



நாளை
**16.08.2018**
வியாழக்கிழமை
**ஆடி 31**

திதி: பஞ்சமி மு.ப. 07.15 வரை
நட்சத்திரம்: சித்திரை மு.இ. 09.42 வரை
சுபநேரம்: 07.35 – 09.05 வரை
ராகுகாலம்: 01.35 – 03.05 வரை

மதத்தை மற..
மனிதம் நினை..
சாதியைத் தவிர்..
சகோதரத்துவம் பேணு..


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
புதன் பொய்கை
ஒகஸ்ட் 15 2018
@UthayanPrint

ரவிக்குமார்

# பெரியாரின் பிள்ளை அண்ணாவின் தளபதி





கருணாநிதிக்கு மாநில உரிமைப் போராளி. சமூக நீதிக் காவலர், தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் என எத்தனையோ சிறப்புப் பெயர்கள் உள்ளன. பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் இடஒதுக்கீட்டுக்காகப் பாடுபட்டவர் என்ற விதத்தில் சமூக நீதிக் காவலர் என அவரைப் போற்றுவார்கள். இந்திய அரசியல் அரங்கில் சமூக நீதி என்பது பிற்படுத்தப்பட்டோரின் இடஒதுக்கீட்டு உரிமை என்ற குறுகலான பொருளில் மட்டுமே புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. கருணாநிதி முன்னெடுத்த சமூக நீதி என்பது அத்தகைய ஒன்று அல்ல. அந்தச் சொல்லுக்கு சமத்துவம் என்ற உயிரைக் கொடுத்தவர் அவர். பெரியாரின் மாணவராக அண்ணாவின் தம்பியாக அறியப்பட்ட கருணாநிதி, சமூக நீதிக் கருத்தாக்கத்தை மேலும் விரிவுபடுத்தியவர்.

திருவள்ளுவரைச் சாதாரண மக்களுக்கும் கொண்டு சேர்த்தார் கருணாநிதி. திருக்குறளுக்குப் புதிய உரை எழுதியது மட்டுமின்றி, வள்ளுவத்தின் உயிர் நாடியாக இருப்பது சமத்துவம்தான் என்பதைக் கண்டறிந்து அதை முன்வைத்தார். "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற வள்ளுவனின் வாய்மொழி அவரால் புதிய அரசியல் பரிமாணம் பெற்றது.

### துணிச்சல் மிக்க சீர்திருத்தவாதி

பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்திய சிறப்பு கருணாநிதிக்கு உரியது. அவர் அம்பேத்கரின் மாணவர் என்பது இன்னொரு சிறப்பு. சாதியை ஒழிப்பதற்கானத் திட்டத்தை அம்பேத்கர் தனது "சாதியை ஒழிக்கும் வழி" நூலில் முன்வைத்திருக்கிறார். அந்த நூலில் அம்பேத்கர் கூறிய திட்டங்களை நடைமுறையில் செய்துகாட்டிய பெருமை இந்தியாவில் கருணாநிதிக்கு மட்டுமே உண்டு. "பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் ஒரு நாளில் சேர்ந்து உண்பதால் சாதி ஒழிந்துவிடாது" என்று கூறிய அம்பேத்கர், "இந்து மதமானது சாதிகளைத் தனித்தனி அறைகளாகப் பிரித்து வைத்திருக்கிறது. சாதிகளுக்கு இடையே கலப்பு ஏற்பட வேண்டும். அதற்குக் கலப்புத் திருமணம் ஒன்றே வழி" என்றார். இதைக் கோட்பாட்டளவில் அம்பேத்கர் கூறினாரே தவிர, அரசு அதை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கூறவில்லை. ஆனால், கருணாநிதி கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களை ஊக்குவிப்பதற்காக அரசின் சார்பில் திட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். கலப்புத் திருமணம் செய்துகொள்பவர்களுக்கு ஊக்கத் தொகை, தங்கப் பதக்கம், சான்றிதழ் வழங்கப்பட்டன. அதன் மூலம், கலப்பு மணத் தம்பதிகளுக்கு அரசின் அங்கீகாரமும், பாதுகாப்பும் கிடைத்தன. இதை இந்தியாவில் சாதித்துக் காட்டியவர் கருணாநிதி மட்டும்தான்.

> பெரியாரின் கொள்கைகளை நடைமுறைப்படுத்திய சிறப்பு கருணாநிதிக்கு உரியது. அவர் அம்பேத்கரின் மாணவர் என்பது இன்னொரு சிறப்பு. சாதியை ஒழிப்பதற்கானத் திட்டத்தை அம்பேத்கர் தனது 'சாதியை ஒழிக்கும் வழி' நூலில் முன்வைத்திருக்கிறார்

சமூகச் சீர்திருத்தத்துக்காகப் போராடுவதே மிகவும் கடினமான பணி என்பதை வலியுறுத்திய அம்பேத்கர், "அரசுக் கொடுங்கோன்மையைவிட சமூகக் கொடுங்கோன்மையே மோசமானது. அதை எதிர்த்துப் போராடுகிற சீர்திருத்தவாதி, அரசியல்வாதியைவிட துணிச்சல் மிக்கவர்" என்று குறிப்பிட்டார். அந்த அடிப்படையில் பார்த்தால், கருணாநிதியை ஒரு அரசியல்வாதி என்பதைவிட, துணிச்சல் மிக்க ஒரு சமூகச் சீர்திருத்தவாதி என்றே கூற வேண்டும்.

"சாதி என்பது பௌதீகமான பொருள் அல்ல. இரண்டு சாதிகளுக்கு இடையே கல்லால் ஆன சுவர் எதுவும் கட்டப்பட்டிருக்கவில்லை. சாதி என்பது ஒரு கருத்தாக்கம். சாதியை ஒழிப்பது என்பது அந்தக் கருத்தாக்கத்தை மாற்றுவதுதான். சாதி என்ற கருத்தாக்கத்துக்கு மதம்தான் நியாயத்தை வழங்குகிறது. அதுதான் சாதியைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறது" என்று கூறிய அம்பேத்கர், "சாதியை ஒழிக்க வேண்டும் என்று முற்படுகிற ஒருவர் முதலில் அதற்கு ஆதாரமாக இருக்கும் சாத்திரங்களை விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார். கருணாநிதியின் கவிதைகள், கட்டுரைகள், உரைகள் என்று எதுவும் அவரது பகுத்தறிவுப் பார்வையையே பிரதிபலித்தன. அந்த வகையில் சாதிக்கு அடிப்படையான சாத்திரங்களை விமர்சனத்துக்கு உள்ளாக்க வேண்டும் எனும் அம்பேத்கரின் கோட்பாட்டை நடைமுறைப்படுத்திக் காட்டியவரும் கருணாநிதிதான்.



"சாதி அமைப்பு இரண்டு விதமான அம்சங்களைக் கொண்டிருக்கிறது. ஒன்று அது மனிதர்களை வெவ்வேறு பிரிவுகளாகப் பிரிக்கிறது. இரண்டாவது அந்த சாதிப் பிரிவுகளை ஒன்றன் கீழ் ஒன்றாக அடுக்கி ஒரு ஏற்றத்தாழ்வான அமைப்பை நிலைபெறச் செய்கிறது" என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். இதை மாற்ற வேண்டும் என்றால் இப்படி பிரித்து வைக்கப்பட்டிருக்கிற மனிதர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டும். சாதிப் பிரிவினை என்பது வாழிடப் பிரிவினையாக மாற்றப்பட்டுள்ளது. பல்வேறு சாதியினர் வெவ்வேறு தெருக்களிலும் வாழ்கின்றனர். அவர்களையெல்லாம் ஒன்றாக வாழவைப்பதற்கு இந்தியாவில் எந்தவொரு அரசும் முயல்வதில்லை. ஆனால், கருணாநிதிதான் சமத்துவபுரம் என்ற குடியிருப்புகளை உருவாக்கி அங்கே தலித்துகள் உட்பட பல்வேறு சாதியினரும் அருகருகே குடியிருக்க ஏற்பாடு செய்தார். அவரால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட சமத்துவபுரங்கள் இன்று இந்தியாவிலேயே முன்மாதிரியாக விளங்குகின்றன. இது, அம்பேத்கரின் கனவை நனவாக்கியதற்கு இன்னொரு எடுத்துக்காட்டாகும்.

### அனைத்து சாதியினரும் அர்ச்சகர்

"மதத்தில் செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்றால் அர்ச்சகர் பதவியானது, பிறப்பின் அடிப்படையில் அல்லாமல், தகுதியின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும்" என அம்பேத்கர் வலியுறுத்தினார். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை இயற்றியதோடு, தலித்துகள் உட்பட எல்லா சாதியினரும் வேத ஆகமங்களில் பயிற்சி பெற்று அர்ச்சகர் ஆவதற்குப் பயிற்சிப் பள்ளிகளையும் அவர் உருவாக்கினார். அதில், பயிற்சி பெற்ற பிராமணர் அல்லாத ஒருவர் இப்போது அர்ச்சகராக நியமிக்கப்பட்டுள்ளார். அனைத்து சாதியினரையும் கல்வித் தகுதி அடிப்படையில் அர்ச்சகர் ஆக்குவதற்கு சட்டம் இயற்றிய பெருமை கருணாநிதியையே சாரும்.

அம்பேத்கரால் உருவாக்கப்பட்ட அரசியல் சட்டத்தால் இன்று சாமானியர்களும் அதிகாரத்தைச் சுவைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவரது பெயரைப் பயன்படுத்தி எத்தனையோ அரசியல் கட்சிகள் இந்தியாவில் உருவாகியுள்ளன. தலித் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல மாநிலங்களில் முதலமைச்சர்களாகவும், இன்னும் பல பதவிகளிலும் வந்துள்ளனர். ஆனால், அவர்கள் எவருமே செய்யத் துணியாத செயல்களைச் செய்துகாட்டியவர் கருணாநிதி. துணிச்சல் மிக்க சமூகப் போராளியான கருணாநிதியைப் பெரியாரியவாதிகள் மட்டுமின்றி அம்பேத்கரியவாதிகளும் போற்றிக் கொண்டாடுவது அதற்காகத்தான்!

நன்றி தி ஹிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே.எஸ்.சிவஞானராஜா

# பைந்தமிழைப் பாணந்துறையில் முகாமிட்டு வளர்த்தெடுக்கின்ற பரோபகாரியே எம்.பி.நிஸ்வான்

இலங்கையில் ஒன்பது மாகாணங்களிலும் தமிழ் பசுமையோடும், குளிர்மையோடும், செழிப்போடும், சிரஞ்சீவியாகவும் வாழ்வதற்கு ஏற்ற முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக வடக்கு, கிழக்கு, மலையகம், மேற்கு இந்த நான்கும் கூடிய ஆர்வம் காட்டியபோதும், ஏனைய மாகாணங்கள் தமிழ் அன்னைக்கு வேண்டிய மதிப்பை வரங்களாக்குவதில் பின்னிற்பதுமில்லை. பின்வாங்குவதுமில்லை. முன்னிற்கிறன. இந்த நிலையில் இஸ்லாமிய சமூகத்தினர் தமிழன்னையை அலங்கரிப்பதிலும் மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் சளைக்காமல் ஈடுபட்டு வருவதனை நாம் அவதானிக்கக் கூடியவர்களாக இருக்கின்றோம். அவர்களுள் மூத்த எழுத்தாளராகப் பாணந்துறையில் முகாமிட்டு தமிழைக் கோலோச்ச வளர்ப்பவர்தான் எம்.பி.எம்.நிஸ்வான் ஆவார். அவர் ஓர் ஆசிரியர், பன்னூலாசிரியர், கவிஞர், கதாசிரியர், பன்முக நோக்குநர், விமர்சகர், பதிப்பாளர், சமாதான நீதிவான், காதி நீதிபதி என்று பல பொறுப்புக்களைச் செவ்வனவே ஆற்றியவர். தனது வயது முதிர்ந்த நிலையிலும் "எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளால், எல்லாப் புகழும் அவனுக்கே" என்ற தாரக மந்திரத்தோடு படைப்புக்கள் பலவற்றிற்குக் காரண கர்த்தா ஆகின்றார். ரமழான், மூன்றாம் தலாக், குற்றமும் தண்டனையும், மை வெளிச்சம், மரணத்துக்கு முன் மரணியுங்கள் ஆகிய படைப்புக்கள் நிஸ்வனைப் பலமுறை உச்சரிக்க வைக்கின்றது. இந்த வருடம் மிக அண்மையில் வெளிவந்தது தான் இரு நூல்களான மரணத்திற்கு முன் மரணியுங்கள் என்ற கவிதை நூலும், மை வெளிச்சம் என்ற சிறுகதைத் தொகுதியும் ஆகும். இந்த இரண்டு நூல்களும் சமூக விழுமியங்களுக்கான மூலதனங்கள் என்று துணிந்து கூறலாம். வாசிக்கும் ஒவ்வொரு வாசகர்களையும் சிந்திக்கவும், சிருட்டிக்கவும் தூண்டுகிறது. மிகவும் இலகுவான எளிய தமிழ் நடை. கவனமாகச் செவ்வை பார்க்கப்பட்ட கனதியான நூல்கள் இவையாகும். வாசிக்கும்போது தொய்வில்லாது ஆவலைத் தேடவைத்து அறம் விளைவிக்குமாறு செய்யும் நூல்களிவையாகும்! எம்.பி.எம்.நிஸ்வானின் அனுபவம், ஆளுமை, அர்ப்பணிப்பு ஆணித்தரம், அறவாழ்க்கை யாவும் ஒருங்கே சேர்ந்து சமூகத்திற்குச் சொல்லப்பட்ட செய்திகளே மை வெளிச்சம், மரணத்துக்கு முன் மரணியுங்கள் ஆகிய இரு நூல்களுமாம்.









**உரை**

வாழ்த்துரை, மதிப்புரை, விதப்புரை, அணிந்துரை, என்னுரை, கருத்துரை என பலதரப்பட்டவர்களால் நூல்கள் நயம் பெறுகின்றன. மேலும் "விடிவெள்ளி" உதவி ஆசிரியர், ஏ.எல்.எம்.சத்தார், "கவின்" ஆசிரியர் கலா விஸ்வநாதன், எழுத்தாளர், ஊடகவியளாலர் கலைவா (ரி) தி கலில்;, பன்னூல் ஆசிரியர் மௌலவி காத்தான்குடி பௌஸ்;, மஸீதா அன்சார், வலம்புரி கவிதா வட்டம் தலைவர் கவிஞர் என்.நஜ்முல் ஹுசைன் என்று எல்லோரும் இந்த நூல்களுக்கு உரை வழங்கி சிறப்பித்திருக்கிறார்கள்.

**மை வெளிச்சம்**

பன்னிரண்டு சிறுகதைகளை உயிர்ப்போடு தாங்கி உரியவாறு வாசகர்களைச் சென்று அடையுமாறு வெளிச்சப்போட்டு படைக்கப்பட்டதே "மை வெளிச்சம்" ஆகும். அத்தனை சிறுகதைகளும் நல்லதோர் படிப்பினையைத் தருவதாகும். அல்லாமலும் சமூகத்தைத்தட்டியெழுப்பி, சிந்திக்கத் தூண்டுகிறார். அதற்கு அவர் கையாண்ட யுத்திகள் மூன்றாகும்.
இலகுவான எளிய மொழிநடை, சமூகத்திற்கு ஏற்ற கருவூலம், கதையை நகர்த்தும் பாத்திரங்கள் இவை மூன்றாலும் தனது பெறுமதியான எண்ணக்கருவைப் பேறாக்கியுள்ளார்.

பெரும்பாலும் இஸ்லாமிய கோட்பாடுகளை மீறாமல், அதனோடு சமாந்தரமாக பயணிக்கின்ற வரங்களோடு, பிறை காண்போம், இருள் அகன்றது, இன்பத்திருநாள், குர்பானிய இறைச்சி, மை வெளிச்சம், டியூஷன் மெஷீன், தெளிவு, பாக்தாத் திருடன், திருவிளையாடல், ஆட்டோ டிறைவர், மாற்றீடு, கண் திறந்தது ஆகிய 12 சிறுகதைகளும் உயிரோடும், உணர்வோடும் நூறாண்டுகள் நீடு வாழக்கூடியனவாகும். இதிலே மை வெளிச்சம் என்ற சிறுகதை அறிவும் ஆழமும் செறிவும் மிக்கது. மூட நம்பிக்கைகளின் வேரை இனங்காட்டி மீட்சிபெற வைக்கிறார். தான் சொல்லவந்த கருத்துக்களை நல்லபடி வாழவைத்திருக்கிறார் நிஸ்வான்.
"மடத்தனத்திற்கு மருந்தில்லை", "மந்திரத்தால் மாங்காய் பறிக்க எண்ணுகிறார்" அடையாள அட்டை தொலைந்த நிலையில் மைவெளிச்சம் மூலம் கண்டுபிடிக்க முடியுமென்றால் காவல்துறை என்ன எந்தக் குற்றங்களையும் மந்திரவாதிகள் மூலமாகக் கண்டுபிடித்து எமது நாட்டை தூய்மைப்படுத்தலாமே என்பதாக மை வெளிச்ச விளைபொருளுக்கு வரம்புகட்டுகிறார். ஏமாளிகள் இருக்கும் வரை ஏமாற்றுக்காரரும் இருக்கவே செய்வார்கள். இது இந்தக் கதைக்குக் கருப்பொருளாகி கதை சூட்சுமத்தைக் கவரச் செய்கின்றார். கதாசிரியர். கதைக்காக இவர் காத்துக்கிடப்பதேயில்லை. மாறாக, கதைகள் இவரது படைப்புக்காகத் தவம் கிடந்து காத்துக்கிடக்கின்றன. மற்றும் பாக்தாத்திருடன் சிறுகதையில் எமது வீட்டில் நடைபெறும் திருட்டுச் சம்பவங்களுக்கு நாமே காரணமாகி விடுகின்ற விழிப்புணர்வினை நெஞ்சினில் நிரப்பி விடுகின்றார்.
டியூஷன் மெஷீன் சிறுகதையில் ஐந்தாமாண்டு புலமைப்பரீட்சை மாணவர்களது ஆளுமையை எவ்வாறு பாதிக்கிறது என்பதனை பாத்திரங்கள் வாயிலாக உரத்துச் சொல்லி விடுகிறார். இன்பத்திருநாள் சிறுகதையானது ஒரு விதவைக்கு மறுவாழ்வளிப்பது என்பதை நியாயப்படுத்தி, பாலைவனத்தைச் சோலைவனமாக்கி,. ஒரு சமூகத்தின் பார்வையைக் காயப்படுத்தாமல், ஜீவகாருண்யமளித்து தேவ சாம்ராஜ்ஜிய பேறு கொள்கிறார். மொத்தத்தில், நிஸ்வானின் சகல கதைகளுக்குள்ளும் ஜீவன் இஸ்லாமிய கலாசாரப் பின்னணிகளோடு எமக்கு வரந்தருகிறது. இந்த வரம் எல்லோருக்கும் சொந்தமானதாகும். அல்லாவின் நாமம் அவர் கதைகளில் இனிக்கிறது.

***இறைவனிடம் கையேந்துங்கள்- அவன்***
***இல்லையென்று சொல்லுவதில்லை***
***பொறுமையுடன் கேட்டுப்பாருங்கள்- அவன்***
***பொக்கிஷத்தை மூடுவதில்லை.***

மேலும் சமூக நல்லுறவுக்கும், புரிந்துணர்வுக்கும் நிரஞ்சன் மாஸ்டர் முக்கிய பாத்திரமாகப் படைக்கப்படுகிறார். வல்லதோர் சகோதரப் பாசம் பகிரப்படுகிறது. அந்தப் பாத்திரம் நெஞ்சைத் தொடுகிறது.
"நிரஞ்சன் மாஸ்டர் இந்து சமயத்தவர். அவர் அப்பகுதிப் பாடசாலைக்கு வந்து ஆறுவருட காலம் தாண்டிவிட்டது. மதக் கலாசாரங்கள் வேறுபட்டவராக இருந்தாலும், தமிழ் பேசும் இனம் ஒன்றுபட்டு அவர்களின் உரிமைகளைப் பேண வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்., சுயநலம், துவேஷம் என எரிச்சலில்லாதவர், நல்லவர், அத்துடன் வல்லவர்! அவர் வந்ததின் பின் கல்வியில் நல்ல முன்னேற்றம். பல்துறைகளிலும் மாணவர்களின் திறமைகள் பளிச்சிடத் தொடங்கியுள்ளன. தன்னலமற்ற அவரது சேவை மனிதநேயமுள்ள மனிதராக அவரை மெய்ப்பித்தது" என்று ஒரு சமூகத்தைப் பெருமைப்படுத்திய தூரநோக்காளரே எம்.பி.எம். நிஸ்வான்:. பாத்திரங்கள் கூட நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்குச் சிறுகதைகள் தக்க உதாரணமாகும். நிஸ்வான் ஒரு காதி நீதிபதியாக இருந்தபடியால் இடர்பாடுகளை இலாகவமாகத் தீர்க்க வல்லவர் என்பது அவரது கதைகளில் இழையோடுகிறது. உரை நடை மொழியாட்சி அபராம்.

***மரணத்துக்கு முன் மரணியுங்கள்***

***"மரணத்துக்கு முன் மரணியுங்கள்"***

இவரது கவிதை வார்ப்புகள் தமிழ் ஊற்றெனப் பிரவாகிக்கிறது. வகவத்தின் மாதாந்த கவியரங்குகளில் இவரது கவிகள் கான ரீங்காரமிட்டுக் களைகட்டுகிறது. ஆர்ப்பாட்டமோ அட்டகாசமோ இல்லாத அதிசயக் கவிதைகளாக நிஸ்வானின் கவிதைகள் ஆரவாரம் செய்கின்றன் அமைதியாக!
சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களை உள்வாங்கி நாகரீகமாகவும், நயப்புடனும், தேவையுடனும் திருந்துமாறும், திருத்தமாகவும் தருபவன் எவனோ அவன்தான் கவிஞனாவான். நிஸ்வான் இந்த ரகத்தைச் சேர்ந்தவர். சமூகத்திற்கு எப்படிச் சொல்ல வேண்டும், எங்கே சொல்ல வேண்டும், எதை அவசரம் சொல்ல வேண்டும், எப்படி ஆரம்பிக்க வேண்டும், எப்படி மீள வேண்டும் என்றெல்லாம் நன்கு தெரிந்து படைக்கும் ஒரு மூத்த படைப்பாளியாகத் திகழ்கிறார் நிஸ்வான். இந்தப் பெயரிலே இளமை குடிகொண்ட போதும் அவருக்கு இப்போ வயது எழுபத்தைந்து ஆகும். இருந்தபோதும் கவிதைகளில் துடிப்பு தவழ்கிறது. படிப்போரைக் கல்வி இழுக்கிறது. நூலைத் திறந்தால் மூடமனிமில்லாமல் ஒவ்வொன்றைப் படிக்க ஆவல் கொள்கிறது. "மரணத்திற்கு முன் மரணியுங்கள்" என்ற கவிதை தொகுப்பில் இருபது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. தமது உணர்ச்சிகளை விலைபேசாது தான் வாழும் காலத்தை உருவகப்படுத்தி மிகைக்காமல் உண்மைகளை உணர உரத்துச் சொல்கிறார் நிஸ்வான். புத்தகத் தலைப்பிலேயே முதலாவது கவிதை இடம்பெறுகிறது. அற்புதமான அர்த்தங்களோடு இன்பம் பயக்கிறது. அன்று திரையிசையில் சிற்றின்பக் காதலைப் பாடினான் கவிஞன். இன்று மௌலானா ரூமியின் பேரின்பக் காதலைப்பற்றிப்பாடப்படுகிற சுவாத்தியத்தைக் காண்கின்றோம். உலக வாழ்விலேயே உயிரோட்டமான இறைபக்தி ஒன்றுதான் நிலைத்த பேரின்பமாகும். ஏனையவை நிலையற்ற தன்மையினால் மரணிக்கக் கூடியவை. ஆமாம்! நல்லதொரு தலைப்பும், வல்லதொரு கருத்தும், கற்றுக் கொள்ள கிளியின் பாடம் எமக்கு விடுதலையளித்தது. இதைவிட மேலும், இந்நூலில், கவிதைச் சரங்களாக, யார் வள்ளல், கயமை நீங்கிய காரிகை, சகுனம், காதல் தியாக நிலை, கொடுத்தான்- கொடுத்தான், பதவியாசை, நாய்க்குணம், சதகதுல் ஜாரிய்யா, தீனின் வாசம், உத்தம புத்திரி, நிலைக் கண்ணாடி, வாழ வழி வகுப்பீரே, நிம்மதி, உண்மையறிவு, காயமே இது பொய், ஏச்சுப் பிழைக்கும் தொழில், நல்ல தீர்ப்பு, கல்வியும் செல்வமும், விசுவாசப் பிரமாணம் ஆகிய கவிதைப் பூக்கள் மணம் வீசி தேன் சொட்டுகின்றன. பதவியாசை எனும் கவிதையில்,

***மெய்யிலும் மெய் மரணமொன்றே***
***பொய்யிலும் பொய் உலக வாழ்வே***
***ஆசையிலும் ஆசை பதவியொன்றே***
***வேண்டியதிலும் வேண்டியது பணமொன்றே.***

நல்லபடி உள்ளபடி நவில்கிறார் நிஸ்வான். அழகான இன்னுமொரு மணம் வீசும் கவிதை மலர், எல்லோருக்கும் சொந்தமாகிறது.
அதிலே

***துன்பம் என்னை பண***
***ரூபத்தில் துரத்துகிறதே***
***துயர் நீங்க வழி சொல்வீர் பெரியவரே!***
***துனியாவில் பணம் பொருள் பாசம் நிம்மதி***
***யென்றிருந்தேன் துன்பப்படிகளே அதில்***
***நான் காண்கின்றேன்***
***உன்னையே நீ யறிவாய், நான் என்ற***
***அகங்காரம் உன்னில் இருக்கும் வரை***
***துன்பம் தீராதே!!***
***உன்மனம் போன போக்கில் செல்லாது***
***உன்னை நீ ஆளப்பழகிக்கொள் நிம்மதி***
***தானாக வருமே!***

ஆம்! நிம்மதிக்கு நிஸ்வானின் பேருபகார சிந்தனையை நாமும் வந்தனை செய்வோம். பதிப்பும் வெளியீடும் பெறுமதியும் தமிழுக்கும், வாசகர்களுக்கும் வரமீயும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும். தொடர்க அவர் பணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரையிசையில் மலர்ந்த மழைப் பாடல்கள்

இராமபுரத்தூர் நிஷாந்தன்

இயற்கை எமக்கு அளித்துள்ள நிகரில்லாத கொடை மழையாகும். மனதிற்கு ஆச்சிரியத்தையும், வியப்பினையும் கொடுப்பது மழை என்றால் மிகையில்லை. வானில் உள்ள மேகங்கள் கடலில் ஆவியாகி மேலே செல்லும் நீரினை உள் இழுத்து கருமேகங்களாகி பின் நிலத்தினில் மழையை பொழிகின்றது. மழை என்றால் எல்லோர்க்கும் கொள்ளைப் பிரியம். மழையில் துள்ளிக் குதித்த ஆடிப் பாடி மகிழ்ச்சியடைவர் பலர். நம் திரையிசையில் மலர்ந்துள்ள பாடல்களில் மழையின் சிறிப்பினை எடுத்துரைக்கும் மழைப் பாடல்கள் பல இடம்பெற்றுள்ளன. அவற்றில் சில மழைப் பாடல் துளிகளில் நனைவோம்.



> நம் தமிழ் சினிமாவில் எண்ணற்ற பாடல்கள் மழை பற்றிய பிரதிபலிப்பாய் அமைந்துள்ளன. அவற்றில் சிறு துளிகளை மட்டும் இங்கு நனைந்துள்ளோம். பாடல்கள் பலவிதம். ஆனால் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு கருத்தினை எடுத்துரைப்பனவாக அமைகின்றன.

**மழை விண்ணோடு மேளச்சத்தம் என்ன**

பொதுவாக திரையிசைப் பாடல் வரிகளில் மழையை இழையோடச் செய்திருக்கின்ற நிலையில் மழை எனவே பெயர் வைத்து ஒரு திரைப்படம் அமையப் பெற்றுள்ளது. ஜெயம் ரவி மற்றும் ஸ்ரேயா நடித்த திரைப்படம் அது. அதிலே இரண்டு மழை பற்றிய பாடல்கள் இடம் பெற்றுள்ளன. மழை என்றாலே நாயகிக்கு கொள்ளைப் பிரியம். அப்படி மழையைக் கண்டதும் மகிழ்ச்சியில் பாடி ஆடி துள்ளிக் குதிக்கின்றாள். வைரமுத்துவின் வைர வரிகளில் இடம் பெற்ற அந்தப் பாடல் மழைப் பிரியர்கள் கொண்டி மகிழ்ந்த பாடலாகும். பாடல் இதுவே.

விண்ணோடு மேல சத்தம் என்ன..
மண்ணோடு சின்னத் தூறல் என்ன..
எங்கேதான் சென்றாயோ இப்போது வந்தாயோ
சொல்லாமல் வந்தது போல் நில்லாமல் போவாயோ....

எனும் வரிகளும்,

முத்து மழையே முத்து மழையே
மூக்கின் மேலே மூக்குத்தியாகு
வைர மழையே வைர மழையே
காதில் வந்து தோடுகள்போடு...

எனும் வரிகளும் நயக்கத்தக்கவையாகும்.

**ஆதி – என்னைக் கொஞ்ச கொஞ்ச.. வா மழையே..**

நடிகர் விஜய் மற்றும் திரிஷாவின் நடிப்பில் வெளிவந்த திரைப்படம் ஆதி. அந்தப் படத்தில் ஒரு அழகிய மழைப் பாடல். நாயகன் மற்றும் நாயகிக்கு மழை என்றால் விருப்பம். அதிலும் ஐஸ்கிறீம் பருகியே மழையில் நனைவதென்றால் அவர்களுக்கு கொள்ளைப் பிரியம். அப்படியொரு மழை வரும் சூழலில் உருவான பாடல் இது. பாடலில்,

என்னை கொஞ்ச கொஞ்ச கொஞ்ச கொஞ்ச வா மழையே
நெஞ்சம் கெஞ்ச கெஞ்ச கெஞ்ச கெஞ்ச தா மழையே
இன்னும் கிட்ட கிட்ட கிட்ட கிட்ட வா மழையே
என்னை தொட்டு தொட்டு தொட்டு தொட்டு போ மழையே
நீ தோழி அல்லவா தொடும் வேளையிலே
நீ காதல் கொண்டு வா துளி தூறையிலே...

எனும் வரிகள் மழையின் வருகையை விரும்பி அழைப்பதாக அமைகின்றது. மேலும்,

தோளை தொட்டு தூறல் மொட்டு சின்ன சின்ன ஆசை சொல்லுதே
தேகம் எங்கும் ஈரம் சொட்ட வெட்கம் வந்து ஊஞ்சலிட்டதே......

எனும் வரிகளும் மனதை தெடும் வரிகளாகும்.

**குசி – மேகம் கறுக்குது மின்னல் சிரிக்குது..**

நடிகர் விஜய் மற்றும் ஜோதிகா நடிப்பில் வெளியான திரைப் படம் குசி. இந்தப் படத்தில் மழையின் வருகையை கண்ணுற்ற நடிகை ஓடிச் சென்று தன் தோழியர் மற்றும் ஊரார்கள கூடியிருக்க மழையில் நனைந்த ஆடிப் பாடுகின்றாள். எம் மனதையும் நனைத்திடும் பாடல் இது தான்.



மேகம் கருக்குது... மின்னல் சிரிக்குது...
சாரல் அடிக்குது... இதயம் பறக்குது...
மேகம் கருக்குது மின்னல் சிரிக்குது
சாரல் அடிக்கிறதே
என் மேனியில் ஆடிய மிச்ச துளிகள்
நதியாய் போகிறதே......
நான் சொல்லும் வேலையில் மழை
நின்று போகட்டும்
வானவில் கொடியிலே என் ஆடை
காயட்டும்
மழையே துள்ளி போடு! என் மார்பே
உன் வீடு......

பாடல் வரிகள் மழையுடன் உறவாடி மகிழ்வதை காட்டுகின்றதல்லவா?

**குரு – வெண்மேகம் முட்ட முட்ட பொன் மின்னல்...**

ஐஸ்வர்யா ராய் மழையின் வருகை கண்டு ஆனந்தம் பொங்கிட துள்ளிக் குதித்து பாடி ஆடிடும் பாடல் இதுவாகும். வைரமுத்துவின் வரிகளில் உருவான இந்தப் பாடலில் நாயகி தன்னையே மழையாக உருவகம் செய்து பாடுவதாக பாடல் வரிகள் அமைவுறுகின்றமை நயக்கத்தக்கதாகும். பாடலை கேண்மையுறுங்கள்.

வெண் மேகம் முட்ட முட்ட பொன் மின்னல் வெட்ட வெட்ட
பூவானம் பொத்துக் கொண்டதோ..
பன்னீரை மூட்டை கட்டி பெண் மேலே கொட்டச் சொல்லி
விண் இன்று ஆணை இட்டதோ...
மேகத்தின் தாரைகளில் பாய்ந்தாடப் போகின்றேன்
ஆகாயச் சில்லுகளை அடிமடியில் சேமிப்பேன்.....

மேலும் இந்தப் பாடலில்,

வயல் வெளி ஆடும் வண்ணத் தும்பிகளே
உங்கள் வால்களில் வசித்திருந்தேனை...
சடுசடு பாடும் பிள்ளை நண்டுகளே
மண வலைகளில் நானிருந்தேன்...
மலையின் தாய் மடியில் சிறு ஊற்றாய் நான் கிடந்தேன்
காதல் பெருக்கெடுத்து இன்று நதியாய் இறங்குகின்றேன்...

எனும் வரிகள் நம்மையும் மழையில் நனையத் தூண்டும் வகையில் அமைவுறுகின்றன.

**பையா – அடடா மழைடா அட மழைடா..**

நடிகர் கார்த்தி மற்றும் நடிகை தமன்னாவின் நடிப்பில் உருவான ப்டம் பையா. இந்தப் படத்தில் மழையோடு துள்ளல் செய்திட வைக்கும் அழகியதொரு மழைப் பாடல் இதுவாகும். நாயகனும் நாயகியும் பயணம் செய்யும் சமயத்தில் மழை பெய்கின்றது. உடன் நாயகி அவ் மழைத் துளிகளில் நனைந்து குதூகலிக்கின்றாள். நாயனும் இணைந்து அந்த மழையில் ஆடிப் பாடி மகிழ்கின்றனர். பாடல் இது தான்.

அடடா மழைடா அட மழைடா
அழகா சிரிச்சா புயல் மழைடா
மாரி மாரி மழை அடிக்க மனசுக்குள்ள குடை பிடிக்க
கால்கள் நாலாச்சு கைகள் எட்டாச்சு
என்னாச்சு ஏதாச்சு ஏதேதோ ஆயாச்சு........
பின்னி பின்னி மழை அடிக்க மின்னல் வந்து குடை பிடிக்க
வானம் ரெண்டாச்சு பூமி துண்டாச்ச்சு
என் மூச்சு காத்தால மழ கூட சூடாச்சு
குடையை நீட்டி யாரும் இந்த மழையை தடுக்க வேணாம்.......

பாடலைக் கேண்மையுறும் எங்களையும் நிச்சயம் மழையில் நனைந்து ஆட்டம் போட வைக்கும் என்றால் மிகையில்லை.

இந்தப் பாடல்களை தவிர,



தாளம்
எங்கே என் புன்னகை...
என்னை அறிந்தால் - மழை வரப் போகுதே...
மூன்று பேர் மூன்று காதல் - மழை மழை மழை ஓ மழை...
பிரிவு ஒன்றே போதுமே - துளித் துளியாய் கொட்டும் மழைத் துளியாய்...
கருத்தம்மா - தென் மேற்குப் பருவக் காற்று..
உள்ளம் கேட்குமே - மழை மழை என் இதயத்தில்..

போன்ற பாடல்களும் மழையின் சிதறலாய் சிந்திடும் பாடல்களாகும்.

மழையில் நனைந்து குதூகலிப்போம்.

இவ்வாறு நம் தமிழ் சினிமாவில் எண்ணற்ற பாடல்கள் மழை பற்றிய பிரதிபலிப்பாய் அமைந்துள்ளன. அவற்றில் சிறு துளிகளை மட்டும் இங்கு நனைந்துள்ளோம். பாடல்கள் பலவிதம். ஆனால் ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு கருத்தினை எடுத்துரைப்பனவாக அமைகின்றன. ஆக மேலே இழையோடிடும் மழை குறித்த பாடல்களை ஆழமாக கேண்மையுறுவோம். முடிந்தால் மழை காலத்தில் இப்பாடல்களை பாடியவாறு மழையில் நனைந்து ஆனந்தமடைவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











# 'நாத நர்த்தன வர்ணம்'

## கலைகளின் சொழிப்பான பொழிப்புடைய கைங்கரியம்

தென்னவன்

கலைகள் ஆத்மார்த்தமானவை. அமைதியைப் பரிபாலனம் செய்யவும், சிந்தனைகளை நல்வழிப்படுத்தவும் உகந்தவை. அவை தன்னகத்தாய் கொண்டுள்ள உயிர்மம் என்பது கால நியமமானது. அனாதியானது. உணர்வு நிலையில் அலாதியானது.

**மனோபாவம்**

அந்தவகையிலே அனைத்துக் கலைகளுமே இயல்நிலையில் மனித மனங்களை ஆற்றுப்படுத்தும் அசைவியக்க மந்திரங்களாகவும், காண்பியங்களுள் தன்வயப்படுத்தும் மாத்திரைகளாவும் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றுள் ஆடற்கலை அற்புதக் கீர்த்தியுடைது. சுருதி, லய, ஞானம் என்ற பாங்கினுள் கட்டுண்டு உடலும் உள்ளமும் நாட்டிய நர்த்தன பாவங்களின் ஒப்புமை வெளியாக செயல்நிலை பெறுகின்றது. கதையாடல்களை தத்ரூபாமான அழகியல் உருவகங்களாக பேசி விடுகின்றன. பார்வையாளரை இரசனைக்குட்படுத்தி விடுகின்றன.

ஆம், மனித சமூகத்தின் நாகரீகமான வளர்ச்சிக்கு கலைகள் இன்றியமையாதவை. கலையின் வழி மக்கள் நிலைப்படுத்தப்படு கின்றனர். பண்பாடு, விழுமியங்கள் சார்ந்து வழிப்படுத்தப்படுகின்றனர். இந்து மதத்துக்கும் கவின் கலைகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. இறை வடிவங்கள் இசைத்துவம் பேணி வருகின்றன. கரங்களில் இசை வாத்தியங்களை தாங்கி அமைதியின் நாதங்களை அருளாய் மீட்டுகின்றன. உண்மையில் எமது மூதாதையர்கள் கலைகளையும் மதங்களையும் இணைவு பெறச் செய்து வழிபாடு இயற்றினர். அதன் படிநிலையாய் நம்பிக்கையோடு நாமும் பக்தி செய்கிறோம். 'கண்ணன் கையில் புல்லாங்குழல். நடராஜர் கையில் உடுக்கை, சரஸ்வதி கையில் வீணை, நாரதர் கையில் தம்புரா' என இசைக்கருவிகள் நாத நர்த்தனம் புரிகின்றன.



**நடனக் கலை**

வேதங்கள் கூறும் சிவதாண்டவம் உருத்திர தாண்டவம் என்பன நடனக் கலையின் சிறத்தலை எடுத்தியம்பி நிற்கின்றன. 'தூய கானப் பிரியன்' என இறைவன் புகழ் பாடுகின்றன. திருமுறைகளும் அவ்வகையினதாய் பண் கொண்டு இறை அம்சங்களை கலைத்துவமாய் துதிக்கின்றன.

உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்குரிய மிகப் பொருத்தமான ஊடகமாக பரதக் கலை திகழ்கிறது. உடலையும் உள்ளத்தையும் ஒருசேர அமைதிப்படுத்தும் உன்னத கலையாக தெய்வீகம் புரிகிறது. நடனத்தில் வெளிக்காட்ட முடியாத ஞானமோ, கல்வியோ, கலையோ, செயலோ, யோகமோ இல்லையென்கிறார் பரதர்.

**ஓவியக் கலை**

இதேபோன்று வரலாற்றுக் காலத்தில் மனிதன் குகையில் வாழத் தொடங்கிய காலம் தொட்டே ஓவியக் கலையின் நுட்பங்கள் தோற்றம் பெற்றதாக மானுடவியல் வரலாறுகள் குறிப்பிடுகின்றன. கருத்துக்களையும், உணர்வுகளையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு மனிதன் முயற்சிகளை மேற்கொண்ட போது அதற்கான ஊடகமாக ஓவியங்கள் இருந்தன. மனித மனங்களின் உள்ளுணர்வோடும் அனுபவங்களோடும் உறவாடக்கூடிய உன்னத கலையாக விளங்குகின்றன. பார்வையாளர்களை படைப்பாளிகளாக மாற்றம் பெறச் செய்யக்கூடிய பிரம்மக் கலைகளாக ஓவியங்கள் சிறப்புறுகின்றன. ஆயிரம் வார்த்தைகள் கொண்டு கருத்துரைக்க வேண்டிய விடயங்களை ஒரு சிறிய கோட்டோவியத்தின் மூலம் தெளிவுபடுத்திவிட முடியும். கலைகள் வளர்ச்சி நிலை காணும் போது மக்கள் உயர் நிலை காண்பர். கலை உணர்வு இல்லாது போனால் சமூகப் படிமங்கள் உடைவுறும். அங்குள்ள தனிமங்கள் அழிவுநிலைக்கு உட்படும். ஆக, மொத்தத்தில் நாதம், நர்த்தனம், வர்ணம் கொள்ளும் ஓவியங்கள் என மூவகை நுண்கலைகளையும் நாம் வளம்படுத்தி கொள்ள வேண்டும்.

**'நாத நர்த்தன வர்ணம், 2018'**

இவ்வகையிலே இசையும் அசைவியக்க நெறியும் ஒன்றித்து ஊடாடுகின்ற இந்த ஆடற்கலை நாத விநோதமாக ஆர்ப்பரிக்கிறது. மேன்மையுறுகிறது. அதுவிதமே தென்மராட்சி கல்வி வலயத்தினர் ஏற்பாடு செய்திருந்த 'நாத நர்த்தன வர்ணம், 2018' நிகழ்வுகளும் அமைந்திருந்தன.

1980 ஆம் ஆண்டுகளில் தென்மராட்சி பிரதேசத்தில் மட்டுமல்லாது தமிழர்கள் செறிந்து வாழ்ந்த பிராந்தியங்களில் கலைச் செயற்பாடுகளின் அசைவியக்கம் குறைவாகவே இருந்து வந்தது. ஆனாலும் அரச கல்வித் திட்டத்தில் நடனபாடம் உள்வாங்கப்பட்டு பல்கலைக் கழக பயிலரங்கில் பட்டக்கற்கை நெறியாகவும் உள்வாங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பாடசலை மட்டத்தில் கலை விருத்திச் செயற்பாடுகளில் முக்கிய பங்காற்றுகிறது. சமய சமூகக் கட்டமைப்பின் போக்கில் தமிழர் கலாசார, பண்பாட்டு விழுமியக் கடப்பாடாக நிகழ்த்தப் பெறுகிறது. தற்காலத்தின் வழியேயும் அவற்றின் பண்பியல்பு தொடர்கிறது. இன்னமும் வேண்டப்படுகிறது. தமிழர் பண்பாட்டின் மாண்பியமாக அரங்கேற்றம் காண்பதும், இரசனை கொண்டு கலை நிலையில் அவை அலங்கரிக்கப்படுவதும் வரவேற்கத் தக்கது.

அந்த வகையில் இவ்வருடத்துக்கான ஆற்றுகைகள் கள நிகழ்வாக அமைந்தன எனலாம். இந்த நிகழ்வுகள் சாவகச்சேரி நகரசபை



பொன் விழா மண்டபத்தில் இடம்பெற்றன.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் பிரான்ஸ் கிளை தலைவர் சி.சுரேந்திரன், மதிப்புறு விருந்தினராக மகரகம தேசிய கல்வி நிறுவக செயற்றிட்ட அலுவலர் ( நடனம் ) திருமதி நி.திருக்குமரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திச் சபையின் புலம்பெயர் நாடுகளில் உள்ள கிளைகளின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

**ஆளுமைகளின் காண்பியம்**

பாடசாலைகளில் பயிற்றப்பட்ட மாணவர்களின் நிகழ்வுகளை பொதுவெளியில் காண்பியம் செய்யும் விதமாக களம் அமைத்து, 'நாத நர்த்தன வர்ணம்' என்ற தொனிப்போடு தென்மராட்சி கல்வி வலயத்தினர் கடந்த நான்கு ஆண்டுகளாக இப் பணியை சிறப்பாக செய்துவருகின்றனர். இந்த நிகழ்வுகளில் நகரப் புறப் பாடசாலைகளை விடவும் கிராமப் புறப் பாடசாலை சார்ந்த மாணவர்களின் நிகழ்வுகள் அதிகளவில் ஆற்றுகை செய்யப்பட்டுவருகின்றன.

இசையும் நடனமும் இணைந்தவிதமாக இந்த கைங்கரியத்தை தென்மராட்சி கல்வி வலயத்தில் அறிமுகம் செய்து அதனை மாகாணப் பாடசாலைகளிலும் செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவந்த செயலூக்கத்தில் முன்னாள் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தனிச்சிறப்பிடம் பெறுகிறார்.

இந்த இசைவில் ஒருபகுதியாக கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற மாணவர்கள் தங்களுக்கான முறையான் பயிற்சிகளை பெறுகின்றனர். வலய மட்டத்தில் இடம்பெறுகின்ற நிகழ்வுகளில் பங்குகொள்கின்றனர். கலையைக் காண்பியம் செய்து நிகழ்வில் கலந்துகொள்வோரின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

**ஆற்றுகை நிகழ்வு**

இவ்வாண்டு நாத நர்த்தன நிகழ்வில் மாணவர்கள் பங்குபற்றிய 17 ஆற்றுகை நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தன.

குறிப்பாக, 'மிருசுவில் றோ.க.த.க. வித்தியாலயம், அல்லாரை அ.த.க.வித்தியாலயம், மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயம், மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்' ஆகியவற்றை பிரதிநிதித்துவம் செய்து மாணவர்கள் எமது நாட்டில் வாழ்கின்ற இனக் குழுமங்களை சித்தரிக்கும் வகையில் உடை அணிந்து, கரங்களில் தீபம் ஏந்தி விருந்தினர்களை வரவேற்றனர். இந்த ஆற்றுகையானது எல்லா மதங்களும் சமத்துவத்தின் பிரக்ஞையே என்ற உணர்வை வெளிப்படுத்தியது.

தொடர்ந்து கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களின் மங்கல வாத்திய இசை இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து வரணி மத்திய கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

நிகழ்வில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்கள் ஆற்றுகை செய்த 'தமிழை வாழ்த்துவோம்' என்ற நிகழ்வு பார்வையாளர்கள் அனைவரையும் தன்பால் ஈர்த்துக்கொண்டது. தாய்மொழியின் சிறத்தலை தெளிவாக வெளிப்படுத்திய இன்பமயான ஆற்றுகை நிகழ்வாக அது அமைந்திருந்தது.

மேலும் மாணவர்கள் கலந்துகொண்ட, 'மீனவ நடனம், நாட்டுப்புற நடனம், சிவ நடனம், மான் நடனம் கிராமிய கதம்பம், கண்ணன் ஆடல், காவடி, பத வர்ணம், உழவர் நடனம், கடலலை நடனம், ஏந்தல் நடனம், ஹன்சய வண்ணம், கீர்த்தனை, தில்லானா' போன்ற ஆற்றுகை நிகழ்வுகள் பார்வையாளர்களை காண்பியத்தில் அழகுறக் கட்டிப்போட்டிருந்தன. மாணவ மாணவியர் தாம் பெற்றுக்கொண்ட பயிற்சியின் உயர் அடைவ்வை சிறப்பாகச் வெளிப்படுத்தியிருந்தமை பாராட்டத்தக்கது.

இந்த நிகழ்வின் அசைவில் பிரதான பங்காளர்களாக கடமை புரிந்த இசை ஆசிரியர்களும், நடன ஆசியர்களும் அவர்களோடு ஒருங்கமைவு பெற்ற அணிசேர் கலைஞர்களும் தமக்குரித்தான பங்களிப்பை சிறப்பாக மேற்கொண்டனர். அவர்களின் பணி பாராட்டத்தக்கது. கலை நிலையில் அன்பால் சீராட்டத்தக்கது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பதே மாண்பு

அடுத்தவரைத் தண்டிக்க அதிகாரமில்லாத நாம், தவறு செய்தவர்களுடன் எவ்வாறு நடந்துகொள்கிறோம்? நபி வழியில் நடப்பதாகச் சொல்லும் எமது நடவடிக்கைகள் எவ்வாறு உள்ளன?

மார்க்க விவகாரங்களோ, உலக விவகாரங்களோ எதுவாக இருந்தாலும், சகிப்புத்தன்மை என்பதெல்லாம் மலையேறி காலம் ஆகிவிட்டது. தவறு செய்யாத மனிதர்களே கிடையாது என்பதை சிலபோது நாம் மறந்து போகின்றோம். தவறு செய்த மனிதரிடம் கடுமையாக நடந்துகொள்வதை மட்டும் மறக்காமல் இருக்கின்றோம். கூறுங்கள், இங்கே யார் தான் உத்தமர்? தவறிழைப்பது மனித இயல்பு. அப்படி ஒருவர் தவறு செய்துவிட்டால் அவரிடம் கடுமையாக நடந்துகொள்வதுதான் கொடுமையிலும் கொடுமை. எவ்வளவு தூரம் கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவு தூரம் அவரைக் கேவலப்படுத்தி, எவ்வளவு தூரம் இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவு தூரம் அவரை இழிவுபடுத்தி, பொதுத்தளத்தில் இருந்தே ஓட ஓட விரட்டி மூலையில் முடக்குவது ஒரு வகை வெறித்தனமான மனோபாவமாகவே இருக்கிறது. அனேகமாக அனைவரிடமும் இந்தக் குணம் குடிகொண்டுள்ளது.

குற்றவாளிகளைப் பகிரங்கப்படுத்தாமல் இருத்தல் சிலபோது முழுமையான சிகிச்சையாக அமையலாம். மோசமான சூழ்நிலைகளால் உந்தப்பட்டு குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர் பின்னர் அதிலிருந்து விடுபட முனைவதற்கும், மானசீகமாக பாவ மீட்சி (தவ்பா) செய்வதற்கும், தூய்மையான வாழ்வைத் தொடங்க முயல்வதற்கும் அது வாய்ப்பை ஏற் படுத்திக் கொடுக்கலாம். ஆகவேதான், குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை உடனடியாக பகிரங்கப்படுத்தாமல் மறைத்து வைப்பதை ஷரீஅத் சட்டபூர்வமாக்கி உள்ளது.

எவர் தமது சகோதரருடைய தவறை மறைத்துக்கொள்கிறாரோ, அவருடைய தவறை மறுமைநாளில் அல்லாஹ்வும் மறைத்துக்கொள்வான். எவர் தமது சகோதரரின் தவறை வெளிப்படுத்துகிறாரோ, சொந்த வீட்டிலேயே கேவலப்படும் வண்ணம் அவருடைய தவறை அல்லாஹ்வும் வெளிப்படுத்துவான். மனிதர்களுக்கு என்று சில கண்ணியங்கள் உள்ளன. துப்பறிவதன் மூலம் அவற்றைக் கீறிக் கிழித்து வீசுவது கூடாது. அவர்களுடைய ரகசியங்களைத் தெரிந்துகொள்வதற்காக அவர்களைப் பின்தொடர்ந்து செல்வது கூடாது.

யாருக்கும் தெரியாமல் தனிப்பட்ட முறையில் பாவங்களைச் செய்பவர்களாக அவர்கள் இருந்தாலும் சரியே. ஒளித்து மறைத்து தவறு செய்துகொண்டிருக்கும் காலம்வரை அவற்றை வெளிப்படுத்துவது கூடாது. ஒரு ரகசியத்தை மறைத்து வைப்பவர் மண்ணறையில் (கப்ர்) உயிருடன் புதைக்கப்பட்ட சிறுமிக்கு உயிர் கொடுத்தவரைப் போன்றாவார்" என்று ஸல் தெரிவித்துள்ளார். அனைத்து விவகாரங்களுக்கும் அண்ணல் நபியை (ஸல்) முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளும் நாம், இந்த விவகாரத்திலும் பெருமானாரின் வழிகாட்டுதலைத்தானே எடுத்திருக்க வேண்டும். அதுதானே முறை.?

ஆம், தவறிழைத்தவர்களிடம் நபி (ஸல்) எவ்வாறு நடந்துகொண்டார்கள் என்பதையும் வரலாறு அழகாகப் பதிவு செய்து வைத்துள்ளது. இதோ

## இஸ்லாமிய மார்க்கம்

அந்த நிகழ்வு. மக்காவை வெற்றிகொள்ள நபி (ஸல்) நாடியபோது, மக்கத்துக் குறைஷிகளுக்குத் தெரியாமல் ரகசியமாக அதற்காகத் தயாரானார்கள். ஆனால் ஹாதிப் பின் அபீ பல்தஅ(ரலி) எனும் நபித்தோழர் அந்தச் செய்தியை ஒரு கடிதம் மூலம் ரகசியமாக மக்காவுக்குத் தெரிவிக்க முற்படுகி றார். ஆயினும் அலி (ரலி) மூலம் அந்தக் கடிதம் பெறப்படுகிறது. அந்த நபித்தோழரும் பெருமானாரிடம் (ஸல்) அழைத்து வரப்படுகிறார். விஷயத்தைக் கேள்விப்பட்டு உமர் (ரலி) வாளை உருவி, "இறைத் தூதரே! இவர் நயவஞ்சகனாகி விட்டார். இவரைக் கொலைசெய்ய அனுமதி தாருங்கள்" என்று கேட்கின்றார். ஆனால் நபியோ "உமரே! இவர் பத்ருப் போரில் கலந்துகொண்டவர். பத்ருப் போரில் கலந்துகொண்டவரின் மகிமை குறித்து உமக்கு என்ன தெரியும்? இவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறினான் "என்ன வேண்டுமென்றாலும் நீங்கள் செய்யுங்கள். உங்கள் பாவங்கள் அனைத்தையும் நான் மன்னித்துவிட்டேன்". நடந்த தவறுக்கு ஹாதிப் பின் அபீ பல்தஅ (ரலி) கூறிய விளக்கமும், அவரைப் பெருமானார் (ஸல்) அவர்கள் மன்னித்தமையும் தனி வரலாறு.















### உலகளாவிய தமிழ் பண்பாட்டு பேரவை ஏற்பாட்டில்

# சிறப்புற இடம்பெற்ற முப்பெரும் விழா


உலகளாவிய தமிழ் பண்பாட்டுப் பேரவை கொழும்பு தமிழ் சங்கத்தில் அண்மையில் முப்பெரும் விழாவை நடத்தியது. நிகழ்வில் தலைமை விருந்தினராக அமைச்சர் மனோகனேசன், சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு மாநகரசபை உறுப்பினர் சி.பாஸ்கரா, இராமநாதபுரம் கம்பன் காவலர் சுந்தர்ராஜன், தமிழ்ச் சங்கத் தலைவர் இராஜகுலேந்திரா, இந்தியக் கவிஞர் துரைமுருகன் ரகுபதிபால சிறிதரன், தஞ்சைப் பேராசிரியர் கே.தெய்வநாயகம் திருவையாறு முனைவர் சண்முகசெல்வ கணபதி திருச்சி பொறியியலாளர், திருவள்ளுவர் தமிழ் பண்பாட்டு பேரவைச் செயலாளர் தஞ்சை பா.திருநாவுக்கரசு ஆகியோர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'வி.கே.நடராஜா'

## இசை அன்பின் சான்றாண்மை உடைய பெருந்தகை

கே.எஸ்.சிவஞானராஜா



வரகும் தினையும், விளையும் நிலமும், பெருகும் நெல்லும், பெருக்கும் நெய்யும், மெருகாய் இசையும் மிளிரும் திருவூர் அளவெட்டி. ஆங்கு கலைமகளின் திருவாய் உவந்த கலைஞர்னமாய் 'தேனிசை வாரிதி' எனப் போற்றப்படும் சங்கீதபூஷணம் ஸ்ரீமான் வி.கே.நடராஜா இசை அன்பு புரிகிறார். இலங்கையின் இசை வரலாற்றில் ஒரு பெட்டகமாகத் திகழ்கிறார். இப்பொழுதும் இசைச் சக்கரவர்த்தியாக மனங்களை ஆளுகை செய்கிறார்.

**பிறப்பு**

ஈழத்தின் கலைநாடு அளவெட்டி. அங்கு இசைகூட்டி ஆட்சி அதிகாரம் செய்பவர் கும்பழாவளைப் பிள்ளையார். அந்தக் கொம்பனையே நம்பிக்கையோடு கைதொழுது பக்தி செய்வோர் அளவையூர் மக்கள். ஆம், அளவெட்டி வடக்கில் செம்மண் பாய்ந்த பொன் விளையும் பூமியும், நரை மண்ணுண்ட வெண்தரைப் பூமியும், ஆன்மிகம் விளைந்த ஸப்த நீரூற்றுப் பொங்கும் ஏழு கிணற்றடிப் புண்ணியப் பூமியும், பரந்த வெளி கால்நடைகளும் கதைசொல்லும் கொம்பனின் கோமலைத்தோட்டச் சாமியும் நிறைந்த அரசொல்லைப்பதியிலே வேளாண்மையை வெற்றி கொண்ட வைரவப்பிள்ளை கந்தையா பார்வதி தம்பதிகளுக்கு தவப்புதல்வனாக நடராஜா அவதரித்தார்.

பன்னிரண்டு ஸ்தானங்கள் போல 12ஆம் திகதியும், நவசந்திப் பண்கள் போல ஒன்பதாம் மாதமும் பொருள் கூற இற்றைக்கு எழுபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னே 1938 ஆம் ஆண்டு இப் பூவுலகில் வந்துதித்த சூரியன்தான் வி.கே.நடராஜா ஆவார். அளவையூர் ஒளி சூடி இருப்பதற்கு இவரும் ஒரு செயல்திறன்மிகு காரணனாக விளங்குகிறார். இன்னும் பலர் ஒளிக்கீற்றாக இருப்பதனால் அளவையூர் ஒரு நாளும் இருண்டதேயில்லை எனலாம்.

மாருதப்புரவீக வல்லியானவள் தனது குதிரை முகம் நீங்க அருள்கூர்ந்த பொருள் உணர்ந்து கும்பழாவளைப் பிள்ளைக்குரிய மாலையை முதன்முதலாக கும்பமாலையிலிருந்தே எடுத்து வந்தாள் என்பதும், அழகிய மயில்கள் புடை சூழ அவள் அழைத்து வரப்பட்டாள் என்பதும் வரலாறுகள் கூறும் கதையாடல். இதன்காரணம் கொண்டே, 'மயிலோடை, கொம்பமாலை, கும்மாலை' போன்ற காரணப் பெயர்கள் அளவெட்டியில் இன்றும் நீடூழி வாழ்கின்றன. இத்தகு சிறப்புகள் நிறைந்த மண்ணிலே அப்புவும் ஆச்சியும் எப்பவும் போல, 'பாலும் பழமும், பழஞ்சோறும் கஞ்சியும், வரகும் சோறும், தினையும் பனையும், ஒடியலும் பிட்டும், கூழும் குரக்கனும்' உண்டு களித்தனர். ஆரோக்கியம் கொண்டு வாழ்வியல் பேறு கண்டனர். அதன்வழியே கந்தையா குடும்பம் அளவெட்டியில் கலங்கரை விளக்காக ஒளி கொண்டமை சிறப்பு.

**கல்வி**

அளவெட்டி சதானந்தா வித்தியாசாலையில் 1944 ஆம் ஆண்டு தொடக்கம் 1953 ஆம் ஆண்டு வரை கல்வி கற்ற போது அப்போதைய அதிபராக இருந்த ஆசிரியர் பொன்னுத்துரை நடராஜா கொண்டிருந்த இசை ஆர்வம் கண்டு மகிழ்ந்தார். அவர் கொண்டிருந்த குரல் வளத்தையும், பஞ்சபுராணங்களை ஓதும் போது மலர்ந்த இசைத்துவத்தின் கனிவையும் கேண்மையுற்று வியந்தார்.

அவரை இந்தியாவுக்கு அனுப்பி சங்கீதம் படிக்கவும் பாடவும் ஊக்கம் தந்தார். இதன் பலனாக இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் புகுமுகப் பரீட்சையில் சித்திபெற்று நான்கு வருடகாலம் சங்கீதம் பயின்றார்.

பேராசான்களான, 'எம்.எம்.தண்டபாணி தேசிகர், ரி.என்.ராஜகோபாலாச்சாரியார், ரி.கே.ரங்காச்சாரியார், ரி.என்.சிவசுப்பிரமணிய பிள்ளை, ரி.என்.சுவாமிநாதபிள்ளை, வஜ்ஜிரவேலு முதலியார்' ஆகியோரிடம் முறையாக குருசிஷ்ய பாவனையில் சங்கீதத்தை ஐயம் திரிபறக் கற்றுத்தேறினார். நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக இசை நுட்பங்களை நுகர்ந்தார். உணர்ந்துகொண்டு ஏராளமான உருப்படிகளுக்குச் சொந்தக்காரரானார். கல்பித சங்கீதம் நடராஜனை இறுக்கிப்பிடிக்க நடராஜனும் அதனை இறுகப் பற்றிப்பிடித்துக் கொண்டார். இச்சமயத்தில் ஈழமணித் திருநாடு நடராஜனை வாவென்று கூவியழைத்தது. வந்த கையோடு, அளவெட்டி கும்பழாவளையில் அரங்கேற்றம் செய்தார். 'மயில்வாகன உபாத்தியாயர், நடேசு உபாத்தியாயர், முருகேசு உபாத்தியாயர், செல்லையா உபாத்தியாயர், விஸ்வநாத உபாத்தியாயர், கந்தையா உபாத்தியாயர், நாகநாத உபாத்தியாயர், சச்சிதானந்த உபாத்தியாயர்' ஆகியோர் ஆளுமையால் கோன்மை செய்ய, இசைப்புலவர் என்.சண்முகரத்தினம் விருந்தினராக சிறந்திருக்க மூன்று மணி நேரம் அளவெட்டி இசைமழையில் நனைந்தது. அளவெட்டியில் நிகழ்ந்த முதலாவது அரங்கேற்ற நிகழ்வாக இது அமைந்தது. அளவையூர் மக்கள் ஸ்ருதிக்கு வரப்பிரசாதமாகிய தஞ்சாவூர் தம்புரா ஒன்றை இசைப்பரிசாக வழங்கி வைத்தனர்.

> இவரிடம் கல்வி பயின்ற சீடர்கள் அறுபதுபேர் வரை இசைத்துறையில் ஒளிவீசிப் பிரகா சிக்கின்றனர். இலங்கையில் கூடுதலான மாணவர்களை இசைத் துறையில் மிளிரச் செய்த பெருமகனாக மகத்துவம் புரிகிறார். இன்றும் தனது எண்பதாவது வயதிலும் சங்கீதத்தை அதனது தாற்பரியம் குன்றாது கற்பித்து வருகின்றார்.



**அளவை இசைக்கலை மன்றம்**

அநேகமான பெரியோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, இசைக் கலையை இளைய சமூகத்தவர்கள் கற்று தேர்ச்சி பெறும் வகையில் 'அளவை இசைக்கலை மன்றம்' 1962ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து பையப் பைய சங்கீதக்காற்று அளவெட்டி முழுமையுமாக வீசத் தொடங்கியது. அதன் சுவாத்தியமாக அறுபதற்கும் மேற்பட்ட மாணவர்கள் மன்றத்தில் இணைந்து கொண்டு இசை பயின்றனர். அளவெட்டி சதானந்தா வித்தியாசாலை மண்டபமும், மேசை கதிரைகளும் கேள்வி ஞானம் கொண்டு சங்கீதம் பாடுமளவுக்கு அனைவரும் ஒருமித்து ஒத்திசைவாக வாய்விட்டுப் பாடினர். இதன்வழியே குருசிஷ்ய வாலாயம் அதிகரித்தது. 'ஸரளி வரிசை (ஸ்வராவளி), ஜெண்டைவரிசை, அலங்காரம், கீதம், வர்ணம், கீர்த்தனை' என அத்தனையும் குரலோசையுள் நாத நர்த்தனம் புரிந்தன. அதற்கு உறுதுணையாய் வட இலங்கை சங்கீத சபையாரின் பரீட்சைகள் மன்ற[illegible] தையும், பெறுபேற்றையும், உ[illegible] தந்தன. செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றிய அத்தனை பேரும் விசேட சித்தி பெற்றனர். யாழ்ப்பாணத்தின் சங்கீத ஞானம் மெய்ஞானமாய் எங்கும் வியாபகம் கொண்டது. இதற்குரிய ஆத்ம பலமாய், 'சங்கீத வித்துவான் பரம் தில்லைராஜா, சங்கீத வித்துவான் ராம் குமாரசாமி, இசைப்புலவர் என். சண்முகரத்தினம், சங்கீத வித்துவான் விஜயரத்தினம் பரமேஸ்வரி, சங்கீத வித்துவான் சத்தியபாமா ராஜலிங்கம், சங்கீத பூஷணம் பாலசிங்கம், சங்கீத பூஷணம் (வால்) நடராஜா, சங்கீத பூஷணம் வேலாயுதப்பிள்ளை, சங்கீத பூஷணம் சந்திரசேகரம், சங்கீத பூஷணம் நமசிவாயம், சங்கீத பூஷணம் தங்கலட்சுமி, சங்கீத பூஷணம் திலகநாய கம்போல், சங்கீத வித்துவான் சரஸ்வதிபாக்கியராஜா, சங்கீத பூஷணம் அம்பிகை செல்லையா, இசைமணி பொன் முத்துக்குமாரு, இசைமணி வி.செல்லத்துரை, சங்கீத பூஷணம் நாகம்மா கதிர்காமர், சங்கீத பூஷணம் பூமணி இராசரத்தினம், சங்கீத பூஷணம் ஏரம்பமூர்த்தி, சங்கீதப் பேராசான் ஐயாக்கண்ணு தேசிகர்' போன்றோரின் அரவணைப்பும் கிடைத்தது. இதன்பயனாக அளவெட்டியில் பிரமாண்டமான இசைவிழா ஒன்றும் நடைபெற்றது.

**இசைவிழா**

இலங்கையில் இதுபோன்ற இசைவிழா இதுவரைகாலமும் நடைபெறவில்லை என்றே கூற வேண்டும். 1960 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற சாதனை என்றே இதனைக் குறிப்பிடலாம். வரலாற்றின் பக்கங்களில் பதிவிடலாம்.

120அடி நீளமும் 40அடி அகலமும் உடைய கமுகுப்பந்தல் ஆயிரம் ஆயிரம் கிடுகுகளால் வேயப்பட்டது. மேடை மிகவும் உயரமாக இருப்பதற்காக 8அடி உயரமான பீடம் அமைக்கப்பட்டது. பி.எஸ்.சி. மாஸ்ரரின் மகன் சுந்தரம் பெற்றிருந்த கணிய மூளையில் எழுந்த ஒலிப்பிரமாண அமைப்பாக அது அமைந்திருந்தது. கொட்டகையில் 28 கமுகுகள் பயன்படுத்தப்பட்டமை ஒலியின் பரவுநிலையை சமச்சீர் செய்தது. வெள்ளைச் சேலைகளின் அலங்கரிப்பில் எங்கும் அமைதி நிலைத்திருந்தது. தரைப்பகுதி முழுவதும் வெண்மணல் கொண்டு நிரப்பப்பட்டது. மொட்டைப் பந்தலாக அன்றி மஞ்சள் வெள்ளை சுருள்கள் இசை கேட்டு தென்றலோடு லய ஞானம் புரிந்தன. ஆம், இப்போது இந்தப் பந்தலில் இசைவிழா எப்படி நடந்திருக்கும் என்பதை கற்பனை பண்ணிப் பாருங்கள். இதுவே நடராஜா ஆசானின் மனோதர்ம சங்கீதப் பந்தலாகும்.

'லயஞான குபேர பூபதி, தவில் மேதை தட்சணாமூர்த்தி, நாதஸ்வரச் சக்கரவர்த்தி என். கே.பத்மநாதன்' உட்பட வாய்ப்பாட்டுக் கலைஞர்கள் பலர் இசைவிழாவில் பாடி அளவெட்டிக்குப் புகழ் சேர்த்தனர். இதன் மூலம் அளவெட்டி என்று சொன்னால் 'விகே' என்றும், 'விகே' என்றால் அளவெட்டி என்றும் இசைத்துவம் நிலைபெற்றுள்ளது. இற்றைவரையும் விகேயின் இசையாட்சி எல்லைகளை எவராலும் அணுக முடியவில்லை. இனிமேலும் அது சாத்தியப்படாது என்றே கூற வேண்டும். இவ்விதமாக குரலும் விரலும் சங்கமித்த இடமாக அளவெட்டி திகழ்கிறது. அதன் இலக்கணமாய் நடராஜன் இற்றைக்கு 57வருடங்களாக இசையைக் கற்பித்து வருகின்றார். 40வருடங்களுக்கும் மேலாகப் பிள்ளை [illegible] இசையால் புராணம் [illegible] பாடியும் வருகிறார்.

**மனோதர்மம்**

கல்பித சங்கீதத்தில் நன்கு பரீட்சயமான காரணத்தால், மனோதர்ம சங்கீதம் பீறிட்டு வெளிவந்த அதிசயம் விகேயிடம் நிரம்பியிருந்தது. 'காம்போதி, பைரவி, கரகரப்பிரியா, ரீதிகௌளை, சுத்தசாவேரி, சண்முகப்பிரியா, கல்யாணி, கீரவாணி, ஹம்சத்வனி, ஆரபி, பிலஹரி' இராகங்கள் விகேயின் சொத்துக்கள். இராகம் பாடுவதில் சபாஷ்களைத் தட்டிச் செல்வார். இராகம், தானம், பல்லவி பாடுவதில் வல்லமையும், வாழ்வும், வரமும் பெற்றவர். எடுத்துக் கொள்ளப்பட்ட பதத்தை லயத்தில் வின்னியாசப்படுத்தலும், விஸ்தாரம் செய்வதும், பொருள் விளங்குமாறு நிரவல் செய்வதும், கற்பனா ஸ்வரம் பாடுவதும் அவருக்கே உரித்தான கைவந்த வாலாயம். தண்டபாணி தேசிகரது இசைப் பாணி போல விகே இசைப்பாணி களைகட்டும். குரலைக் கனதியாகவும், காத்திரமாகவும், சபை அறிந்தும் கொடுப்பது கச்சேரி தர்மமாகும்.

**கடமை**

'1966 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம், 1970 ஆம் ஆண்டு தொடக்கம் 1972 ஆம் ஆண்டு வரை பாலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, 1973 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு வரை அளவெட்டி அருணோதயக் கல்லூரி, 1975 ஆம் ஆண்டு தொடக்கம் 1977 ஆம் ஆண்டு வரை மன்னார் அடம்பன் மகா வித்தியாலயம், 1977 ஆம் ஆண்டு தொடக்கம 1990 ஆம் ஆண்டு வரை அளவெட்டி அருணோதயக் கல்லூரி, 1990 ஆம் ஆண்டு தொடக்கம் சங்கீத பாட ஆசிரிய ஆலோசகர், வலிகாமம் கல்வி வலயம், 1998 ஆம் ஆண்டு ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு. 1998 ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் வருகை தரு விரிவுரையாளர்.' என வி.கே.நடராஜன் ஆசிரியரின் இசைத்துவமும் சேவையும் தனித்துவம் பெறுகிறது.

**விருது**

'சங்கீத பூஷணம், கலாபூஷணம், சிவகலா பூஷணம், தேனிசை வாரிதி, கலைஞானச் சுடர், திருவாசகக் கொண்டல், பண்ணிசை வாணர்.' என இசை விருதுகள் பல கண்டு இன்றும் இசையன்பு புரிகிறார்.

**மாணவர்கள்**

இவரிடம் கல்வி பயின்ற சீடர்கள் அறுபதுபேர் வரை இசைத்துறையில் ஒளிவீசிப் பிரகாசிக்கின்றனர். இலங்கையில்கூடுதலானமாணவர்களை இசைத்துறையில் மிளிரச் செய்த பெருமகனாக மகத்துவம் புரிகிறார். இன்றும் தனது எண்பதாவது வயதிலும் சங்கீதத்தை அதனது தாற்பரியம் குன்றாது கற்பித்து வருகின்றார். இலட்சக் கணக்காக உழைப்பவர்கள் கூடத் தம் உடம்பை நோகாமல் கொள்ளாமல் பௌத்திரமாகவும், பத்திரமாகவும் வைத்திருக்கும் நிலையில், விகே போன்ற சாதனையாளர்கள் குருவாக இருந்து இசையால்சமூக ஒளி ஊட்ட வேண்டும். நீடூழிகாலம் வாழ வேண்டும். 1998ஆம் ஆண்டு மணிவிழா நிகழ்வுகள் கும்பழா வளையில் சிறப்பாக இடம்பெற்றது. இவ்வாண்டு பவளவிழா சிறப்பாக அமையும் வகையில் மாணவ பரம்பரையினர் பூர்வாங்க ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். விகே என்ற நாமம் நூற்றாண்டு வரை வென்று நீடு வாழ்வதாக.'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MODERN City Inn

WiFi Available



Adequate Parking
Satalite TV
Beach Tour-Taxi
Internet Facility
Round Tour
Airport Drops/Picks

Comfortable Air Conditioned Rooms
with Attached Toilets and Hot & Cold Water

**Very Moderate Room Charges**



Single or Double Occupancy and Family Apartment
Wedding / Small Group Conferance All Kind of Parties

**10 minutes drive from Air Port.**
**You can contact in all Three language**

426, Main Street, Negombo.
(Opposite Cargills Food City - Behind Glitz)

For inquiries and Reservations
Contact No:- 031-2233967 / 031 2231 961 / 076 205 3302

moderncityinn@yahoo.com    moderncityinn.com

---

நீங்கள் சாதாரண தரப்பரீட்சையில் தோற்றி,

Registered with TVEC
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA

## (O/L) 5 S

பெறுபேற்றினைப் பெற்றவரா?......

மருத்துவத்துறையில் நீங்களும் ஒரு
தாதியாவதற்கான (Nurse) அரிய சந்தர்ப்பம்



Hotline : 071 71 40000 / 071 077 0770

சாதாரண தரப்பரீட்சையில் 5S பெறுபேற்றுடன் 30 வயதுக்குட்பட்ட ஆண் / பெண் அனைவரும் விண்ணப்பிக்கமுடியும்.

TVEC நிறுவனத்தினால் NVQ - 04 தர சான்றிதழ் வழங்கப்படும்.

மாதாந்தம் 25,000/- அடிப்படை சம்பளத்துடன் உறுதியான தொழில் வாய்ப்பு

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ் எங்களினால் வழங்கப்படும்**

அரச அங்கீகாரம் பெற்ற தாதிய பாடசாலை

### அய்வா தாதியர் பாடசாலை

323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம்
071 8722350, 071 8722352.

36/1, 38/1 இரண்டாம் குறுக்கு வீதி, வவுனியா
071 8722351

---



**Study Engineering with The Leader**

Apply now for New Intake 2018

EQAA

# HND IN CIVIL ENGINEERING

Entry Qualifications
- G.C.E. A/L or G.C.E. O/L + Engineering Foundation

Duration • 2 Years

TVEC REGISTERED

A/L's → HND → BSc → MSc    DEGREE COMPLETION IN SRI LANKA

# BSc (Hons) CIVIL & STRUCTURAL ENGINEERING

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

UGC RECOGNIZED

ice

Entry Qualifications
- Higher National Diploma in Quantity Surveying or any other accepted programs.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence
Gold Award Winner
Education Service Sector

---



**World Class British Degree @ICBT Jaffna Campus**

Apply now for New Intake 2018

EQAA
Institutionally Accredited
(European Quality Assurance Agency)

# ICBT HND QUANTITY SURVEYING

TVEC REGISTERED

» Entry Qualifications
- G.C.E. A/L or Equivalent
- Certificate in related field

» Duration: 2 Years

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/ Recreation Area/Modern Lecture Halls.
- Easy Payment schemes

BIRMINGHAM CITY University

Accredited by RICS

# BSc (Hons) Quantity Surveying

» Entry Qualifications
- HND or Equivalent Qualifications Acceptable to the University
- Progression Routes for NDT, NDES(Civil), C&G (Civil), NCT(Civil / QS)

UGC RECOGNIZED

» Duration: 1 Year

Week End Part Time Classes

0770 746 553 | 021 477 7888

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைக்குண்டு

பருத்தித்துறை வீதியில் சகல வசதிகள் கொண்ட ரெஸ்ரோறண்ட் வாடகைக்குண்டு.

**077 486 0517, 077 595 2245**

## நாகபூஷணி திருமணசேவை

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

**021 222 9306, 077 138 7596**

## கார் விற்பனைக்கு

**KK XXXX** என்ற இலக்கமுடைய சில்வர் கலர் மாருதி சுசுகி கார் விற்பனைக்குண்டு.

**077 876 8621, 077 029 2528**

## வாடகைக்கு

**கடை** வாடகைக்கு உண்டு.

**76, அம்மன் வீதி, கந்தர்மடம்.**

**077 888 7102**

## பணியாளர் தேவை

**கொக்குவிலில் அமைந்துள்ள களஞ்சியசாலைக்கு பொருள்கள் ஏற்றி இறக்க** பணியாளர் தேவை. சம்பளம் 20,000 முதல் 25,000 வரை. பேசித் தீர்மானிக்கலாம்.

**076 133 1358**

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி, கணேசபுரம் கிராமத்தில் அமைந்துள்ள 1/4 ஏக்கர் காணித்துண்டு விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 746 6598,**
**0041 766401962** (Viber)
**0033 6451 46150** (Viber)

## விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் உள்ள ஆர்.வி.ஜீ மெடிக்கலுக்கு சிறுவர்களுக்கான ஆடைகள், அழகுசாதனப் பொருள்கள், பலசரக்குப் பொருள் விற்பனையில் அனுபவமுள்ள A/L சித்தியடைந்த ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-**

**ஆர்.வி.ஜீ.மருந்தகம்**
**504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 2129**

## வேலையாள்கள் தேவை

**சுஜித் என்டப்பிறைசஸ்**

**நிறுவனத்தில் பணிபுரிய விற்பனை முகவர்கள்**

(Sales ref. - ஆண், பெண்) சம்பளம் (50,000 - 75,000 வரை பெறலாம்)

**பட்டா வாகனங்களும்** தேவை. (50,000 - 100,000 வரை பெறலாம்)

**077 904 1258, 021 227 0586**

## காணவில்லை



வள்ளிபுனம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவை சேர்ந்த **அப்புத்துரை பத்மநாதன்** என்பவரை காணவில்லை. இவரை கண்டுபிடித்து தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தயவுசெய்து அறியத்தரவும்.
உங்கள் மகன் குட்டி

**TP : 072 9106007**
Viber: 0044 7846016298, 00447440049588

"வேலுண்டு வினை தீர்க்க! மயிலுண்டு பயமில்லை!!"

# நல்லூர் கந்தன் வருடாந்த மஹோற்சவம் - 2018

## யாழ்ப்பாணம்



வா! வா! சண்முகா! வடிவேல் முருகா!

**தேரேறி தமிழருக்கு வாழ்வு தர வா! வா!**

" மரகத மயில் மேல் வருமுருகா!
அரகர சிவசிவ ஆறுமுகா வா!
சரவண பவனே சண்முகனே!
வரம் தர வா வா என்முன்னே
அரவணிசிவனருள் பாலா பரவரமுரள பரமதயாளா "

(சிவயோக சுவாமிகள்)

**அன்புடையீர்,**

**யாழ்நகரில் புகழ் பூத்த நல்லூர் கந்தனின் வருடாந்த உற்சவம் நாளை (16.08.2018) வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.**

கடந்த காலங்களைப் போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள **மூத்ததம்பி அன்னதான மடத்தில்** முருகன் அருள்வேண்டி வரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 26 நாள்களும் அன்னதானமும் விடியற் காலையில் கோப்பியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**இந்த அன்னதானத்தில் பங்குபற்றிய அடியார்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். தங்கள் பேருதவிக்கு நல்லைக் கந்தன் அருள்புரிவானாக.**

**அன்னதான மண்டபத்திற்கு உதவி செய்ய விரும்புபவர்கள் பொருள்களாக தந்து உதவலாம்.**

**மூத்ததம்பி அன்னதான மடம்,**
**139, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**தொ.பே. :** 075 673 1327

**செ.சோமஸ்கந்தன்**

# விசேட ஆடித் தள்ளுபடி !!!



மாதாந்த தவணை கட்டணம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)


**Discount**
**5,000/= to 50,000/=**
**Until 30th Aug 2018**

We Accepted
MasterCard VISA

**நீர் சுத்திகரிப்புத்துறையில் முன்னோடியான வரையறுக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) யால் அங்கீகரிக்கப்பட்டு யாழ் மண்ணை தளமாக கொண்டு இயங்கி வரும் ஒரே நிறுவனமாகும்.**

SATISFACTION 100% GUARANTEE

**எல்லா அளவிலுமான RO நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்**



உங்கள் கிணற்று நீரில் அடங்கியுள்ள கல்சியம், மக்னீசியம், மாசுக்கள், கிருமிகளை முற்றாக அழித்து பருகுவதற்கேற்ப 100% சுத்தமான நீரை வீட்டிலேயே பெற்றுக் கொள்ளலாம்.



**Water Softener System**

**Tiles, Bathroom Fittings, Washing Machine** களில் படியும் கல்சியம், மக்னீசியப் படிவுகளிலிருந்து நிரந்தர விடுதலை!

**கழிவுநீர் சுத்திகரிப்பு**



வீடு, தொழிற்சாலை, உல்லாச விடுதிகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையை நிறுவியும் பராமரித்தும் தரப்படும்.



**நீச்சல் தடாக வடிவமைப்பு**



உங்கள் தேவைக்கேற்ற வகையில் வடிவமைத்து, நிறுவி, பராமரித்துத் தரப்படும்.

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.341, K.K.S Road, Jaffna. | 021 222 6888, 021 [illegible] 7567 | 077 362 6230

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SINGER

யாழ் FIESTA

ஓர் அற்புதமான அனுபவம்

ஆகஸ்ட்

17 18 19

காலை 09.30 - இரவு 09.00 வரை

நுழைவு இலவசம்


யாழ்ப்பாணம்

வீரசிங்கம் மண்டபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 26.07.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு

## அமரர் குமாரசாமி துரைராஜா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (15.08.2018) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் 17.08.2018 வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

கெனடி வீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்
077 881 5059, 077 310 5131

---

## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி ஐயம்பிள்ளை



தோற்றம் 07.05.1932 இறப்பு 13.08.2018

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி ஐயம்பிள்ளை கடந்த (13.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்புச் சகோதரியும் அன்னலட்சுமி, ஜெயலட்சுமி, கமலாதேவி, சண்முகவேல், பத்மாவதி, சிவநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் மல்லாகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: ஐ.சண்முகவேல் (மகன்)
077 078 5270

மில் லேன், மல்லாகம்.

---

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

---

# வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்
## பதவி வெற்றிடங்கள்

**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் கீழ்குறிப்பிடப்படும் பதவிகளுக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**A. பதவி : வெளிக்களஅலுவலர் 209/12 (வெற்றிடம் ஒன்று)**

**1. சம்பள அளவுத்திட்டம் : 14,590 – 130X10 – 140X10 – 17,290**

**2. தகைமைகள்:-**

I. கூட்டுறவுப் பணியாளர் 13ஆவது சம்பளத்திட்ட வெளிக்கள உத்தியோகத்தர் தொடர்புபட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

II. அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றில் தொடர்புபட்ட துறையிலான கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தலும் அத்தகைய துறையில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

III. இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**B. பதவி : வெளிக்கள அலுவலர் 209/11 (வெற்றிடம் ஒன்று)**

**1. சம்பள அளவுத்திட்டம் : 14,945 – 145X10 – 160X10 – 17,955**

**2. தகைமைகள்**

I. கூட்டுறவுப் பணியாளர் 12ஆவது சம்பளத்திட்ட வெளிக்கள உத்தியோகத்தர் தொடர்புபட்ட பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 13 ஆவது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் நான்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

II. அங்கீகரிக்கப்பட் பயிற்சி நிறுவனமொன்றில் தொடர்புபட்ட துறையிலான கற்கை நெறியினை பூர்த்தி செய்திருத்தலும் அத்தகைய துறையில் மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு பதவிகளுக்குமான பொதுவான நியந்தனைகள்**

- **வயதெல்லை** : 18 – 40 இற்கு உட்பட்டிருத்தல்
- **விண்ணப்பமுடிவு திகதி** : 05.09.2018
- **குறிப்பு**

1) விண்ணப்பிக்கும் பதவி, முழுப்பெயர், நிரந்தரமுகவரி, தற்போதைய வசிப்பிட முகவரி, அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, வயது, பால், கல்வித்தகைமை, விசேட தகைமை, அனுபவம், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் அத்தாட்சி ஆகிய சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தினை தாங்களே தயாரித்து, **பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக "செயலாளர், வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.44, குட்செட் வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2) ஏதேனும் கூட்டுறவுச் சங்கத்தில் கடமையாற்றும் விண்ணப்பதாரியாயின் அச்சங்கத்தின் ஊடாக **தலைவர், பொதுமுகாமையாளர் / செயலாளர்** ஆகியோர் உறுதிப்படுத்தி சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்படிவத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

3) ஒரு விண்ணப்பதாரி ஒரு பதவிக்கோ அல்லது இரண்டு பதவிகளுக்கோ விண்ணப்பிக்கலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாயின் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்பட வேண்டும்.


4) வவுனியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**திகதி – 15.08.2018**
**செயலாளர்,**
**வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு**
**கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இல.44, குட்செட் வீதி,வவுனியா.** T.P NO: 024-222 2341

---

## மரண அறிவித்தல்

### இராசேந்திரம் அருள்நேசன் (தவம்)



பிறப்பு 27.08.1959 இறப்பு 09.08.2018

யாழ்.வசாவிளானைப் பிறப்பிடமாகவும், தவசிகுளம், மிருசுவிலையும், இத்தாலி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் அருள்நேசன் (தவம்) 09.08.2018 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யோசேப் - மாக்கிரேற் தம்பதிகளின் பேரனும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - சொர்ணம்மா தம்பதிகளின் அருமை மகனும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை - சிசிலியா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சதாநாயகி (பூபதி) மற்றும் சுசிலா ஆகியோரின் அன்புக் கணவரும், லான்சி, லூக்கா, மிலேனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ராஜா (சந்திரன் - இத்தாலி), ரவி (இத்தாலி), ஜெயா (சுவிஸ்), வேவி (கனடா), தயா (இத்தாலி), துரை (பிரான்ஸ்), சீலன் (ராசா - இத்தாலி), மேரி (இத்தாலி), நேசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு அண்ணாவும், சூரியா (பிரான்ஸ்), சோதி (பிரான்ஸ்), புவி (இத்தாலி), பவா (இலங்கை), டொறிஸ் (இத்தாலி), றெஜி (இத்தாலி), அருந்தவராஜா (சுவிஸ்), மனோகரன் (கனடா), அன்ரில்லா (இத்தாலி), பிரியா (பிரான்ஸ்), நிலானி (இத்தாலி), கமல் (இத்தாலி), கிருபாகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரிபெல்லா, ஜெனுசியா, ஜெனோஷன், அனோஜா, அபி, அன்ஜெய், சேர்ஜேர், சொபியா, செலேனா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், றெனோஜினி, றொஜன், அனுஜன், அனிஸ்ரீனா, அனோஜினி, றெபேக்கா, ரெனிஸ்ரன், றோசலியா, றெசியோன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் பார்வைக்காக இன்று (15.08.2018) புதன்கிழமை Highland Funeral Home இல் மாலை 5 மணி முதல் 9 மணிவரை வைக்கப்பட்டு நாளை (16.08.2018) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் Highland Memory Gardens இல் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறிப்பு :- அன்னாரின் அடக்க நாளாகிய நாளை (16.08.2018) வியாழக்கிழமை தவசிகுளம் காணிக்கை அன்னை ஆலயத்தில் மாலை 5 மணிக்கு விசேட திருப்பலி நடைபெறும்.**

தகவல்
இ.ஜெயநேசன் (தயா)

தவசிகுளம்,
மிருசுவில்.

(CS/18991)(11.17)

ராஜா (இத்தாலி) - 3289 242 544, வேவி (கனடா) - 0016 477 045 018,
ரவி (இத்தாலி) - 333 229 1690, தயா (இலங்கை) - 076 408 5047,
துரை (பிரான்ஸ்) - 0033 7818 82945, ராசா (இத்தாலி) - 380 436 1739

---

## மரண அறிவித்தல்



### நடராசா பிரசன்னா

பேராலை, பளையைப் பிறப்பிடமாகவும் பிராமனோடை, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா பிரசன்னா கடந்த (12.08.2018) ஞாயிற்றுக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னப்பிள்ளை தம்பதிகள் மற்றும் சிவகுரு - சின்னம்மா தம்பதிகளின் பேரனும் நடராசா - நிர்மலாதேவி தம்பதிகளின் பாசமிகு மகனும் இளங்கீரன் (லண்டன்), பிரபாகரன் (ஜேர்மனி), பிரகலாதன், பிரவீன் (பால்சபை, திருநெல்வேலி) ஆகியோரின் சகோதரனும் வேலுப்பிள்ளை, கந்தசாமி, கமலாதேவி, சறோஜினிதேவி (பிரான்ஸ்), மல்லிகாதேவி ஆகியோரின் பெறாமகனும் சரஸ்வதிப்பிள்ளை, தங்கம்மா, இராஜேஸ்வரி (அதிபர் - கிளி / இயக்கச்சி அ.த.க. பாடசாலை), நந்தகுமார் (நந்தன்), சிவகுமார், உதயகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் மருமகனும் பகிர்தா, வேணிகா ஆகியோரின் மைத்துனரும் இந்திஸ், அபிசா ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2018) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**மனோன்மணி செல்வரத்தினம்**




பிறப்பு 25.11.1939 — இறப்பு 23.07.2017

இன்று (15.08.2018) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு தாழ்வுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
நாதன் பவனம்,
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில்.

(CS/19026)(11,17)

## மரண அறிவித்தல்



பிறப்பு 17 .04 1947 — இறப்பு 10 08 2018

**செபதிஸ்ற் ஏணஸ்ற்**
(ஓய்வுபெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செபதிஸ்ற் ஏணஸ்ற் கடந்த (10.08.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செபதிஸ்ற் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மார்க்கு - ஞானம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்றவர்களான காணிக்கை, பாலிஸ் ஆகியோரின் சகோதரனும் பற்றீசியாவின் அன்புக் கணவரும் ரெனிசியா, சதிஸ்பின், பிரசன்னா, யோண்சியா, தினேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாஸ்கரன், சுரேகா, சிபிலா, நிலோயன் ஆகியோரின் மாமனாரும் சரணியா, எடினா, தபித்தா, நிஹாரிகா, அறிஸ்ரோ, அறோன்ஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.08.2018) புதன்கிழமை பி.ப. 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (16.08.2018) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் யாழ். புனித மரியன்னை பேராலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பற்றிமா வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்: குடும்பத்தினர்.
077 748 8155

(CS 19031/15/17)

## அற்றோனி தத்துவ பத்திரத்தை இரத்துச் செய்தல்

***இத்தால் சகலருமறிய !***

சாவகச்சேரி வடக்கு, தற்போது கனடாவில் வசிக்கும் செல்லத்தம்பி பாலேந்திரகுமாரும் பாலேந்திரகுமார் அஜந்தினியும் ஆகிய நாங்கள் எங்களுக்குச் சொந்தமான சாவகச்சேரி வடக்கு, மடத்தடியில் அமைந்துள்ள "கரடிக்குழி" எனும் ஆதனத்தை பராமரிக்கவும் அது தொடர்பிலான சில கருமங்களை ஆற்றுவதற்குமாக மட்டுப்படுத்தப்பட்ட அற்றோனி தத்துவத்தை சாவகச்சேரி வடக்கு, மடத்தடியைச் சேர்ந்த நடராசா இராசேந்திரம் என்பவருக்கு வழங்கியிருந்தோம் என்றும் தற்போது குறித்த அற்றோனி தத்துவப்பத்திரம் எம்மால் இரத்துச் செய்யப்படுகின்றதென்றும் அறிவிக்கின்றோம்.

குறித்த நடராசா இராசேந்திரம் என்பவர் இனிமேல் அற்றோனி தத்துவக்காரர் அல்ல என்றும் எம் சார்பாக அவரால் செய்யப்படும் எக்கருமங்களுக்கும் நாம் பொறுப்பாளி அல்ல என்றும் வெளிப்படுத்தி அறிவித்தல் விடுக்கின்றோம்.

**செல்லத்தம்பி பாலேந்திரகுமார்,**
**பாலேந்திரகுமார் அஜந்தினி**

(CS 19020/15/17)

## வடமாகாண ரீதியிலான மாபெரும் சைக்கிள் ஓட்டப் போட்டி - 2018



**காந்தி சன சமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு**

நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியிலான சைக்கிள் ஓட்டப் போட்டி எதிர்வரும் **25.08.2018 சனிக்கிழமை காலை 8** மணியளவில் நடைபெற இருப்பதால் பங்கு கொள்ள விரும்பும் போட்டியாளர்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குறிப்பு:- **18.08.2018 நடைபெறவிருந்த போட்டியானது தவிர்க்க முடியாத காரணத்தால் 25.08.2018 ஆக திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது)**

அம்மன் கோயில் வீதி,
நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு,
கைதடி.

காந்தி ச.ச.நிலையம்
சிறி - 077 369 3507
றஞ்சித் - 076 387 9598
தலைவர் - 077 332 5945

(CS/19023)(11,17)

## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## VACANCY

Applications are hereby invited from qualified persons to teach:

SCIENCE (English Medium) - Grade 6 - 11
SCIENCE (Tamil Medium) - Grade 6 - 11
ENGINEERING TECHNOLOGY - A/L

Please send your complete CV including the contact details of two non-related referees by post on or before 24th August 2018 to the address below. Only shortlisted candidates will be called for interview

in 7529.tif

**The Principal**
**St.John's College Jaffna**

## வேலையாள்கள் தேவை

கடையில் வேலை செய்யக்கூடிய அனுபவம் உள்ள வேலையாள்கள் (ஆண்கள்) தேவை.
(வயது 18 - 28) - 076 196 6600

## கடை வாடகைக்கு

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் (TCT இற்கு முன்பாக ) விசாலமாக அமைந்துள்ள கடை வாடகைக்கு விடப்படும். பலசரக்கு வியாபாரத்திற்கும், உணவகங்களுக்கும் ஏற்றது.

**தொடர்பு - 077 928 9269**

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலி பழைய AGA Office க்கு முன்னால் 6 பரப்பு 8 1/2 குளி காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு - 077 1909 253**



## நல்லூர்க் கந்தன் திருமண சேவை

எல்லா மதம், எல்லா இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் செய்து கொடுக்கப்படும். **நல்லூர் 25 நாள் திருவிழாவை முன்னிட்டு பதிவுகள் குறைந்த கட்டணத்தில்.**

இல.303,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வி.ஜெயந்தி
T.P: 077 9733 183
021 227 1468

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் போடியார்
## முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி (பங்கர் அப்பா)

(ocean wealth - சமுத்திர திரவியம் உரிமையாளரும், பிரபல வர்த்தகரும்)

மலர்வு 22.11.1942 — உதிர்வு 06.08.2008

**திதி - 15.08.2018**

எங்கள் குடும்பவிளக்கே - நீவீர் இப்புவியில் இறுதிவரை
நற்பெயரோடு வாழ்ந்தீர் ! பாசம் நேசம் முயற்சி உயர்ச்சி பரிவு
பணி கண்டிப்பு கவனிப்பு என்பவற்றின் அர்த்தத்தை நின்
செயற்பாட்டில் காட்டி நின்றீர் எங்களுக்கும் போதித்தீர்
வழிகாட்டியாய் எம்மையும் அதன்வழி ஒழுகச்செய்தீர்! அந்தோ !
ஆண்டுகள் பத்து ஓடியது நின் ஆன்மா உமைப்பிரிந்து
பிரியாது மறையாது நின் நினைவு எம்மைவிட்டு!




உங்கள் நினைவுகளுடன்

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுட்டெரிக்கிறது ஐரோப்பா



ஐரோப்பியநாடுகள் அண்மைக் காலமாக மிகக் கடும் வெயிலுக்கு ஆட்கொள்ளப்பட்டுள்ளன. ஸ்பெயினின் தலைநகர் மட்ரிட், போர்த்துக்கலின் தலைநகர்லிஸ்பன், ஜேர்மனின் தலைநகர் பெர்லின், சுவிற்சர்லாந்தின் தலைநகர் சூரிச், பிரிட்டனின் தலைநகர் லண்டன், மன்செஸ்டன், ஒட்டாவா உள்ளிட்ட பல்வேறு நகர்களில் வெப்பநிலையானது 40 டிகிரிசெல்சியசை அண்மையில் பதிவுசெய்திருந்தன. ஐரோப்பாவில் உள்ள பற்பல சிறுசிறு குளங்கள், குட்டைகள் நீரில்லாமல் வரண்டு போயுள்ளன. ஐரோப்பாவில் நிலவும் வறட்சியை துல்லியமாகப் புடம்போட்டுகாட்டுகிறது பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ். (ம)

# தந்தை பெற்ற கடனுக்காக சிறுமியை பழிதீர்த்த வர்த்தகர்

## குடத்தணையில் கொடூரம்

வடமராட்சி, ஒக. 15

வர்த்தக நிலையம் ஒன்றின் உரிமையாளரால் 11 வயதுச் சிறுமி கடுமையாகத் தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் நேற்று மாலை பருத்தித்துறை குடத்தணை கரையூர்ப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் மனோரஞ்சன் தமிழினி என்ற சிறுமி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பத்தலைவர் ஒருவர் பருத்தித்துறை குடத்தணை கரையூர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் உணவுப்பண்டங்களைக் கடனுக்குப் பெற்றுள்ளார். அவர் அந்தக் கடனை அடைக்காதிருந்ததையிட்டு கோபமடைந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கடனாக உணவுப் பண்டங்களைப் பெற்றவருடைய மகளைத் தாக்கினார் என்று தெரிவிக்கப்படுகிறது. சிறுமி மாலை நேர வகுப்புக்குச்சென்று வீடுதிரும்பியபோது தாக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (21,160)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யிடம் கோரியிருந்தார். அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. அரச துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகளை மாற்றியமைப்பது தொடர்பில் 2 மாதங்களுக்குள் சம்பள ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (ற-5)

## பருத்தித்துறைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது. ஒல்லாந்தர் காலத்துக் கோட்டையின் இடிபாடுகளும் அங்கு காணப்படுகின்றன.

அவற்றை மையப்படுத்தி, தொல்லியல் சின்னங்களை மீட்பதற்கான ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ற-5,8)

## வாடிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்ற பொலிஸார் 13 பேரிடம் வாக்கு மூலம் பெற்றனர். விசாரணைகளைத் தொடர்ந்து வாடி எரிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நீர்கொழும்பு, சிலாபம் பகுதிகளைச்சேர்ந்த மூன்று பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மீன்வாடி எரிக்கப்பட்ட பகுதிகளை முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அதிகாரி மற்றும் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். (ற-5,ரி3)

(தொடர்புடைய செய்திகள் 2ஆம் பக்கம்)

## திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது. இராணுவப் புலனாய்வாளர்கள் என்று தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட சிவில் உடையில் வந்த சிலரே அச்சுறுத்தலை விடுத்துள்ள னர் என்று கூறப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியை சீரமைக்கும் பணியை யாழ்ப்பாணம் மாநகரசபை முன்னெடுக்கவுள்ளது. அதற்கு முன்னதாக, தூபியைச் சுற்றி பாதுகாப்பு வேலி அமைக்கும் பணி கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் மாநகர சபையின் பணியாளர்களே இந்தப் பணியில் ஈடுபட்டனர்.

பாதுகாப்புவேலிக்கு சிமெந்திடும் பணி இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது சிவில் உடையில் சிலர் வந்துள்ளனர். தம்மை இராணுவப் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்தியுள்ளனர். அங்கு பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களிடம், 'வெளியில் இருக்க விருப்பம் இல்லையா?', 'ஏன் பருப்பும் சோறும் சாப்பிட ஆசையாக உள்ளதா?' என்று கேட்டு அச்சுறுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பணியாளர்கள் தொடர்ந்து அந்தப் பணியை முன்னெடுக்க மறுத்து இடைநடுவில் கைவிட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் தற்காலிகமாக வெளியே இருந்து பணியாளர்களைக் கொடுப்பனவுக்கு அமர்த்தி பணி நிறைவு செய்யப்பட்டுள்ளது. (ற-5,105)


ராசி அதிர்ஷ்டம்
திகதி 14.08.2018 வெற்றி வாரம் 2347 வர்ணம் நீலம்
விருட்சிகம் வெற்றி இலக்கங்கள் 09 38 47 58
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 5,754,560/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 842
சீட்டிழுப்பு திகதி 2018.08.13 திங்கட்கிழமை
K 15 29 30 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 48,429,636/-

நியத ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 693 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2018.08.14
வெற்றி இலக்கங்கள் 22 30 41 53 B
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 13,746,092/-

கோடிபதி ஷனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம் 328
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 90,701,888/-
சீட்டிழுப்பு திகதி 2018.08.14
R 05 13 29 39

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம் : 342 வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி 2018.08.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 59,940,560/-
வெற்றி இலக்கங்கள் 30 37 62 63 J

தொழிற்பயிற்சியுடன் கூடிய வேலை வாய்ப்பு
எமது EDM.lk நிறுவனமானது வடமாகாணத்தில் புதிதாக கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. புதிய கிளைகளுக்கான 23 இற்கு மேற்பட்ட அலுவலக ரீதியான பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளது.
பின்வரும் பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.
விற்பனை பிரதிநிதி மேற்பார்வையாளர்
உதவி முகாமையாளர் முகாமையாளர் அலுவலகர்
தகைமைகள் : 10, O/L, A/L மேற்தகைமையுடையோர்
சம்பளம் : 15 000 - 45 000 திறமைக்கேற்ப பெற்றுக்கொள்ள முடியும்.
குறிப்பு - தங்குமிட வசதி, உணவு வசதிகள் உண்டு.
தொடர்பு - 076 212 1409, 077 298 6763

புலமைப் பரிசில் பரீட்சை 2019 - தரம் 05 வினா விடை
தமிழ் குறுஞ்செய்தி சேவை (TSMS)
ஒரு நாளுக்கு ஒரு ரூபா
ஒரு வாரத்தில் 2700 + பெற்றோர் பதிவு செய்துள்ளார்கள்
தினமும் பல வினாக்கள், விடைகள்
அடிப்படையில் இருந்து வினாக்கள்
5000 இற்கு அதிகமான வினாக்கள்
அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
இச் சேவையை பெற்றுக்கொள்வதற்கு
Dialog, Airtel, Hutch வாடிக்கையாளர்கள்
REG < இடைவெளி > SCT என Type செய்து 77007 இற்கு SMS அனுப்புங்கள்
REG SCT 77007
மாதாந்தம் ரூபா 30 - வரி, விருப்பமான வேளையில் இச் சேவையை நிறுத்திக்கொள்ளலாம்

CANADA , USA study & work visa
Minimum Qualification O/L
VISA Consulting and Online form filling
Bank Balance 100%
Swiss, France
Royal Visa Consultants & Education Service
No.128, Jampettah Street, Colombo 13
Hasini : 077 791 1649
Office : 0113 020 892


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நீர்வேலி வாள்வெட்டு: இருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஓக.15

நீர்வேலிப் பிள்ளையார் கோவிலில் வைத்து இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 3 மாதங்களின் பின்னர் இரண்டு பேர் நேற்றுக் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்வேலி செம்பாட்டுப் பிள்ளையார் கோவிலில் வைத்து மே மாதம் 7ஆம் திகதி இளைஞர்கள் இருவர் மீது வாள்வெட்டு நடத்தப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த அப்புத்துரை கிரிசன் (வயது- 23) என்ற இளைஞர் கழுத்திலும், கிரிகேசன் (வயது -23) என்ற இளைஞர் காலிலும் படுகாயமடைந்தனர். அவர்களின் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிளை கோவில் கிணற்றுக்குள் வாள்வெட்டுக் கும்பல் தூக்கி வீசியதுடன் ஒருவரின் கைபேசியை கோவிலுக்கு முன்பாக உள்ள தேங்காய் உடைக்கும் கல்லில் வீசி உடைத்தது.

பொலிஸாரல் தேடப்பட்டுவரும் ஆவா குழுவின் முக்கியஸ்தர் வினோத் உள்ளிட்ட 8 பேர் கொண்ட கும்பலே இந்த வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது எனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இணுவிலைச் சேர்ந்த இளைஞர்கள் மூவர் கோப்பாய் பொலிஸாரால் - கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட போதும், சாட்சிகள் அடையாளம் காட்டவில்லை. மேலும் இருவர் பின்னர் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் ஐவரும் ஒரு மாத காலத்துக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் வேறு இருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். 24 மற்றும் 28 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் வி.இராமகமலன் முன்னிலையில்நேற்றுமாலைமுற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்களை வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார். (ற-37)

## நல்லூர்...

யேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை 5 மணிக்கு மஞ்சத் திருவிழாவும், எதிர்வரும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குக் கார்த்திகைத் திருவிழாவும், 03ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு சூரியோற்சவமும், 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கைலாச வாகனத் திருவிழாவும், 5ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு வேல்விமானத் திருவிழாவும், 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குச் சம்பரத் திருவிழாவும், 8ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழாவும், 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு பூங்காவனத் திருவிழாவும், 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு வைரவர் உற்சவமும் நடைபெறவுள்ளது. (ற-124)

## நாயாற்றில்...

ணம் மேற்கொள்ளும்போது சகல தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடி இந்த விவகாரத்துக்குத் தீர்வு காணப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுக்காலை அமைச்சரவைக் கூடடம் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் முல்லைத்தீவு நிலமை தொடர்பில் அமைச்சர் மனோகணேசன் சுட்டிக்காட்டினார்.

முரண்பாடு நீடித்தால் நல்லிணக்கம் என்பது நிலைக்கப் போவதில்லை. மீனவர்களுக்கிடையிலான பிரச்சினை தேசிய இனப்பிரச்சினையாக மாறிவிடும். இந்த விடயத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என்று அமைச்சர் மனோ குறிப்பிட்டார்.

எதிர்வரும் 22ஆம் திகதி மயிலிட்டித்துறை முகத்தை மறுசீரமைப்புச் செய்யும் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைப்பதற்காக யாழ்ப்பாணத்துக்குச் செல்லவுள்ளதாகவும், இதன்போது அனைத்துத் தரப்பினரையும் அழைத்துக் கலந்துரையாடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்றும் அரச தலைவர் அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக மீன்பிடித்துறை அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சாவும் நல்லிணக்க அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் மனோ கணேசனும் முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, கடந்த 12ஆம் திகதி மீன்பிடி அமைச்சர் முல்லைத்தீவுக்குப் பயணம் மேற்கொண்டு மீனவர்களுடன் சந்திப்பு நடத்தியிருந்தார். (5,31)

## உந்துருளி...

ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை முடித்துக் கொண்டு நடந்து வீடு திரும்பிய போது சிதம்பரபுரம் பகுதியிலிருந்து வந்த உந்துருளி மோதியதில் அவர் தலையில் பலத்த காயமடைந்தார். சிதம்பரபுரம் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உந்துருளியில் பயணித்த இரண்டு பெண்கள் காயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பில் விசாரணைகளை சிதம்பரபுரம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ற-5,110)

## மடுத்...

பிள்ளை தெரிவித்தார்.

கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருநாள் திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கவுள்ளனர்.

மடு திருத்தலத்தின் திருவிழா கடந்த 6ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று வந்தன. நேற்றுச் செவ்வாய்க்கிழமை மாலை வேஸ்பர் ஆராதனை ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இன்று காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்பக் கொடுக்கப்படவுள்ளது. திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனி இடம்பெற்று திருச் சொரூப ஆசீர்வாதத்துடன் திருவிழா நிறைவடையவுள்ளது.

மடுத் திருத்தலத்துக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 6 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வந்துள்ளனர்.

**பேருந்துச் சேவை**

மன்னார் நகரிலிருந்து அரச மற்றும் தனியார் பேருந்துகள் நேற்றுக் காலை தொடக்கம் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளன. மன்னாரிலிருந்து ஏ-14 முதன்மை வீதி வழியாகப் பயணித்து உயிலங்குளம், முருங்கன், மடுச்சந்தி ஊடாக மடுத் திருத்தலத்தைச் சென்றடைந்தன.

தென் பகுதிகளில் இருந்து தொடருந்து ஊடாக மடுத்திருத்தலத்துக்குச் செல்லும் பக்தர்களின் நலன் கருதி மடு தொடருந்து நிலையத்திலிருந்து திருத்தலம் வரையில் சிறப்பு பேருந்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருவிழாவுக்கான பாதுகாப்புக் கடமைகளில் சுமார் 350 தொடக்கம் 500பேர் வரையிலான பொலிஸார் கடமைகளில் ஈடுபடுவார்கள் என்று மடு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மடவல தெரிவித்தார். (ற-5,56)

## குடாநாட்டில்...

நிலையில் திடீரென மழை பெய்துள்ளது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடும் காற்றாலும், மழையாலும் சேதங்கள் ஏற்பட்டன என்று அறிய முடிகின்றது.

நேற்று மாலை தீவகப் பகுதியில் மழை ஆரம்பித்தது. மாலை 5 மணிக்குப் பின்னர் அது குடாநாடெங்கும் பரவியது. கடும் காற்றுடன் பெய்த மழையால் பல இடங்களில் மின் தடை ஏற்பட்டது. பின்னர் மின் வழங்கல் சீரானது. இரவு 8 மணிக்குப் பின்னர் மழை தணிந்தது.

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்னாலையில் நான்கு வீடுகள் கடும்காற்றால் பகுதியளவில் சேதடைந்தன. தேசிய வீடமைப்பு அதிகார சபையால் பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 65 வீட்டுத் திட்டத்தில் உள்ள வீடுகளே சேதமடைந்தன. கடும் காற்றுடன் கொட்டித் தீர்த்த மழையில் வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன.

குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பலத்த காற்றுடன் மழை கொட்டித் தீர்த்துள்ளது. பல இடங்களில் சேதங்கள் என்று அறிய முடிந்தபோதும், அவை தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற முடியவில்லை. யாழ்ப்பாணம் இடர் முகாமைத்துவப் பிரிவுக்கு நேற்று இரவு வரை சேதங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21,173)

## தடயங்கள்...

என்று தெரியவருகின்றது. இந்த அகழ்வுப் பணிகளில் சீனப் பணியாளர்களும் ஈடுபட்டுள்ளனர். (ற-5,105)

## கிளிநொச்சிக்கு...

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் உள்ள தும்பினி விகாரைக்குச் சென்று அங்கு விகாராதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடினார். கிளிநொச்சியில் தங்கியுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, மடுத் திருவிழாவுக்கு இன்று காலை செல்லவுள்ளார்.

இதேவேளை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் மடுத் திருத்தலத்துக்கு கடந்த 11 நாள்களுக்கு முன்னர் பயணம் செய்திருந்தார். (ற-5,214)

## கீத் நொயார்...

வெளிப்படுத்திக்கொள்வதற்காக முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் விசாரணைகளை முன்னெடுக்க குற்றப் புலனாய்வுப் பிரிவு தீர்மானித்துள்ளது. எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாக வேண்டும் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அறிவித்தல் அனுப்பியுள்ளது.

குற்றப் புலனய்வுப் பிரிவினர் முன்னெடுக்கும் கீத் நொயார் விவகாரம் குறித்த விசாரணைகளில் ஒரு அங்கமாக கடந்த மே மாதம் 22ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் பெற்றுக்கொண்ட வாக்குமூலத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை உறுதி செய்துகொள்ளவும் மேலதிக தகவல்களை வெளிப்படுத்தவும் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (5,71)

## நேவி...

5 மாணவர்கள் உள்ளிட்ட 11பேர் கரணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்திலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கொலை வழக்கில் இடம்பெறும் மேன் முறையீட்டு விசாரணைகளிலும் திறந்த பிடியானை கோட்டை நீதிமன்றினாலும், மேன் முறையீட்டு நீதிமன்றாலும் பிறப்பிக்கப்பட் டுள்ள நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

**பொய்ப் பெயர்**

நாட்டிலிருந்து மலேசியாவுக்கு சட்டவிரோதமாகத் தப்பிச் சென்று, நாட்டுக்கு மீண்டும் வந்து தனது அடையாளங்களை மாற்றி தொம்பே பகுதியில் தென்னந்தோப்பொன்றின் பாதுகாப்பு அதிகாரியாக, பொல்வத்த கால்லகே அசோக்க எனும் பெயரில் உலாவந்த நிலையில், கொழும்பு லோட்டஸ் வீதியில் வைத்து குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா தலைமையிலான குழுவினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் கன்ஞ்சனா நெரஞ்சனா சில்வா முன்னிலையில் நேற்று சந்தேகநபர் முற்படுத்தப்பட்டு 48மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**எப்படிச் சிக்கினார்?**

குற்றப் புலனாய்வுப் பிரிவின் சமூக கொள்ளை தொடர்பிலான விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா தலைமையிலான குழுவினர், கீத் நொயார் விவகாரத்தில் வாக்குமூலம் பெறும் நோக்கில் சி.ஐ.டி.யில் முன்னிலையாகுமாறு முன்னாள் அரச தலைவர் மகிந்தவுக்கு அறிவித்தல் கையளிக்க நேற்றுமுன்தினம் சென்றுள்ளனர். கோட்டை லோட்டஸ் வீதி ஊடாக அவர்கள் பயணித்த வாகனம் செல்லும் போது வாகன நெரிசலில் சிக்கி மெதுவாக நகர்ந்துள்ளது. தனக்கு மிகப் பரிச்சயமான முகச்சாயலை ஒத்த ஒருவர் தமது வாகனத்தைக் கடந்து செல்வதை பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா அவதானித்துள்ளார். உடனடியாக வாகனத்தில் இருந்து இறங்கி அந்த நபரைப் பின் தொடர்ந்துள்ளார். தொலைத்தொடர்புநிலையத்துக்குள் சென்று தனது அலைபேசி இலக்கத்துக்கான கட்டணத்தை மீள் நிரப்ப முற்பட்ட போது சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்த மறு கணமே அவர் தேடப்படும் பிரதான சந்தேக நபர் ஹெட்டி ஆராய்ச்சி என்று தெரியவந்துள்ளது.

**மாறுவேடம்**

தாடி, தலை மயிர் என்பவற்றை வளர்த்து அடையாளம் தெரியாதவாறு இருந்துள்ள அவரிடம் இருந்து பொல்வத்த கால்லகே அசோக்க எனும் பெயரிலான தேசிய அடையாள அட்டையையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முன்னெடுத்த மேலதிக விசாரணைகளில் சந்தேக நபர், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி இலங்கையிலிருந்து தப்பி மலேசியாவுக்குச் சென்றுள்ளார். அவ்வாறு செல்வதற்கும் பொல்வத்த கால்லகே அசோக்க எனும் பெயரையே பயன்படுத்தியுள்ளமையும் தெரியவந்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் மலேசியாவில் இருந்து இலங்கை வந்துள்ள அவர், தொம்பே பகுதியில் உள்ள தென்னத் தோப்பில் பாதுகாப்பு ஊழியராகக் கடமையாற்றியுள்ளார். கொழும்புக்கு நேற்றுமுன்தினம் யாரையோ சந்திக்க வந்த போது இவ்வாறு சிக்கிக்கொண்டுள்ளார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கூறுகின்றனர். (5,71)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா வென்றது

யாழ்ப்பாணம், ஒக. 15

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கெருடாவில் அண்ணா அணி போராடி வெற்றிபெற்றது.

சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கெருடாவில் அண்ணா விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலாவது செற்றை 24:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. எனினும் அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:20, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வென்றது அண்ணா அணி. (ம-23)

## தென்றல் அணி போராடி வெற்றி

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி தென்றல் அணி வெற்றி பெற்றது. சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதய சூரியன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 6:5 என்ற கோல் கணக்கில் தென்றல் அணி வெற்றிபெற்றது. (ம-23)

## விரைவில் கடற்கரை கரப்பந்து

வடமாகாண கரப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் அமரர் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக கடற்கரை கரப்பந்தாட்டத் தொடரை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்றவுள்ள கழகங்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23,422)



### தேசியமட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்

# யாழ்ப்பாணம் மத்தி இரண்டாவது இடம்



யாழ்ப்பாணம், ஒக. 15

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச்சங்கம் நடத்திய வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி சம்பியனானது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் உள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது கால் பாதியை 12:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தனதாக்கியது யாழ்ப்பா ணம் மத்திய கல்லூரி அணி. இரண்டாவது கால்பாதி 20:02 என்ற புள்ளிகளின் அடிப்ப டையில் சென். மைக்கலின்வசமானது. ஆக, முதல் பாதியின் முடிவில் 27:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது சென். மைக்கல் கல்லூரி அணி.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி அணி 20:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. நான்காம்; கால்பாதியும் 19:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சென். மைக்கலிடம் சென்றது. முடிவில் 66:38 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது மட்டக்களப்பு சென். மைக்கல். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு இரண்டாவது இடம் கிடைத்தது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக. 15

**சிறிமுருகன் கழக கரப்பந்துத் தொடர்**

மல்லாகம் சிறிமுருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாயன் மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ். மாவட்ட தாச்சித் தொடர்**

யாழ்;ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் தாச்சித் தொடரை நடத்தி வருகிறது. சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று சில ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. இதன்படி மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சித்திவிநாயகர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலிட்டி வானவில் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவற்குழி சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## மயிலிட்டி கண்ணகி வென்றது

யாழ்ப்பாணம், ஒக. 15

யாழ்ப்பாணம் தாச்சிச் சங்கம் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி அணி வெற்றி பெற்றது.

சாந்தை விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து குளத்தடி கண்ணகி அணி மோதியது. 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மயிலிட்டி கண்ணகி அணி வெற்றிபெற்றது. (ம-23)

# யாழ். இந்துவுக்கு தேசியத்தில் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக. 15

இலங்கைப் பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மூன்றாவது இடத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் அமைந்துள்ள கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதியது.

நான்கு கால்பாதிகளைக் கொண்ட ஆட்டத்தின் முதலாவது கால்பாதியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 14:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது. இரண்டாவது கால் பாதியை 10:07 என்ற புள்ளிகளின் அடிப்படையில், தனதாக்கியது யாழ்ப்பாணம் இந்து. முதல் பாதியின் முடிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 24:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகித்தது.

மூன்றாவது கால்பாதியும் 16:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துவிடம் சென்றது. நான்காம் கால்பாதியை 09:08 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது சென். பற்றிக்ஸ். முடிவில் 48:38 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி. (ம-23)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையை இழக்காதீர்கள்

## ரசிகர்களை நோக்கி கோக்லி உருக்கம்

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸால் தோல்வியடைந்த நிலையிலும் தம்மீதான நம்பிக்கையை இழக்க வேண்டாம் என்று இந்திய அணியின் தலைவர் கோக்லி ரசிகர்களை நோக்கிக் கேட்டுக் கொண்டார்.

லோட்ஸில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி அனைத்துத் துறைகளிலும் தோல்வியடைந்தது. இங்கிலாந்து அணியை எதிர்த்துப் போராடக்கூட கோக்லியால் முடியவில்லை. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் கோக்லி.

"சில நேரங்களில் நாங்கள் வெற்றி பெறுகிறோம். சில நேரங்களில் தோல்வியின் மூலம் பாடங்களைக் கற்றுக்கொள்கிறோம். இங்கிலாந்துக்கு எதிராகத் தொடர்ந்து 2 ஆட்டங்களில் அடைந்த தோல்வியால், எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை ரசிகர்கள் இழந்துவிடக் கூடாது. நாங்கள் உங்கள் மீதான நம்பிக்கையை ஒரு போதும் இழக்கமாட்டோம் என்று உறுதியளிக்கிறேன். தொடர்ந்து நாங்கள் முன்னேறுவோம், மேல்நோக்கி உயர்வோம்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார்.

முன்னதாக இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையில், "நாங்கள் தவறுகளை ஏற்கிறோம், அதிலிருந்து கற்றுக்கொள்கிறோம். இந்த அனுபவங்களை வைத்துக் கொண்டு, அடுத்தமுறை இதேபோன்ற தவறுகள் நிகழாவகையில் செயல்படுவோம்' என உறுதியளிக்கிறேன்" என்று வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். (ம)






# றொயேர்ஸ் தொடரில் சிமோனா சம்பியன்



றொயேர்ஸ் கிண்ணத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப்.

பன்னாட்டுப் பகிரங்கத் தொடருக்கு அடுத்த படியாக உள்ள முக்கிய தொடர்களில் ஒன்றுதான் கனடாவில் நடைபெற்று வரும் றொயேர்ஸ் கிண்ணத் தொடர். இந்தத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சிமோனா கேலப்பை எதிர்த்து அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ் மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை கடும் போராட்டத்துக்கு மத்தியில் 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கேலப். இரண்டாவது செற்றை 3:6 என்ற அடிப்படையில் அவர் இழந்தார். இதனால் மூன்றாவதும் இறுதியானதுமான செற்றில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுக் கிண்ணம் வென்றார சிமோனா கேலப்.

இந்த ஆண்டில் சிமோனா கேலப் வென்ற மூன்றாவது கிண்ணம் இதுவாகும். ஒட்டுமொத்தமாக இதுவரை அவர் 18 கிண்ணங்களைக் கைப்பற்றியுள்ளார்.

இந்த வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவித்த கேலப், "உண்மையிலேயே இந்த ஆட்டத்தில் நான் சோர்வடைந்து விட்டேன். இந்த வாரம் மிகவும் கடினமாக இருந்தது. இதுபோன்ற ஆட்டங்களில் ஒவ்வொரு ஆட்டத்துக்கும் இடையே போதிய இடைவெளி தேவையானதாகும்.

ஸ்ரீபன்ஸுக்கு எதிராக ஒவ்வொரு முறை விளையாடும் போதும் எனது ஆட்டத்திறன் மேம்படுகிறது. என்னைப் பொறுத்தமட்டில் இது சிறந்த விடயமாகும். ஸ்ரீபன்ஸ் மனரீதியாக வலுப்பெற்று இருக்கிறார். அவர் வலுவான போட்டியாளர்" என்றார். (ம)

## கேலப் முதலிடம்

பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனத்தின் பெண்கள் ஒற்றையர் பிரிவு தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளார் ருமேனிய வீராங்களை சிமோனா கேலப்.

றொயேர்ஸ் கிண்ணத் தொடர் முடிந்ததை அடுத்து தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடம் பிடித்தார் ருமேனிய வீராங்கனை சிமோனா கேலப். அவர் 8 ஆயிரத்து 61 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

டென்மார்க் வீராங்கனை வோஸ்னியாக்கி 6 ஆயிரத்து 135 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், அமெரிக்க வீராங்கனை ஸ்ரீபன்ஸ் 5 ஆயிரத்து 727 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும், ஜேர்மனிய வீராங்கனை கெர்பர் 5 ஆயிரத்து 255 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பிரான்ஸ் வீராங்கனை கிரேசியா 4 ஆயிரத்து 680 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே கிவித்தோவா, ஸ்வெட்டலினா, பிளிஸ்கோவா, முகுருசா, ஜூலியா ஆகியோர் உள்ளனர். (ம)

## எட்ட முடியாத உயரத்தில் ரபேல் நடால்



பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனத்தின் தரப்படுத்தலில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் முதலிடத்தில் உள்ளார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.

றொயேர்ஸ் கிண்ணம் முடிந்ததுடன் பன்னாட்டு ரென்னிஸ் சம்மேளனம் தனது தரப்படுத்தலைப் புதுப்பித்துள்ளது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இமாலய புள்ளிகளின் வித்தியாசத்தில் முதலிடத்தில் உள்ளார் நடால்.

10 ஆயிரத்து 220 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார் நடால். சுவிற்சர்லாந்து வீரர் பெடரர் 6 ஆயிரத்து 480 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார். ஆர்ஜென்ரீனா வீரர் பொட்ரோ 5 ஆயிரத்து 410 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். ஜேர்மனிய வீரர் அலெக்ஸ்சான்டர் 4 ஆயிரத்து 885 புள்ளிகளுடன் நான்காவது இடத்திலும், பல்கேரிய வீரர் டிமிட்ரோவ் 4 ஆயிரத்து 700 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்திலும் உள்ளனர்.

ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் அன்டர்சன், சிலிச், தியம், இஸ்னர், ஜோகோவிக் ஆகியோர் உள்ளனர். (ம)

# விராட் கோக்லி, ரவிசாஸ்திரிக்கு எதிராக பி.சி.சி.ஐ தொடுக்கிறது கேள்விக் கணை

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி படுதோல்வியடைந்ததை அடுத்து அணித் தலைவர் கோக்லி, தலைமைப் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோருக்கு எதிராக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கேள்விக் கணைகளை தொடுக்கவுள்ளது.

இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக ஐந்து ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதலாவது ஆட்டத்தில் 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி போராடித் தோல்வியடைந்தது. இதனால் அந்த அணியின் மீது பெரியளவில் விமர்சனம் எதுவும் எழவில்லை. ஆனால் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 159 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி தோல்வியடைந்தது. இதனால் கடும் விமர்சனத்துக்கு உள்ளகியுள்ளது அந்த அணி.

அதிலும் குறிப்பாக கோக்லியின் அணித் தெரிவின் மீது கடும் விமர்சனம் வைக்கப்பட்டுள்ளது. அணியின் இந்த மோசமான தோல்விக்கு அணித் தெரிவு முக்கிய காரணம் என்றும் அதற்குரிய பொறுப்பை கோக்லி ஏற்க வேண்டும் என்றும் அழுத்தங்கள் குவிந்தன.

குறிப்பாக, இலக்குக் காப்பாளர் டினேஸ் கார்த்திக்குக்குப் பதிலாக பன்ட், ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய்க்குப் பதிலாக தவான், சுழல்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவுக்குப் பதிலாக வேகப்பந்து வீச்சாளர் உமேஸ் யாதவ் அணிக்குள் இடம்பிடித்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. அதாவது இந்திய அணி துடுப்பாட்ட வரிசையின்படி தவான், லோகேஸ் ராகுல், புஜாரா, கோக்லி, ரகானே, பாண்டியா, அஸ்வின், பன்ட், உமேஸ் யாதவ், இசாந் சர்மா, சமி என்றவாறாக அணி அமைந்திருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. இதை கோக்லியும் ஏற்றுள்ளார். இதையடுத்தே கோக்லி, அணித் தெரிவில் கவனமான அளவு தலையீட்டைச் செலுத்தும் பயிற்சியாளர் ரவி சாஸ்திரி ஆகியோருக்கு எதிராகக் கேள்விக் கணைகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தொடுக்கவுள்ளது. இதன்படி கோக்லி இன்னிங்ஸ் தோல்விக்கு முழுமையான விளக்கம் மூன்றாவது டெஸ்டுக்கு முன்னர் வழங்க வேண்டி ஏற்படலாம். (ம)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமாகாண G.C.E.(O/L) க.பொ.த.(சா/த) மாணவர்களுக்காக கொழும்பு அருள் கல்வி வட்டத்தினரால் நடத்தப்படும் முற்றிலுமான இலவசக் கருத்தரங்கு

### நேரசூசிகை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 14.08.2018 செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு மண்டபம் (மத்திய பஸ் நிலையம் அருகில்) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 15.08.2018 புதன் | கற்சிலைமடு அரசினர் கலவன் பாடசாலை (அ.த.க) | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 16.08.2018 வியாழன் | மன்னார் நகர சபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |
| 17.08.2018 வெள்ளி | வவுனியா நகரசபை மண்டபம் | காலை 8.00 - பி.ப. 3.00 |

- நூல்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- அனைத்துப் பாடமும் அடங்கிய Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்
- கடந்த கால வினாவிடைக் கொத்து இலவசமாக வழங்கப்படும்.

அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்

**குறிப்பு:- அனைத்து மாணவர்களும் (இருபாலாரும்) கண்டிப்பாக பாடசாலை சீருடையில் வருகை தர வேண்டும்**

**இலவசக் கருத்தரங்கின் முழு அனுசரணையாளர்**
**சட்டத்தரணி வே.தேவசேனாதிபதி LLB**
**தொ.இல. 077 113 3400, 011 232 7524**

மேலும் மேம்படுத்தப்பட்ட
JH Herbals
கொஸ்கந்தவல
# ஜீவக வாத தைலம்®
- முதுகு வலி
- முழங்கால் வலி
- ஆர்த்தரைட்டிஸ்
- மூட்டு வலி
- தசைப்பிடிப்பு
- நரம்புசார் வலிகள்

ஆசிய ஒருத்தங்களுக்கு நிரந்தர சுகமளிக்கும்!
நாடுபூராகவும் சகல விற்பனை நிலையங்கள் மற்றும் பார்மசிகளில்...
**Jeewaka Herbal Products (Pvt) Ltd**
**0777 322 574**

**விரைவு பொதிகள் சேவை**
விசேட விலை குறைப்பு
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி-700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

0768226240
**V2 TRAVELS**

## மரண அறிவித்தல்
# சுப்பிரமணியம் பாலசிங்கம்



யாழ்ப்பாணம் முடமாவடியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் பண்டாரக் குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பாலசிங்கம் கடந்த (13.08.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற திலகவதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான கனகசபை நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் சண்முகலிங்கம், பரமேஸ்வரி, சறோஜினிதேவி, கனகராசா மற்றும் காலஞ்சென்றவர்களான தருமராசா, பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச்சகோதரரும் சகுந்தலா, இராசதுரை, பத்மலோஜினி, பராசக்தி காலஞ்சென்ற கனகசபை ஆகியோரின் அன்புமைத்துனரும் தயாபரன் (ஜேர்மனி), சிவபரன் (ஜேர்மனி), பிரியதர்சினி (ஆசிரியை, யா / கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலை), ஸ்ரீபரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜிதா (ஜேர்மனி), கிரிதரன் ஆகியோரின் அன்புமாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.08.2018) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7/9, பண்டாரக்குளஒழுங்கை,**
**கோவில் வீதி, நல்லூர்.**
**யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**தயாபரன் (மகன்),**
**பிரியதர்சினி கிரிதரன் (மகள்)**
**077 123 3035**

**ES Printers**
**357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
021 492 7471, 021 492 7472 esprintersjaffna@gmail.com

VISA

# உங்கள் மொத்த பில்லில் 10% கழிவு

## அனைத்து Visa டெபிட் மற்றும் கிரடிட் கார்ட்களுக்கு

**ரூ.2,500 க்கு மேற்பட்ட பில்களுக்கு**
**2018 ஆகஸ்ட் 15 மற்றும் 16**
**(புதன் மற்றும் வியாழன்)**
**பி.ப. 6.00 – பி.ப. 8.00**



- சலுகைக்கான அதிகபட்ச பில் பெறுமதி ரூ.10,000/-
- உள்நாட்டில் வெளியிடப்பட்ட Visa கார்ட்களுக்கு மட்டுமே கழிவு வழங்கப்படும்.
- மதுபானம், புகையிலை உற்பத்திகள் மற்றும் பரிசு வவுச்சர்கள் இச்சலுகையில் அடங்காது.
- விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

Cargills SINCE 1844

Cargills food city
வீடு செல்லும் போது

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org